HISTORY OF TAMIL POETS

PART-I

Vidwan

N. KANAKARAJIER

E. M. GOPALAKRISHNA KONE

MADURA :: :: MADRAS

Rights Reserved] [Price Re. 1.

தமிழ்ப் பல்கலைக்கழக
31 ஆக 1982
தஞ்சாவூர்-613001

தமிழ்ப் புலவர் வரலாறு

(முதற் பகுதி)

தஞ்சாவூர்-613001

"வித்துவான்"

நா. கனகராஜையர்

இயற்றியது.

பிரசுர கர்த்தர்:

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர்,

மதுரை :: :: மதராஸ்.

பதிப்புரிமை] 1936. [விலை ரூபா. 1.

31 ஜூலை 1982
தஞ்சாவூர்-613001

பொருளடக்கம்.

பொருள்		பக்கம்.
1.	அகத்தியர்	1
2.	தொல்காப்பியர்	13
3.	ஔவையார்	22
4.	கபிலர்	40
5.	பரணர்	59
6.	நக்கீரர்	77
7.	அரிசில் கிழார்	107
8.	ஆவூர் மூலங்கிழார்	128

7743

முகவுரை.

தமிழ்ப் புலவர் பலர். அவர் செய்தருளிய செய்யுட்களும் எண்ணிறந்தன. அவர்தம் வரலாறுகளைத் தொகுத்துரைக்கும் உரைநடை நூல்கள் மிகச்சில. சிறுவர்க்கு உதவுமாறு எழுந்த இவ்வுரை நடை நூல் தமிழ்ப்புலவருள் முன்னவராகிய சங்கப்புலவர் வரலாற்றைத் தெரிவிப்பதாம். அவரும் நூற்றுக் கணக்கான வரே. ஆயினும், அவருள் மிகப்பயின்ற சிலர் வரலாறு அவர்தம் செய்யுட்கள் மூலம் ஆராய்ந்து இங்கு எழுதப்படுகிறது.

சங்கப் புலவர் வரலாறு கூறும் முதற் பகுதி முற்பிரிவென்றும் பிற்பிரிவென்றும் இரண்டாகப் பிரிக்கப் பட்டது புத்தக வுருவம் கைக்கடக்கமாய் இருத்தற் பொருட்டேயன்றி, வேறு கருத்தாலன்று. காலத்தால் முன்பின் நிலை அறிதலும் தெளிதலும் இயலாது அநேகமாய் ஒரு காலத்தினராய் இருக்கும் புலவர் இருபத்தைவர் வரலாறு முற்பிரிவும் பிற்பிரிவுமாகி இம்முதற் பகுதியிற் கூறப்படும்.

செய்யுட்களை ஆராய்தலும், அவற்றுள் அடங்கியிருக்கும் சரித்திரங்களை இன்னவைஇன்னின்னசெய்தியின் பகுதிய வென உறுதி செய்தலும் எளிதின் இயல்வனவல்லவென்பதை அம்முயற்சித்துறையிற் பயின்ற அறிஞரே அறிவர். பெயர் மாத்திரையாய் இங்ஙனிலே

அறியப்படும் புலவர் பலர். அவருட் சிலர் வரலாறேனும் ஒரு தொடைப்பட அமைந்து மாணவர்க்கு உதவத்தக்க சிறிய புத்தக உருவம் பெறுதல் நன்று என அறிவுடையார் மதிப்பர். அன்ன பெரியாரது ஆசியை எதிர் நோக்கியே இச்சிறு புத்தகத் தொகுதி உலக அரங்கினுள் நுழைகின்றது.

சங்கச் செய்யுட்கள் அனைத்தும் அச்சு வாகனம் ஏறப் பெறுதிருந்த காலமும் சில்லாண்டுகட்கு முன்னதேயாகும். இந்நாளிலோ, இலக்கணமும் இலக்கியமும் ஆகிய சங்கப் பனுவல்கள் பலவும் அறிஞர் கையில் அகப்பட்ட வளவில் உயிர் பெற்று வெளி வந்து உலவுகின்றன. அவ்வரும்பெறன் மணிகளின் உதவி யின்றி இத்தகைய் சிறுபுத்தகங்கள் எழுதற்கு இடமில்லையென்பது வெளிப்படை.

பிறரது பாராட்டும், பொருள் வருவாயும், அதிகார வருக்கத்தினர் ஆதரவும் பெரிதும் பெறுதற்கியலாத இத்துறையிலே முயன்று எட்டுத்தொகை நூல்களிலே நான்கை வெளியிட்டுத் தமிழ் அணங்குக்கு உவப்பாகிய திருப்பணி புரிந்த மகா மகோபாத்தியாயர் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களுக்கும், பிற தொகைகளைப் பதிப்பித்த ஸேது ஸம்ஸ்தான வித்துவான் ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார் அவர்களுக்கும், பின்னத்தூர் ஸ்ரீ அ. நாராயணசாமி ஐயரவர்கட்கும், திருமாளிகைச் சௌரிப்பெருமாள் அரங்கனார்க்கும், ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களுக்கும் பிறர்க்கும்இப்புலவர் வரலாறு எழுதத் துணிந்த சிறியேனது மனமார்ந்த வணக்கத்தோடு கூடிய நன்றியுரைகள் உரியனவாம். இப்

பெரியார் செய்த பணித்திறம் இல்லையென்னில், இந் நாளிற் பண்டிதர் பாவலர் நாவலர் முதலிய பட்டதாரி கள் தலையெடுக்க வழியுண்டாகுமோ?

தமிழெனும் அமுதத்தைச் சங்கத்திலே வைத்து அளியேற்குப் புகட்டிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்க் கும் அங்குள்ள ஆன்றமைந்த புலவர்கட்கும் எனது வணக்கமும் நன்றியும் உரிய முறையால் இங்கு அளிக் கப்படுகின்றன. அன்னவர் ஏற்றி விட்ட விளக்கன்றோ இன்று எனது மனத்தகத்தும் மனையகத்தும் ஒளி செய்துகொண்டிருப்பது!

இச்சிறு முயற்சியை யேற்றுக் கொள்ள வுவந்த தமிழ்த் தெய்வத்துக்கும் தமிழ்த்தொண்டர்க்கும் என் வணக்கங்கள் உரியன. இதனை அச்சிட வேற்றுக்கொண்ட மதுரைநகர்ப் புத்தகவியாபாரி ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோனார் அவர்களுக்கும் ஒப்பு நோக்கிப் பிழையற அச்சிடவுதவிய எனது அன்பர், பண்டிதர் ஸ்ரீமான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை யவர்களுக் கும் என்னை இம்முயற்சியில் ஊக்கிய அன்பர் பிறர்க்கும் எனது மனமார்ந்த நன்றியுரை கூறுகின்றேன்.

வாழிய பைந்தமிழ் வாழிய மெய்ம்மறை
வாழிய வுண்மை வழியறங்கள்—வாழியரோ
தெய்வத் தமிழ்ப்புலமை தேயம் பரவிடுமா
செய்யும் தமிழ்ப்புலவர் சீர்.

நா. கனகராஜையர்

உரிமையுரை

செந்தமிழை யோர்ந்துணருஞ் சிந்தையுள்ள மாணவர்க்
செந்தமிழின் நாவலர் தம் சீரளக்கும்—இந்தவுரை [குச்
நூலுரிமை யாக நுவன்றேன்யான் இஃதவர்க்கோர்
மாலுரிமை யென்றே மதித்து.

ஆக்கியோன்..

தமிழ்ப் புலவர் வரலாறு

(முதற் பகுதி)

1. அகத்தியர்

சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
டரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதும் திகழ்தரற் பொருட்டே.

தமிழ்த் தெய்வத்தின் திருப்பணி செய்யப் புகுந்தவர்களில், நாம் தற்காலம் அறிந்தவளவில் எல்லார்க்கும் முன்னிருந்தவராக மதிக்கப்படுபவர் அகத்தியர் என்பவர். அவர் தமிழ் மொழியின் மூன்று பகுதிகளாகிய இயல் இசை நாடகம் என்பனவற்றிற்குப் பெரியதோர் இலக்கணம் செய்தவர். அவ்விலக்கணம் அவர் பெயரால் பேரகத்தியம் என்று வழங்குகிறது. அவ்விலக்கணம் இக்காலத்தில் கிடைப்பதில்லை.

அகத்தியர் என்னும் அப்பெரியார் பாண்டிய நாட்டின் தென்பகுதியில் உள்ள பொதிய மலையில் வாழ்ந்தனர். அவர்க்குக் குறுமுனி, குடமுனி முதலிய பல பெயர்கள் உண்டு. அவருடைய மாணாக்கர்களுட் சிறந்

தவர் தொல்காப்பியர் என்பவர். இனி அகத்தியரைப் பற்றி வழங்கும் சில கதைகளை ஆராய்வோம்:

கிருத யுகத்தின் முடிவுக் காலத்தில், வடமேரு மலையில், தேவர் பலர் ஒன்று கூடினர். சிவபிரானுக்கும் பார்வதி தேவிக்கும் நடைபெற்ற திருமணத்தின் பொருட்டு வந்து கூடிய அப்பெருங்கூட்டத்தால் மேரு மலையோடு நிலமும் தாழ்ந்தது; தென்றிசை உயர்ந்தது. இவை இரண்டையும் சமனுற நிறுத்த வல்லவர் யாவரென இறைவர் ஆராய்ந்து, அங்குத் தரிசனத்தின் பொருட்டு வந்திருந்த அகத்தியரை அழைத்து, "ஐய, நீயே தென்றிசை சென்று நிலத்தைச் சமப்படுத்த வல்லவன். ஆதலின், ஆங்குச் செல்க," என்று அருளினர். அதுகேட்ட அகத்தியர், "பெருமானே, நான்தேவரீரது திருமணக்கோலத்தைத் தரிசிக்கும் அவா நிரம்பப் பெற்றிலேனே! என்னை இப்பொழுது தென்றிசை போக்குதல் உமது கருணைக்கழகோ?" என்று கேட்டனர். சிவபெருமான், "அகத்திய, நீ சென்றிருக்கும் இடத்தில் உனக்கு யாம் இத்திருமணக் கோலத்தைக் காட்டி அருள்வேம்," என்று திருவாய் மலர்ந்தருளினர். இவ்வாறு தெய்வவாக்குப்பெற்ற அகத்தியர், தென்திசைக்கு வந்தனர். வரும் வழியில், விந்தியமலை வழி விடா துயர்ந்திருந்தது. அதை அவர் தம் தவ மகிமையால் அடக்கி, நிலத்தில் அடங்கி யிருக்கச் செய்தனர்; பிறகு தென்னாட்டில் வந்து, பொதிய மலையில் ஆசிரமம் அமைத்து வாழ்ந்தனர்.

இவ்வாறு அவர் வாழ்ந்திருக்கையில், விருத்திராசுரன் என்பானைப் போரிற் கொல்லக் கருதிய இந்திரன்,

அவன் கடலில் ஒளிந்தது கண்டு, அகத்திய முனிவரே கடல் குடிக்க வல்லவர் என்பதைப் பிரமதேவராலறிந்து, அங்கு வந்தான். அவன் தன் எண்ணம் நிறைவேறுமாறு முனிவரைக் கடல் குடிக்கப் பிரார்த்தித்தான். அவர் அவ்வாறே கடவுளைத் தியானித்துக் கடல் நீரை ஆசமனம் செய்தனர். இந்திரனும் விருத்திராசுரனை மாய்த்துச் சென்றான். இது புராண வரலாறு.

இராமாயணத்தில் அகத்திய சம்பந்தம் உள்ளது. இராமர் தண்டகாரணியத்தில் வருகையில் அகத்தியரைச் சந்தித்தார். அவர் இராமருக்கு இறைவர் அருளிய சிறந்ததொரு வில்லும் அம்புகள் நிறைந்த அம்பறாத்தூணியும் தந்தனர். பிறகு சிறந்த வொரு வாளும் திரிபுரமெரித்த கணையும் கொடுத்து, இராமரைப் பஞ்சவடியில் வாழ்ந்திருக்கச் சொன்னார் அவ்வாறே இராமர் போய் வாழ்ந்திருந்தார்.

இனி அகத்தியரைப்பற்றி நச்சினார்க்கினியர் என்னுந் தொல்காப்பிய வுரையாசிரியர் எழுதிய கதையைக் கவனிப்போம் : அவர் கூறும் கதை அவர் சொந்த வாசகத்திலே இங்கே எழுதப்படும்.

"தேவரெல்லாம் கூடி, யாம் சேர இருத்தலின், மேருத்தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர்," என்று அவரைவேண்டிக்கொள்ள, அவரும் தென்றிசைக்கட் போகின்றவர் கங்கையாருழைச்சென்று அவர் தரக் காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர்மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார்

உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து துவராபதிப்போந்து, நிலங் கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையும் கொண்டுபோந்து, காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி, திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியரை நோக்கி, 'நீ சென்று குமரியைக் கொண்டு வருக,' எனக் கூற, அவரும், 'எம்பெருமாட்டியாரை எங்ஙனம் கொண்டு வருவல்?' என்றார்க்கு, 'முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகல நின்று, கொண்டு வருக,' என, அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக்கொண்டு போகத் தொல்காப்பியனார் கட்டளைஇறந்துசென்று, ஒரு வெதிர்ங்கோலை முறித்து நீட்ட, அது பற்றி யேறினார்; அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையும் தொல்காப்பியனாரையும் 'சுவர்க்கம் புகாப்பிர்!' எனச் சபித்தார். 'யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க, எங்களைச் சபித்தமையால், எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர்,' என அவர் அகத்தியனாரைச் சபித்தார்.''

இக்கதை நச்சினார்க்கினியர்க்கு முந்திய காலத்தவரான இளம்பூரணர் உரையில் இல்லை. புராண கதைகளிற் காவேரி கொணர்ந்ததாகச் சொல்வதும் ஒன்று. இதனைப் புத்தரும் சமணரும், ஒப்புக்கொள்வதுண்டு. அகத்தியர் சிவபிரானிடம் தமிழ் கற்றார் என்றும், சுப்பிரமணியக் கடவுளிடம் தமிழிலக்கணம் கற்றார் என்

றும் புரான கதைகள் வழங்கும். சமணர், அவலோகித முனிவரிடம் கற்றார் என்று கூறுவர். இவ்வாறு அஃமுனிவரைப்பற்றி வழங்கும் கதைகள் பல.

இக்கதைகள் எல்லாம் உண்மையே என்று நம்புவதும், முற்றும் பொய்யே என்று கூறுவதும் அறிவுடையார் செயல் ஆகா. சிறிதளவேனும் உண்மையில்லாமல் இக்கதைகள் பிறந்திருக்க வழியில்லை. இவை தற்காலம் உள்ள நிலையில் உண்மையை உணரல் எளிதன்று. ஒருவாறு ஊகித்து, 'இப்படி யிருக்கலாம்,' என்று எண்ணலாம்.

'தழற்புரை நிழற்கடவுள் தந்ததமிழ் தந்தான்', என்று கம்பர் கூறுவர். 'அகத்தியன் டயந்த செஞ்சொல் ஆரணங்கு,' என்று வரந்தருவார் கூறுவர் இவ்வாறு அகத்தியர் தமிழைப் படைத்தார் என்று கூறுவது உபசாரமே. ஏனெனில், உலகத்தில் உள்ள எத்தகைய மொழியும் ஒருவரால் இயன்றதன்று; பல ஜனங்களின் கூட்டுறவு காரணமாக அவர்களுள்ளத்தெழுந்த உணர்ச்சியை வெளிப்படுத்தும் அவசியம் நேரிட்டபோது, முதலிற் சைகையாய், பிறகு ஒலியாய், நாளேறவேற ஒழுங்குற்ற சொற்களாய், பின் வாக்கியங்களாய் அமைவதே மொழியின் பொதுவியல்பு. இதற்கு விரோதமாய்த் தமிழை ஒருவர் தந்தார் என்பது கவிகளின் உபசார மொழியே யென்று உணர வேண்டும். அகத்தியர் தமிழ் மொழிக்கு இலக்கணம் அமைத்தவரே. இலக்கணம், இலக்கியம் இன்றி அமையாது என்பது எவரும் அறிந்த உண்மை.

"இலக்கிய மின்றி யிலக்கண மின்றே;
எள்ளின் றாயின், எண்ணெயு மின்றே;
எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல,
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்."

என்னும் இச்சூத்திரம் அவர் செய்த பேரகத்தியத்தில் உள்ளதொரு சூத்திரமாக இக்காலத்தில் வழங்குகின்றது. இதன் கொள்கைப்படி ஆராய்ந்தால், அகத்தியர் இலக்கணம் இயற்றத் தொடங்குமுன் தமிழில் இலக்கியம் இருந்திருக்கவேண்டும் என்பதும், அதற்கு முன்பு இலக்கணமும் இருந்திருக்கலாம் என்பதும், மொழி தோன்றிய முதற் காலத்திலே திடீரென எல்லா அமைதியும் உண்டாக வழியில்லை யாகையால், அகத்தியர் பேரகத்தியம் என்ற பரந்த இலக்கணம் இயற்றப் புகு முன்பு தமிழ்மொழி விசேஷ வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதும் புலனாகும்.

இனி அவர் செய்த செயல்களாய்ச் சொல்லப்படும் விஷயங்களைப் பற்றி ஆராய்வோம்: அவர் காவேரி கொணர்ந்தார் என்பதும், விந்தம் அடக்கினார் என்பதும், கடல் குடித்தார் என்பதும் முக்கியமான மூன்று விஷயங்களாம். ஒரு நதியையே கமண்டலத்தில் கொண்டு வரக்கூடிய முனிவர், மலையை அடக்குவதும் கடலைக் குடிப்பதும் அரிய செயலாகா. ஆயினும், பொதுவாக நம் நாட்டில் பெரியவராய் மதிக்கப்படும் எவர்க்கும் அதிசயச் செயல் கற்பிக்கப்படுமாறு போல, அகத்தியர்க்கும் கற்பிக்கப்பட்டிருக்கும் என்றுஎண்ணி, 'இவை எவ்வாறு பிறந்திருக்கலாம்?' என்று ஆராய்ந்த

வடநாட்டுச் சரித்திராசிரியர் இராமேச சந்திர தத்தர் என்பவர், "அகத்தியர் என்ற ஓர் ஆரியர், அதுகாறும் எவராலும் கடந்து செல்லப்படாதிருந்த விந்தமலையைக் கடந்து, வடநாட்டிலிருந்து தென்னாடு அடைய ஒரு புது வழி உண்டாக்கினர். ஆகையால், இவர் விந்தம் அடக்கியதாய்க்கூறப்படுகிறார்," என்பர். இதுபோலவே கடல் குடித்ததென்பது, அந்நாள்வரை மரக்கலப் பயிற்சி இல்லாதிருந்த நாட்டில் அதனைக் கற்பித்துக் கடலை அடக்க வழி கண்ட செயலைக்குறிப்பதாம்என்று ஊகிப்பர். இனிக் காவேரி கொணர்ந்தார் என்பதும் ஜனங்களுக்கு உபயோகமாகாமல் வீணாய்ப் போய்க் கொண்டிருந்த ஒரு பெரிய நதியை அவர்க்குப் பயன் படும்படி நாடு நகரங்களுக்கு அருகில் வருமாறு தம் யோசனையாலும், பிறர் தேக சிரமத்தாலும் செய்திருப் பர் என்று ஊகிக்க இடந் தரும். இம்மாதிரியே திருவா லங்காட்டுச் செப்புப் பட்டயத்தில் கரிகாலன் காவிரி கொண்டு வந்ததாய்ச்சொல்லப்படுவதுஅவன்காவிரிக்கு ஓர் அணை கட்டிக் காவிரி நீரைத் திருப்பியதையேயாம் என்று அறியப்படுகிறது.

இனி, 'அவர் வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்தவரா? தென்னாட்டிலேயே பிறந்து வளர்ந்தவரா?' என்று எழும் கேள்விகள் ஆராயப்படும்: அகத்தியர் என்னும் பெயர், 'மலையை அடக்கியவர்,' என்று பொருள் படும் வடமொழி என்பர் பலர். 'தமிழ் நாட்டுக் குறுதியாகியவர்' என்று அச்சொல்லுக்குப் பொருள்கூறு வர் சிலர். அகத்தியம் என்பது 'அவசியம்' என்றபொரு ளில் உலக வழக்கில் உள்ளதே இவர்களுக்குஆதாரவாம்.

புராண கதைகள் பலவற்றிலும், தொல்காப்பிய வுரையிலும், அவர் வடநாட்டிலிருந்து வந்ததாகவே கூறப்படுவதால், ஆரிய நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தவராகவே யிருக்கலாம். ஆனால், வான்மீகி இராமாயணத்தில் தண்டகாரணியத்தில் இராமருக்கு வில்லும் அம்பும் கொடுத்த அகத்தியர் பொதிய மலையிலும் அதே காலத்தில் இருந்தார் என்றல் பொருந்துமா என்று கவனிக்கவேண்டும். இதனால், 'ஆரிய அகத்தியர்வேறு; தமிழ் அகத்தியர் வேறு,' என்னுங் கொள்கை தற்காலத்தில் உண்டாயிருக்கிறது. தவிரவும், கிஷ்கிந்தா காண்டத்தில், சுக்கிரீவன் சீதையைத் தேட வழி கூறும் இடத்தில், வான்மீகியார் வாக்கில் பாண்டிய நாட்டிற் கபாட புரம் என்ற ஊர்ப்பெயர் வந்துளது. இவ்வூர் இடைச்சங்கம் இருந்த நகரம் என்பது தமிழ் வரலாற்றுக் கர்ண பரம்பரைச் செய்தியாம். அகத்தியரோ, தலைச்சங்கப் புலவராவர். இதனாலும், தண்டகாரணியத்தில் இருந்த அகத்தியர் இடைச்சங்க காலத்தில் இருந்தவர் எனவும், பொதிய மலையில் இருந்தவர் தலைச் சங்கத்தில் தமிழாராய்ந்த அகத்தியர் எனவும் துணிவர்.

மூன்று சங்கங்கள் இருந்தன வென்பதும், அவை பழைய வரலாறுகளிற் குறிப்பிடுமாறு முறையே, நாலாயிரத்து நானூற்று நாற்பது வருடமும், மூவாயிரத்தெழுநூறு வருடமும், ஆயிரத்தெண்ணூற்றைம்பது வருடமும் இருந்தனவென்பதும், அகத்தியர் முதலிரண்டு சங்கங்களிலும் இருந்தார் என்பதும், இக்காலத்தில் சரித்திர ஆராய்ச்சி செய்வோர் ஒப்புக்கொள்வது

எளிதன்று. இவ்வரலாறுகள் கர்ண பரம்பரையாய் வந்தவையே யாகையால், உள்ளது உள்ளபடியே ஒப்புக்கொள்வது சுலப மன்று.

ஆகையால், கபாடபுரம் என்ற ஒரு நகர்ப்பெயரை வான்மீகியார் வாக்கில் உள்ள கவாடம் என்பதோடு ஒட்டி, அகத்தியரை இருவர் ஆக்குவதற்குள்ள ஆதாரம் விசேஷ பலமுடைய சரித்திரம் என்று கூறக் கூடாமையால், இராமேசசந்திர தத்தர் கூறுவதுபோல, அகத்தியர் வடநாட்டிலிருந்து தென்னடு வந்து குடி புகுந்த ஒரு பெரியார் என்றும், அவர் தமிழ்க்குத் தம்மால் இயன்ற இலக்கணப் பணி புரிந்தார் என்றும், அவரே செந்தமிழ்ப் பரமாசாரியர் என்றும் கூறுவோம். அவர் காலம் ஆறுயிர வருஷங்களுக்கு முன்னதாக இருக்கலாம் என்று பலர் கருதுவர்.

தொல்காப்பியர்க்கும் அகத்தியர்க்கும் இடையில் நிகழ்ந்ததாக நச்சினர்க்கினியர் கூறும் மனஸ்தாபத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்: தற்காலத்தில் நாம் பண்டைய நூல் என்று மிகவும் பாராட்டத்தக்க பெரும் புதையலாயுள்ள தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியர், தம் ஆசிரியர் இட்ட கட்டளைப்படி அவர் மனைவியாராகிய உலோபா முத்திரையாரை அழைத்து வரும்போது, வையையாறு அவ்வம்மையாரை இழுத்துச் செல்ல நேர்ந்த அபாயகாலத்தில், தம் தாயார்எனத் தாம் கருதும் குரு பத்தினியாரின் உயிரைக் காக்கும் பொருட்டு ஒரு மூங்கிற்கோலை நீட்டிய துகுற்றமாகுமா? உத்தமபத்தினியாராகிய அவ்வம்மையார் கடல்குடித்த குறுமுனிவரின் மனைவியாராய் இருக்கையில், வையை

என்ன செய்ய இயலும்? அப்படியே வையை முரண்டாலும், அவர்தம் காயகர் பாதங்களைத் தியானித்துக்கரை சேர இயலாதோ? முன்னாகப் பின்னாக நாற்கோல்நீளம் அகன்றுவரச் சொல்லிய அகத்தியர்க்கு இவ்வாறு அசந்தர்ப்பம் நிகழ்ந்தால் என்ன செய்வதுஎன்பது தோன்றிரோதோ? தனியே உலோபா முத்திரையாரைப் பிறந்த மனையகத்திலிருந்து அகத்தியனிடம் அழைத்து வர அனுமதி பெற்ற தொல்காப்பியர், உண்மையிலேயே உள்ளத் தூறவு பெறுதவரா யிருப்பாரா? அவருள்ளத்தில் அழுக்கிருப்பது அறிந்தால், அகத்தியர் இவ்வரும்பணிக்கு அவரை அனுப்பி யிருப்பாரா? முழுவதும் நம்பியனுப்பியவர் ஒரு மூங்கிற்கோலைக் கொடுத்து ஆற்றிலோடிய தம் மனைவியாரைக் காப்பாற்றிய ஜீவகாருணிய நைங்கரியத்துக்காகக் கோபிப்பாரா? அப்படியே அவர் கோபித்துச் சபித்தாலும், எதிர் மொழி கூறிச் சபிப்பது தொல்காப்பியர் பெருந்தகைமைக்குப் பொருந்துமா? சாபந்தான் என்ன? 'சுவர்க்கம் புகாப்பிர்,' என்பதுதானே! தம்மை அறிந்த மகான்களுக்குச் சுவர்க்கம் புகுதலும் பெருமையாய்த் தோன்றுதே! தொல்காப்பியரும் அகத்தியரும் அவர் பத்தினியாரும் சுவர்க்கபதவியினும்சிறந்த பதவிக்குத் தகுதியுடையாரா யிருக்கவும்,இவ்வாறு ஒரு பொருளற்ற சாபத்தை ஒருவர்க்கொருவர்கூறிக்கொள்வரோ? இளம்பூரணர்காலத்தில் இல்லாமற் பின்னே எழுந்த இக்கதை மேற்கூறிய பல காரணங்களால் பொய்யேயா யிருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம்.

இவ்வாறு வழங்கும் கதைகள் பல என்று முன்பே கூறினேம். அகத்தியர் இயற்றியதாக ஜோதிட சாத்திரங்களும் வைத்திய நூல்களும் சில உள்ளன என்பர். அவையெல்லாம் உண்மையான அகத்தியர் செயலோ, அல்லவோ என்பது இறைவருக்கே தெரியும். இது நிற்க.

முதற் சங்கப் புலவராயிருந்த அகத்தியர் இடைச் சங்கத்திலும் இருந்தார் என்பது தற்கால உண்மை யாராய்ச்சியாளர்க்குப் பொருந்தாது. மூன்று சங்கங்கள் இருந்தனவோ என்பதே சந்தேகத்துக்கு வர, இம்மாதிரி வரலாறுகளே காரணம். இவ்வரலாற்றின் படி அகத்தியர் குறைந்தது எண்ணாயிர வருடம் உயிரோடிருந்திருக்க வேண்டும். இன்னும் பொதிய மலையில் அவர் தவம் செய்துகொண்டிருக்கிறார் என்று நம்புவோர் பலர் உளராகையால், இந்த எண்ணாயிர வருடம் அவர் வாழ்வது அருமையாகாது.

ஆனால், நம்முடைய உண்மைக் கூற்றை அயலவர் ஏற்றுக்கொள்ளும்படி செய்வதே அதனை உறுதிப் படுத்த வழியாம். நாமே சொல்லி மகிழ்வதிற் பெரும் பயன் இல்லை. அயலவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமாயின், தமிழ்ப் புலவர் தலைவராகிய அகத்தியர்க்கு வயது ஓர் எல்லைக்குள் அடங்க வேண்டும். அவ்வாறு அடங்குமாயின், தலைச்சங்கம் என்ற ஒன்று இருந்ததோ என்ற கேள்வியே கேட்கவேண்டிவரும். தொல்காப்பியர்க்கு அகத்தியர் ஆசிரியராயிருந்தது மெய்யாகில், இருவரும் ஒரு காலத்தவராய் இருக்கவேண்டும். தொல்காப்பியர் பாணினீய வியாகரணத்துக்கு முந்திய

ஐந்திர வியாகரணம் பயின்றவராகையால், இவ்விருவரும் பாணினி முனிவர்க்கு முந்தியவர்களே யாவார்கள். பாணினியார் காலம் வடமொழி வாணர்களால் ஒருவாறு வரையறுக்கப்பட்டு வருவதால், அகத்தியரும் தொல்காப்பியரும் நம்மைப் போலவே நம் நாட்டில் முன் காலத்தில் வாழ்ந்திருந்த பெரியோர்கள் என்று அறிந்தமைவோம். தெய்விகச் செயல்களும் ஆயிரக் கணக்கான வருடங்கள் வாழ்வதும் புராணங்களிற் கேட்டு ஆனந்திப்பது நலமே. சரித்திரத்தில் அவற்றை வேண்டு மளவு கொள்வோம்.

2. தொல்காப்பியர்

ஒல்காப் புலமைத் தொல்காப் பியரிரு
சரண டங்கயம் தலையில்
அணியெனப் பூண்பம் அருந்தமிழ் உணரவே.

தமிழணங்கின் தவப்பேருய் அவதரித்த தமிழ் மக்களில் என்றும் அழியாப் புகழ் படைத்தவர் தொல்காப்பியர் என்னும் பெரும்புலவரே யாவர். இவர் இயற்றிய தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் தனக்கு முன்னும் பின்னும் இயன்ற பல நூல்களும் அழிந்தும் சிதைந்தும் குறைந்தும் வழக்கற்றுப் போகியும், இன்னும் முன்னே தோன்றிய உருவிற் சிறிதும் மாறுபடாமல் வழங்கி வருவதிலிருந்தே இவ்வாசிரியர் பெருமை விளங்கும்.

இவருடைய வரலாறு முழுமையும் அறியுமாறு வேண்டிய கருவிகள் பல இல்லை. தற்காலம்வரை இவரைப்பற்றி நமக்குத் தெரிவிப்பது இவர் இயற்றியஇலக்கண நூலே. அந்நூற் பாயிரத்தில், 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்,' என்று இவர் சொல்லப்படுகிருர். அப்பாயிரத்தில், இவர் தம் நூலை நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்தில் அரங்கேற்றியதாகவும், அங்கு அதங்கோட்டாசிரியர் முதலிய பெரும்புலவர் பலர் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளன. "முந்துநூல் கண்டு

முறைப்பட வேண்ணிப் புலந்தொகுத்தோன்,'' என்று அப்பாயிரத்தில் இவரைப்பற்றிக் கூறப்பட்டுளது.

அப்பாயிரத்துக்கு உரை செய்தவருள் இளம்பூரணர், 'நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பவன் பாண்டியன் மாகீர்த்தி யென்னும் பெயருடையான்,' எனவும், 'தொல்காப்பியன் இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணத்தினை நிறைய வறிந்த பழைய காப்பியக் குடியில் உள்ளோன் எனத்தன் பெயரைத் தோற்றுவித்தவாறு தொகுத்தான்; தவவொழுக்கத்தினை யுடையான்,' எனவும் கூறுவர்.

பின்னர் உரை செய்த நச்சினார்க்கினியர், ''அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாம் குற்றந் தீர விடை கூறுதலின், 'அரில் தப,' என்றார். அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி, 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க,' என்று கூறுதலானும், தொல்காப்பியனாரும் பல் காலும் சென்று, 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்,' என்று கூறுதலானும், 'இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றம் கூறிவிடுவல்,' எனக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடை தருதலின், 'அரிறபத்தெரிந்து,' என்றார்.'' ''அவர், 'கேளன்மின்,' என்றற்குக் காரணமென்னையெனின்,'' என்று தொடங்கி, முன்னே அகத்தியர் சரித்திரத்திற் காட்டிய கதையை எழுதியுளர்.

இவர், 'பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் ஆண்டு அரசு வீற்றிருந்தான்,' என்பர். தொல்காப்பியத்துக்கு முந்திய நூல்கள் அகத்தியம், மாபுராணம், பூத புராணம், இசை நுணுக்கம் என்பர். அவற்

றுட் கூறிய இலக்கணம், எழுத்து, சொல், பொருள், யாப்பு,சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல்,பார்ப் பனவியல், சோதிடம், காந்தருவம், கூத்து முதலியன என்பர். நான்மறையென்பன, 'தைத்திரியம், பௌடி கம், தலவகாரம், சாமவேதம்,' என்பர். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்றல் பொருந்தாது என்பர். அதற்குக் காரணம், தொல்காப்பியர் தொல்காப்பியம் செய்த காலத்துக்குப் பிற்பட்ட காலத்தே வேதவியாசர் வேதத்தை நான்கு கூறு ஆக்கினர் என்பர். இவ்வுரை காரர் தொல்காப்பியர்க்குள்ள பல்புகழில் அகத்தியரைச் சபித்ததும் ஒன்று என்பர்.

இவ்விருவர் உரைகளால், தொல்காப்பியர் பழமை யான காப்பியக் குடியிற் பிறந்தோர் என்பது விளங்கும். இவர் துறவறம் பூண்டவர் என்பது பாயிரத்தாலேயே புலப்படும். இவ்வாசிரியர்க்குத் திரணதூமாக்கினி என்ற தொரு பெயர் உண்டு என்பதும், இவர் ஜமதக்கினி முனிவர் மைந்தர் என்பதும் நச்சினார்க்கினியர் எழுதிய கதையால் விளங்கும்.

மேலே காட்டிய குறிப்புக்களைக் கொண்டு, தொல் காப்பியர் சரித்திரத்தைப் பற்றிப் பல அறிவாளர்கள் தத்தம் கருத்துக்கேற்ப எழுதி யுள்ளார்கள். இவற்றி லிருந்து உண்மை யுணர்வதுதான் சிரம சாத்தியமான காரியம். இங்கே முக்கியமான சில குறிப்புக்களை எடுத் துக்கொண்டு, ஆராய்ச்சி செய்வோம்:

தொல்காப்பியர் ஜமதக்கினி முனிவர் குமாரர் என் பதும், இவர் பெயர் திரணதூமாக்கினி முனிவர் என்ப தும், இவர் அகத்தியரால் ஆரியநாட்டிலிருந்து அழைத்

துவரப் பட்டார் என்பதும் கர்ண பரம்பரைச் செய்தி கள் மூலம் நச்சினர்க்கினியர்க்கு எட்டி யிருக்கின்றன. இச்செய்திகள் அவருக்கு முன்னிருந்த பெரியோர்க ளுக்குத் தெரியுமோ, தெரியாவோ என்று நாம் ஒரு வகையிலும் உறுதி கூறுவதற்கில்லை. இச்செய்திகள் உண்மையாகவே யிருக்குமா, பொய்யே யாய்விடுமா என்பதுதான் நாம் ஆராய்ந்தறிய வேண்டும்.

ஜமதக்கினி முனிவர் என்ற மகரிஷி இராமபிரானி டம் எதிர்த்துத் தோற்றுப்போன பரசுராமரின் தகப்ப னர் என்பது இராமாயணத்தால் நாம் அறிந்த விஷ யமே. பரசுராமரோ, இராமபிரானைக் கண்டு, போரில் எதிர்த்து நின்று, அதுவரை தாம் வென்ற வெற்றியை இழந்து, கோள தேசம் நோக்கித் தவம் செய்யச் சென் றார். இராமரோடு எதிர்ப்பதற்கு முன்பு அவர் தம் மகிமையால் இருபத்தொரு தலைமுறை அரச வம்சத்த வரை நாசப்படுத்தியதாக இராமாயணம் கூறுகிறது. ஜமதக்கினி முனிவர் இறந்த பிறகே, அவர் இச்செயல் செய்யத் தொடங்கினர் என்பதும் கேள்வியுற்றிருக்கி றோம். பரசுராமர் தமது தவத்தின் மகிமையால் நீண்ட ஆயுள் பெற்றிருந்தார் என்று கொள்வோமாயின், அவர் அழித்த இருபத்தொரு தலைமுறைக்குக் குறைந்தது நானூறு வருஷமாவது வேண்டும். ஆகவே, இராமபிரா னுக்கு நானூறு வருஷத்துக்கு முன்பே ஜமதக்கினி முனிவர் பரம பதம் பெற்றிருக்கவேண்டும். ஆகவே, திரணதூமாக்கினி என்ற இயற்பெயரையுடைய தொல் காப்பியர் அவர் மைந்தரா யிருப்பாராகில், இராமாவதா ரத்துக்கு நானூறு வருஷங்களுக்கு முன்பே உலகத்

தில் வாழ்ந்தவராகல்வேண்டும். பரசுராமருக்கு இந்த நீண்ட ஆயுள் இருக்குமோ என்று நாம் சந்தேகிக்க வழியில்லா வண்ணம் அவர் பாரத காலம் வரை வாழ்ந்திருந்து, அம்பை என்னும் பெண்ணின் பொருட்டுப் பீஷ்மரோடு போராடிய செய்தியும் கேள்வியுறுகிறோம். இன்னும் அவர் தவஞ் செய்துகொண்டு சிரஞ்சீவியாய் இருக்கிறார் என்பதே அநேகர் நம்பிக்கை.

ஆனால், ஜமதக்கினி முனிவர்க்குத் திரணதூமாக்கினி என்ற பெயரோடு ஒரு குமாரர் இருந்ததாகப் புராண இதிகாசங்களில் எங்கும் நாம் கண்டதும் கேட்டது மில்லை. அவர் சரித்திரத்தில் நாம் கேள்வியுறுவது தாயைக் கொல்வதாகிய தந்தையின் கட்டளையை மற்ற மைந்தர் ஏற்றுக்கொள்ளாமற் சாபம் பெறப் பரசுராமர் ஏற்றுக்கொண்டு செய்து, பிறகு தாயின் உயிர் மீட்பதாகிய வரம் பெற்றார் என்பதே. இவ்வாறு தந்தையின் சொல்லை மறுத்த மைந்தருள் ஒருவர் நம் தொல்காப்பியராய் இருக்கலாமோ என்பதே நாம் கவனிக்கவேண்டும். தொல்காப்பியர் இயற்றிய அரும்பெருநூல் இன்றுகாறும் அழியாதிருப்பதிலிருந்தே அவர் தம் பெற்றோர் சாபத்துக்குப் பாத்திரராகிய மைந்தராயிருப்பார் என்று எண்ண இடமுண்டாகாது. இது நிற்க.

அவர் பழைமையான காப்பியக் குடியிற் பிறந்தவர் என்று உரையாசிரியர்கள் கூறும் விஷயத்துக்கும் பரசுராமர் கனிஷ்டராதற்கும் பொருத்த முண்டோ என்பதும் இங்குக் கவனிக்க வேண்டுவதாகும். 'தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி' என்ற பாயிரச் சூத்திரத்துக்கு இயல்பான பொருள் கொண்டால், 'தொல்

கர்ப்பியர் என்ற பெயர் பூண்டவராய்,' என்பதே பொருளாய் அமையும். ஆனால், உரையாசிரியர் இருவரும் பழமையான காப்பியக் குடி என்றதொரு விஷயத்தைப் புகுத்தியது இக்காலத்தில் பெருத்த வாதப் பிரதிவாதங்களுக்கு இடமாயிருக்கிறது. பழமையான காப்பியக் குடி யென்பது தமிழ்ப் பழங்குடிகளுள் ஒரு வகுப்பினருக்குள்ள வமிசப் பெயர் என்றும், அவர்கள் ஆரிய சம்பந்தம் இல்லாத தனித்தமிழர் என்றும் ஒரு சிலர் கூறுவர். இவர்கள், குறுக்கையர், ஏயர்கோ, காப்பியன், சேக்கிழான் முதலியன இவ்வாறு உள்ள குடிப்பெயர் என்பார்கள். காப்பியர் என்ற பெயர், வெள்ளூர்க் காப்பியன், காப்பியாற்றுக் காப்பியனார் என்று பிற புலவர்க்கும் வந்திருப்பதை இவர்கள் காட்டுவார்கள். இத்தகைய காப்பியக் குடியில் பழமையானதொரு குடியிற் பிறந்த காரணத்தால், இப்புலவர் தொல்காப்பியர் எனப்பட்டார் என்று கூறுவர். மற்றவர்கள், 'சுக்கிரனுக்குக் கவி என்பதொரு பெயருளது. அவன் வழி வந்தவர்கள் காவ்யர் என்ற தத்திதாந்த நாமத்தைத் தமக்குரித்தாகப் பெற்றனர். வடமொழியில் விருத்த பராசரர் என்றிருப்பதுபோல, அவ்வமிசத்திற் சிறந்தார் ஒரு குடியிற் பிறந்தவர் தொல்காப்பியர் எனப்பட்டார். வட மொழியில் இராமாயணம் எழுதிய வான்மீகர் ஆதி கவி ஆயவாறுபோல, கவியினால் இயன்ற பழமையான நூல் செய்ததொரு குடியில் வந்தவர் அக்குடிப் பட்டமாகத் தொல்காப்பியர் என்ற பெயரைப் பெற்றார்,' என்று கூறுவர். மற்றுஞ் சிலர், 'தொல்காப்பியர் ஆரியராயினுமென்ன? தமிழராயினுமென்ன?

அவர் இயற்றிய நூல் வடமொழியில் ஆதி கவி எனப் படும் இராமாயணத்துக்கும் முந்தியதே யென்பது தமிழ் மக்களுக்குப் பெருமையாகும்,' என்று கூறிய வளவில் விடுவர். நூதனமாக ஒருவர் தொல்காப்பியம் என்ற சொல்லுக்கே பொருள் செய்யத் தொடங்கினர். அஃதாவது, 'பழமையான காவலாகிய நூல்' என்பதே. இலக்கணத்துக்கு இவ்வாறு பெயர் இருப்பது பொருத்தமென்று பலரும் அங்கீகரிக்கத் தக்கவாறு பிரபல நியாயவாதிகள்போல இவர் சொல்லுக்குப் பொருள் கூறினர். இப்படிப் பல அறிவாளர் தம் தம் அறிவைப் பல வழிகளிலும் செலுத்தி இடர்ப்படும்படி நம் தமிழ்த்தாயின் தலைமகனார் சரித்திரம் இக்காலத்தில் இந்நிலையில் இருப்பது, தமிழராய் உலகிற் பிறந்துள்ள நமது துர்ப்பாக்கியமே.

தொல்காப்பியர் காலத்தில் சமணம், பௌத்தம் முதலிய மதங்கள் இருந்தன என்று சொல்ல இயலாது. அவர் வைதிக மதத்தவராகவே இருக்கவேண்டும். 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்,' என்று அவர் சொல்லப்படுவதால், அவர் தற்காலத்தில் வடமொழியிற் பெரிய இலக்கண நூலாகவுள்ள பாணினீயம் தோன்றுமுன்பு இருந்ததெனமதிக்கப்படும் வடமொழிப் பேரிலக்கணமாகிய ஐந்திரத்தை நன்கு கற்று, அதன் நுட்ப விதிகளிற் சிலவற்றைத் தம் நூலுள்ளும் சேர்த்தனர் என்று கொள்ள வேண்டும்.

பாணினியார் காலம் கிறிஸ்து பிறத்தற்கு நான்கு நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பது இக்காலத்துச் சில சரித்திராசிரியர் கொள்கையாம். அதற்கும் முன்

பிருந்த ஐந்திரம் கற்ற தொல்காப்பியர், எவ்வளவு சுருக்கிச் சொன்னாலும், இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருடங்களுக்கு முன்பு இருந்தவர் என்று சொல்லாதிருக்கவியலாது.

தொல்காப்பியர் தம் நூலினுள் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலிய சாதிகளைப்பற்றியும், ஐயர் கரணம் யாத்தது பற்றியும் தெரிவித்திருப்பதாலும், காந்தர்வ விவாகத்தைப்பற்றிச் சில விஷயங்கள் தெரிவிப்பதாலும், ஆரிய சம்பந்தமுடையவராகவே இருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். அவர் இயற்றிய நூலிலே, தமக்குமுன் பல இலக்கணப் புலவர் இலக்கணம் செய்திருக்கும் உண்மையைப் பல குறிப்புக்களால் தெரிவித்திருக்கிறார். அகத்தியம் போன்ற வேறு உயர்ந்த இலங்கணங்களும் தொல்காப்பியர்க்கு முன்பு இயன்றிருந்கலாம் என்று இதனுல் ஊகிக்கலாம். அவர் வாக்கிலிருந்தே பண்டைக் காலத்தில் நம் நாடு இருந்த நாகரிகத்தையும், நம் முன்னோர் கற்று வைத்திருந்த பலவகை நூல்களையும் நாமறியலாம். அக்காலத்தில் நம்மவர்க்கு யோகம், தவம், மந்திரம், தத்துவம், மருந்து முதலிய சாஸ்திரப் பரிசீலனையும் அனுபவமும் உண்டு என்பது அவரால் நாம் அறியும் விஷயமாம். அக்காலத்துப் பல வருணத்தவரும் மனவொற்றுமையோடு வாழ்ந்ததும், அவரவர் தொழிலைப் பெரிதாய்ப் பேணியதும், அருமையாக நம் புலவர் பெருமானல் விளக்கப்பட்டுள்ளன. உலக வாழ்வில் பொதுவான நோக்கம், இயன்றளவு உயிரோடுள்ளவரை அறநெறியிற் சென்று, பிறகு உரிய குரு மூலமாக ஞானோபதேசம் பெற்று, மோக்ஷ சாம்

ராஜ்யம் அடைய முயல்வதே அக்காலத்து நம் நாட்டவர் நாட்டமாய் இருந்தது என்பதை ஆசிரியர் தொல்காப்பியர் அழகுறத் தெளிவாக விளக்கி யிருக்கிறார். இத்தகைய நல்லோர் பிறந்த நாட்டில் பிறக்கும் பேறு கிடைத்ததே இக்காலத்தில் நமது பெரும்பாக்கியமாம் என்று எண்ண வேண்டும்.

3. ஔவையார்

அருந்ததி யிணங்கின் பெருந்தவப் பேற்றாய்ச்
செவ்விய நடையிற் செய்யுள்செய் புலமைகோள்
ஔவை யென்னுநம் அன்னையை
வாழ்த்துவம் பழிச்சுவம் மனத்தினில் நினைந்தே.

ஔவையார் என்னும் பெயரை அறியாதவர் தமிழ் நாட்டில் ஒருவரும் இரார். எத்தனையோ பெரும் புலவர்கள் முற்காலத்தில் நம் நாட்டில் வாழ்ந்திருந்தும், அப்புலவர்களது பெயரும் அறியாதிருக்கும் ஸாமான்ய ஜனங்களுக்குக்கூட ஔவையார் பெயரும் அவர் சரித்திரத்திற் சிறிது பகுதியும் தெரிந்திருக்கின்றனவே! இதற்குக் காரண மென்ன? ஔவையார் என்ற பெயரோடு இருவர் இருந்தனர். அவ்விருவருள் முன்னவர், சங்க காலத்திருந்தவர்; பின்னவர், கம்பர் காலத்திருந்தவர். தற்காலத்தில் நம் நாட்டில் வழங்கும் கதைகளிற் பெரும்பாலன பின்னவரைப் பற்றியவையே. இடைக் காலப்புலவர்வரலாறு எழுதும் பகுதியில் அந்தஔவை யாரைப்பற்றி ஆராய்வோம். இங்கு முற்காலப் புலவரா கிய முன்னௌவையாரைப்பற்றித் தெரிந்த வரலாறு களை எழுதுவோம்:

ஔவையார் பாடிய பாடல்களாகச் சங்க நூல் களில் ஐம்பத்தோன்பது பாடல்கள் உள்ளன. அவற் றைக்கொண்டே இவ்வரலாறு ஒருவாறு எழுதப்படும்.

ஔவையார் பாடிய பாடல்கள் சங்க நூல்களில் எட்டுத் தொகை என்னும் தொகுதியில் நற்றிணையில் ஏழும், குறுந்தொகையில் பதினைந்தும், அகநானூற்றில் நான்கும், புறநானூற்றில் முப்பத்து மூன்றும் ஆக ஐம்பத் தொன்பது செய்யுட்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் இரண்டொன்று வஞ்சிப்பாக்கள்; மற்றவை யெல்லாம் அகவற் பாக்களே. திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாகச் சங்கப் புலவர் செய்த திருவள்ளுவ மாலையில் ஔவையார் வெண்பா ஒன்று உண்டு. அதைச் சேர்த்தால், முன்னௌவையாரின் பாடல்கள் அறுபதாம்.

இந்நாள்வரை நமக்குக் கிடைத்திருக்கும் எழுத்துருவமான ஆதாரங்களைக் கொண்டு ஔவையார் குலம், பிறப்பு, வளர்ப்பு முதலிய வரலாறுகள் ஒருவகையாலும் உறுதி செய்ய வழியில்லை. ஔவையார் தம்மைச் சில பாடல்களில் விறலி என்று கூறிக்கொண்டிருத்தலால், அவர் பாணர் குடியிற் பிறந்தவராயிருக்கலாம் என்பது சில அறிவாளர் துணிபு. பிறர் கூற்றுக்களைத் தம் வாக்காற் கூறுவது புலவர் மதம். ஆதலால், விறலி கூற்றாகச் சில விஷயங்கள் ஔவையார் வாக்கில் அமைந்திருக்கின்றன என்று ஊகிக்கலாம். ஆதலால், ஔவையார் பாணர்குடியிற் பிறந்தவர்என்று துணிதற்கில்லை யென்பது தற்காலத்துப் பெரும்புலவர் சிலர் கொள்கையாம். இவ்விருவர் கொள்கையுள் எஃது உண்மையாயினும், எது பொய்யாயினும், இப்பொழுது இருக்கும் நிலையில் நாம் ஔவையார் இன்ன குலத்தைச் சேர்ந்தவர் என்று உறுதி செய்ய வியலாது என்பதே வெளியாகும்.

ஒளவையார் என்ற பெயரே இயற்பெயரோ, சிறப்புப் பெயரோ என்பதை விசாரிக்கவேண்டும். சிறப்புப் பெயராமாயின், இளம்பருவ வரலாறெல்லாம் எவர்க்கும் அறியலாகாது வளர்ந்த ஒரு மூதாட்டியார், பெரும் புலமை காரணமாக அரசரும் புலவரும் மதிக்கும் நிலைமையை அடைந்த காலத்தில் பழகியவரெல்லாம் பாட்டியென்றும் ஒளவையென்றும் அழைக்கும் நிலைமையிலேயிருந்தாராக, அவ்வாறு வந்த பெயரே சிறப்புப் பெயராய்ப் பெற்றுத் தம் இயற்பெயரை இழந்திருப்பர் என்று துணியலாம். அக்காலத்துப் புலவர் பெயர் எல்லாம் பெரும்பாலும் காரணப் பெயராகவேயிருப்பதால், இவ்வாறு ஊகிப்பது பொருத்தமே. தெய்வத்தின் பெயரை மக்கட்கிடும்வழக்கம்அக்காலத்திலே இக்காலமிருப்பதுபோல உண்டாகையால், ஒளவையென்றதொரு தெய்வத்தின் பெயரை அவர்இயற்பெயராய்ப் பெற்றிருப்பினும் இருக்கலாம். ஒளவையென்ற ஒரு தெய்வம் இருந்ததாகப் பண்டை நூல்களில் ஒரு விதச் செய்தியும் கேட்பதற்கில்லை.

ஒளவையென்ற பெயர், நாம் பண்டை நூல்களால் அறியலாகாத ஒரு தெய்வப் பெயராயிருந்து, இப்புலமைச் செல்வியர்க்கு இடப்பட்டிருக்குமாயின், இயற்பெயராம்; முன்னே சொல்லிய காரணம்பற்றி அமைந்திருக்குமாயின், செயற்கைப் பெயராகிய சிறப்புப் பெயராம். ஒரு வழியிலும் உறுதி பண்ண வழியில்லையென்றே நாம் கூற வேண்டும்.

இவர் இறைவர் திருவருளால் இளம்பருவத்திலேயே கல்வி நிரம்பப் பெற்று, ஆண்டு முதிர முதிர

அறிவு பழுக்கப் பெற்று, அரசரும் பிறரும் புலவருட் பலரும் தம் முதுமை கல்விச்சிறப்பு என்றவற்றால் தம்மை மதிக்குமாறு செய்து, வாழ்ந்து வந்தார். புலவர்களுக்கு உடன் பிறப்பாகிய வறுமை இவர்க்குமுண்டு. அவ்வறுமைப் பிணிக்கு மருத்துவனைத் தேடிப் பல பக்கங்களிலும் பாடல் பாடிக்கொண்டு அலைந்து வந்தார். இறைவர் திருவருள் கூட்டி வைக்கக் கடையெழு வள்ளல்களில் ஒருவனும், மழவர் என்ற வீரர்களுக்குத் தலைவனும், சேரமானுக்கு உறவினனும், ஏழுமன்னரை ஏககாலத்தில் வென்றவனுமாகிய தகடூர் மன்னன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவனைக் கண்டார்; அருந்தமிழ்ப்பாடல் ஒன்றுபாடி, அவனிடம் கூறினர். அவன் தமிழ்ப்பயிற்சி மிக்கவனுகையால், ஔவையார் பாடலின் இன்பச் சுவையை அறிந்து அனுபவித்து, அவர்க்குப் பரிசில் கொடுத்தனுப்பிவிட எண்ணமில்லாமல், தன்னிடமே இருத்திக்கொள்ள விரும்பினுன். அவன் எண்ணத்தை அறியாத ஔவையார், அவன் தம்மை மதியாது பரிசில் தாரமலும் தமக்கு விடை கொடாமலும் இருக்கின்றான் என்றெண்ணி, அஞ்சியின்மேற் சிறிது மன வருத்தம் கொண்டார்; அவ்வருத்தத்தையும் ஓர் அழகிய பாடலால் தெரிவித்தார். அப்பாடற் கருத்து வருமாறு:

"அதிகமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை வாயிலில் உள்ள காவலனே, கொடுக்கும் குணமுடையோர் செவியில் ஏறுமாறு நல்ல அழகிய சொற்களாலாகிய பாடல்களைக் கூறி நினைத்த காரியத்தை நிறைவேற்றிச் செல்லும் உறுதியான மனப் பான்மை

யுள்ளவர்களும் தாம் சென்றவிடங்களிற் பெறும்மரியாதையையே பெரிதாய் மதித்துப் பரிசில் பெற்று வாழும் வாழ்வையே உடையவர்களுமாகிய புலவர்களுக்கு இந்நாள்வரை அடையாமல் வைத்துள்ள வாயிலில் உள்ள காவலனே, விரைவாகச் செல்லும் குதிரைகளையுடைய வீரனாகிய அதிகமான் நெடுமான் அஞ்சி தன்னை மறந்தனனா? என்னை அறியானா? அறிவும் புகழும் உடையார் இறந்தனரென்றுலகம் வறியதாய்ப் போய்விடவுமில்லை; ஆகையால், கலங்களைக் கட்டினேம்; மூட்டைகளைக் கட்டிவிட்டேம். மரம் அறுக்கும் தச்சன் பெற்ற மழுவைச் சுமந்த தொழில் வல்ல மக்கள் காட்டிடத்துச் சென்றால், அவர் அக்காட்டு மரங்களை எப்படிப் பயன்படுத்துவரோ, அப்படியே எமக்கும் எத்திசையிற் சென்றாலும் அத்திசையிற் சோறு கிடைக்கும்.''

இவ்வளவு அழகிய கருத்துக்களையுடைய செய்யுள் மிகவும் இனிய எளிய நடையில் அமைந்துள்ளது. ஔவையார் பாடலின் சுவையறிய அச்செய்யுளை இங்கே தருகின்றோம்:

“வாயி லோயே, வாயி லோயே,
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே,
கடுமான் றோன்றல் நெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொ லென்னறி யலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமும் அன்றே? அதனால்,

காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே."*

இச்செய்யுளைக் கேட்டதும் அஞ்சி, அதிகமான் தான் எண்ணிய எண்ணம் ஔவையார்க்குப் புலப்படாமையோடு அவர் தன்மேற் குற்றம் சொல்லவும் இடமானது தன் மவுனத்தாலேயே என்று நன்கு உணர்ந்து, புலவர் தலைவியார் ஆகிய அவரது நட்பைத் தான் பெரிதும் விழைவதாய்த் தெரிவித்துக்கொண்டு, மனங்கொண்ட மட்டும் அவர்க்குப் பரிசில் கொடுத்தான். அதுமுதல் ஔவையார் அவனிடம் மிக்க அன்பு பூண்டு, அவனுக்கு ஆப்த நண்பராகவும், மந்திரியாராகவும், சம்பாஷணைத் தோழராகவும், அவைக்களப் புலவராகவும் இருந்து வந்தார்.

அவ்வாறு வாழ்ந்திருக்கையில் ஔவையார்செய்த தமிழ்த் திருப்பணிகளால் அவர் வரலாறு ஒருவாறு அறியப்படும். அவர் அக்காலத்தில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெரும்புலவராயிருந்தும், மிகுந்த அடக்கமுடையவரென்பதும், தம்மை ஆதரித்த பிரபுவின் குணங்களை உலகறியப் பாராட்டிக் கூறும் இயல்புடையரென்பதும், உண்மை கேட்பார்க்கு வெறுப்புத் தருவதாயினும், துணிந்து கூறும் தைரியம் உடையவரென்பதும், புகழ்வதுபோலப் பழிக்கவும் பழிப்பது போலப் புகழவும் வல்லவர் என்பதும், பிறவும் அவர் செய்யுட்களால் விளங்கும்.

* புறநானூறு—செய்யுள், 206.

அதிகமானைப்பற்றிப் புகழ்வதில் அவன் பகைவர் மனத்துப் படுமாறு சொல்வதாய் அமைத்த ஒரு செய்யுளின் கருத்து வருமாறு:

"பகைவர்களே, போர்க்களம் புகுவதை யொழியுங்கள். ஏனெனில், போர்க்கு எதிர்த்து வருவதில் எம்முன்னே ஒரு வீரன் உண்டு. அவன் எத்தன்மையுடையவ னெனில், ஒரு தினத்தில் எட்டுத் தேர்கள் செய்யக் கூடும் ஆற்றல் படைத்த ஒரு தச்சன், ஒரு மாதம் முழுவதும் சிரமப்பட்டுச்செய்த ஒரு தேர்ச்சக்கரம்போல அமைந்தவன்."

இதன் கருத்து என்னவெனில், 'ஒரு நாளில் எட்டுத் தேர் செய்யும் தச்சன் ஒரு மாதத்திற் செய்த சக்கரம் எவ்வளவு சிறந்த வேலைப்பாடுடையதாயிருக்குமோ அதுபோல, உங்களைப்போன்ற வீரர்களை நூற்றுக் கணக்காய் ஒருநாளில் பிரமன் படைப்பன். அதிகமான் போன்ற வீரர்கள் பிரமதேவனும் பல நாள் ஆராய்ந்து வருந்திப் படைத்த படைப்பாவார்கள். பிரம சிருஷ்டியில் அவன் அபூர்வமான பெருமை வாய்ந்தவன். இருநூற்று நாற்பது முழுத்தேர் செய்யக்கூடிய அவகாசத்தில் ஒரு தேரின் அவயவமாகிய சக்கரங்களில் ஒன்றைச் செய்வது ஒரு பெருந்தொழிலாளிக்குத் தரும் பெருமையும் அவ்வாறு செய்யப்பட்ட பொருளுக்கு இருக்கக்கூடிய பெருமையும் போன்ற அளவில் பெருமையுடையவன்,' என்பது.

அதிகமான் தமது பாடலை மதித்துப் பாராட்டுவது கண்ட ஔவையார், ஒருகால் மிகுந்த அடக்கம் விளங்கப் பின் வரும் கருத்தமையப் பாடினர்:

"புதல்வருடைய மழலைச் சொற்கள் யாழிசைபோல் இனிமையாய் இராமலும், காலத்தோடு பொருந்தாமலும், பொருள் ஒன்றும் அறியவியலாவண்ணம் அமைந்திருப்பினும், தந்தையர்க்கு 'அன்புக்குரியவையாய், இன்ப மிக்கனவாகவே யிருக்கும். பகைவர் அரண்கள் பலவற்றை வென்று கைக் கொண்ட அதிகமான் நெடுமான் அஞ்சியே, நீ விரும்பிக் கேட்டு அருள் புரிவதால், என் வாய்ச்சொல்லும் உனக்கு அத்தன்மையவாம் என்று எண்ணுகிறேன்."

பின்பு ஒருகால் அவன் அருமையாய்ப் பெற்ற தொரு நெல்லிக் கனியை ஔவையார்க்குக் கொடுத் தான். அக்கனி நீண்ட ஆயுளையும் நோயற்ற வாழ்வை யும் தரும் என்பதை அறிந்தும், புரவலனு யிருக்கும் தனது வாழ்வைக்காட்டிலும் புலவராயிருக்கும் ஔவை யார்வாழ்வு உலகத்துக்குப் பெரும்பயன் தருவதாம் என்பதை மனத்துட்கருதி, அவன் செய்த பேருப காரத்தை ஔவையார் மனமார வாயாரப் பாராட்டிப் புகழ்ந்து, பின் வரும் கருத்தமையப் பாடினர்:

"வெற்றியைக் கொடுக்கும் கூர்மையான வாளை ஏந்திப் பகைவர்களைப் போர்க்களங்களிற் கொன்று குவித்த கழன்று கிற்கும் வீரவளையல் அணிந்த பெரிய கைகளையுடைய மிகுந்த மூழக்கத்தோடு மதுபானம் செய்யும் வழக்கம் உடைய அதியர் கோமானே, போர் வென்று பெறும் விஜய லக்ஷ்மியைத் தாங் கிய தோள்களையுடைய அஞ்சியே, பால்போல் வெண்மை யாய் உள்ள பிறையை முடியிலே விளங்க அணிந்த நீலகண்ட ஞகிய சிவபெருமான்போல நீ நெடுங்காலம் வாழக்கடவாய். பழமையான பெரியதொரு மலையின் பிளவில் இருந்த ஏறிப் பெறுதற்கரிய மாத்துச்சியிலிருந்து கைக்கொண்ட நெல்லி யின் இனிய பழத்தை அருமையென்று கருதாமலும், அதனுற்

பெரும்பேற்றை இன்னதென்று எனக்குக் கூறாமலும், மனத்துள் அடக்கிக்கொண்டு, நான் மரணத் துன்பம் நீங்கிச் சிரஞ்சீவியாய் வாழுமாறு கொடுத்தனையே! இப்பெருங்குணத்தை யான் எவ்வண்ணம் புகழ்ந்து பாராட்டுவேன்!"

இக்கருத்துள்ள செய்யுளும் இச்சந்தர்ப்பத்தை விளக்கும் சான்றாக இங்கே காட்டப்படும்:

"வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்,
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி,
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும, நீயே: தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க வெமக்கீத் தனையே!"*

இச்செய்யுளில், 'சாதல் நீங்க' என்று வந்திருப்பதால், ஔவையார் சாவு என்ற பிணி நீங்கிச் சிரஞ்சீவியாய் வாழ்கின்றார் என்றும் இச்செய்யுள் பாடியவரே கம்பர் காலத்தில் வாழ்ந்தார் என்றும் சிலர் துணிகின்றனர். ஆயிரவருஷம் வாழ்ந்தவர் இப்பொழுதும் நம் கண்முன் காணப்படலாம். ஆகையால், அவர் இக்காலத்திற் காணப் படாமையிலிருந்தே, அவர் சாதாரண ஜனங்கள் வாழும் நூறு வருஷங்களைக் காட்டிலும்

* புறநானூறு-செய்யுள், 91.

சிறிது காலம் அதிகமாய் வாழ்ந்திருந்தார் என்றே நாம் கொள்வது பொருத்தமாம். இது நிற்க.

மற்றொரு சமயத்தில் அதிகமான் நெடுமான் அஞ்சி, பல அரசர்களுடன் போர் பொருது, உடம் பெல்லாம் புண்பட்டு நின்றான். ஔவையார் அக்காட் சியை உள்ளவாறே விளக்கி, வீரராவார் பின்பற்றத் தக்க சிறந்ததொரு நீதியும் கற்பித்துளர். அச்செய் யுளின் கருத்துப் பின் வருவது:

"அதிகமானே, இனி நீ போர் முரசு முழங்கச் சென்று போர் புரிந்து வெற்றிபெற்று வருதல் எங்கே? எதிர்த்துவந்து களத்தில் நின்ற மன்னர்கள் உன் சைனியத்தின் முன்னணிக் கும் ஆற்றாதவராய் ஓடி, நோயால் இறந்த உடம்பை அவரிடம் உண்டாகிய பழி ஒழியுமாறு அந்தணர் தருப்பைப் புல்லிலே கிடத்தி, 'ஆண்மையோடு போரில் நின்று பொருது, இறந் தோர் செல்லும் வீரசுவர்க்கம் சேர்வானாக,' என்று கூறி, வாளா லேவெட்டி அடக்கம் செய்யப்படும் கேவலமும் நீங்கப்பெற்று விட்டனர். ஏனெனில், அநேக யானைகள் அழியுமாறு போரா டிக் களத்தையெல்லாம் கெடுத்து, நீ உடம்பெல்லாம் விழுப் புண்பட்டு நிற்கின்றாய். ஆதலால், இக்களத்தில் ஒருவரும் எஞ் சாது வீர சொர்க்கம் சேர்ந்தனர். இனி உனக்குப் பகைவரும் இல்லை; போரும் இல்லை."

மற்றொருகால் ஔவையார் அதிகமானைப்புகழ்ந்து, "நீ எம்மைப் போன்ற புலவர்க்குச் சிறுவர்கள் தனக்கு அழுக்குத் தேய்க்கத் தண்ணீரில் ஆனந்தமாய் மூழ்கி விளையாடும் யானை போலவும், உன் பகைவ ராவார்க்கு அதன் மதங்கொண்ட நிலையிலுள்ள தோற்றம் போல வும் இருக்கின்றாய்," என்று கூறியுளர்.

இவ்வாறு அவர் அதிகமானிடம் அமைதியாய் வாழ்ந்து வருகையில், தொண்டைமான் என்ற ஓரரசன் அதிகமானெடு போராடக் கருதிப்படைகளும் பிற கருவிகளும் சேர்த்துக்கொண்டிருப்பதையும், சமீப காலத்தில் போர் புரியக் கருதியிருப்பதையும் அறிந்தார். பல போர்கள் செய்து சிரமப்பட்டிருந்த அதிகமான் சிறிது காலமேனும் அமைதி பெறவேண்டுமென்பது ஔவையார் கருத்து. அவனுக்கும் தொண்டைமான் ஒரு தக்க எதிரியாய்த் தோன்றவில்லை. இந்நிலையில் அதிகமான் புலவர் பெருமாட்டியாராகிய ஔவையாரைத் தொண்டைமானிடம் தூது அனுப்பிப் போர் நிகழாதிருக்கத் தக்க முயற்சி செய்யச் சொல்லியிருந்தான். அவரும் அவ்வாறே தொண்டைமான் நாட்டுக்குச் சென்று, அவனைக் கண்டார்.

தொண்டைமான் ஔவையாரை எதிர்கொண்டு வரவேற்றான்; அவர் தன் பகையரசன் தூதாக வந்திருப்பினும், பெரும்புலவ ராகையால், உரிய வரிசைகளோடு அவருக்கு மரியாதை செய்தான்; பிறகு தன்து பெருமையும் படை வலிமையும் அவர் காணவேண்டும் என்ற எண்ணங் கொண்டு, புதுமையாகிய பல வகை ஆயுதங்களைச் சேகரித்து வைத்திருக்கும் தனது ஆயுதச் சாலைக்கு அவரை அழைத்துச் சென்றான்; அவ்வவற்றுக்கு உரிய இடங்களில் பளபளப்புறத் தீட்டி எண்ணெய் தடவிக் கண்டோர் கண்ணைக் கவருமாறு அலங்காரமாக அடுக்கி வைத்திருக்கும் தன் ஆயுதங்களைக் காட்டினன். ஔவையார் அக்காட்சியைக் கண்டு பாராட்ட வேண்டுமென்பதே அவன் விருப்பம்.

இவ்வளவு ஆடம்பரங்களுக்கிடையில் தாம் வந்த காரியத்தை மறவாத ஔவையார், அவனைப் பார்த்துப் பின் வருமாறு பாடுவா ராயினர்:

“ இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டி
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து,
கடியுடை வியனக ரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்;
உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயின் உடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.”*

இச்செய்யுட் கருத்து வருமாறு:

“ இங்கே நான் காணும் ஆயுதங்கள், இறகு அணிந்து மாலை சூட்டித் திரண்ட காம்புகள் நன்கு அழகு பெற அமைத்துக் காவல் மிக்க பெரியதொரு நகரத்தின் ஆயுதச்சாலைக்கண் அழகுற வைக்கப்பட்டுள்ளன; அங்கே நான் கண்டுள்ள ஆயுதங்களோ, பகைவர்களைக் குத்திக் கங்கும் நுனியும் முரிந்து, கொல்லன் உலைக்களத்துள்ள சிறிய கொட்டிலில் இருக்கின்றன. எப்பொழுதும் தன் கையில் உண்டானல் வந்தவர்க்கெல்லாம் உணவு கொடுத்து, இல்லையென்றால் உள்ளதனைப் பலரோடு பங்கிட்டு உண்ணும் இயல்புடைய வறியர் கூட்டத் தலைவனாகிய பெருமை மிக்க எம் தலைவன் அதிகமான் கையிற் பிடித்த கூரிய நுனியுள்ள வேற்படையின் தன்மை இதுவாம்.”

இங்கே கூறிய விஷயங்களால் விளங்கும் குறிப்பை இனிக் கவனிப்போம்: ஔவையார் தன்னைப் புகழ

* புறநானூறு—செய்யுள், 95.

வேண்டும் என்று எண்ணிய தொண்டைமானுக்கு இஃது ஒரு வகையிற் புகழு மாயிற்று; பழிப்பு மாயிற்று. புகழானது எப்படி என்றால், அவன் விருப்பத்திற்கேற்ற வாறு புகழ்ந்ததாம்; பழிப்பானது, அவன் மனத்திற் கருதாத பழிப்பைக் குறிப்பாக உணர்த்தியது.

'தொண்டைமானுடைய ஆயுதங்கள் நன்கு தீட்டி எண்ணெய் தடவி அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன!' என்று கூறியது, அவன் ஆயுத பலம் மிக்கவனாயிருக்கின்றான் என்று புகழ்ந்தது போலாம்; 'அதிகமான் ஆயுதங்கள் கொல்ல னுலையில் இருக்கின்றன,' என்றது, அவன் தொண்டைமானுடைய படைவலிக் கெதிர்த்து நிற்கவும் வலியற்றுப் படைகள் இன்றி இருக்கின்றான் என்று அவனை யிகழ்ந்து கூறியதுபோலாம்.

'அதிகமான் தன்னிடம் செல்வம் உண்டானால் அனைவர்க்கும் கொடுத்து, இல்லையென்றால் இருப்பதை ஏழைகளோடு பங்கிட்டுண்ணும் இயல்புடையான்,' என்று கூறியது, அவன் படை வலிமை யில்லாதது போலவே, செல்வ வாழ்வும் இல்லாத வறியனென்று இகழ்ந்ததுபோலாம். தொண்டைமான் நகரை, 'கடியுடை வியனகர்' என்று கூறியதால், அவன் செல்வ வாழ்வாற் சிறந்தவன் என்று கூறியதுபோலாம். இதுவெளிப் படையாய்த் தோன்றும் கருத்து. இதனுள் வேறோர் உட்கருத்தும் இருப்பது இனிக் கவனிக்கப்படும். தொண்டைமானுடைய ஆயுதங்கள் அழகு செய்து அலங்காரமாய் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை உபயோகித்தல் உண்டு என்பது அவை இருக்கும் நிலையிலிருந்து சொல்வதற்கில்லை. அவை அழகுக்கே யுரிய.

ஆனால், அதிகமான் படைக்கலங்கள் அடிக்கடி போரிற் பயன்பட்டு மழுங்கியும் முரிந்தும் வளைந்தும் செம்மை செய்வதற்காகக் கொல்லனிடம் வருகின்றன. இதனால், அவனே ஆயுதங்களை உண்மையிற் பயன்படுத்த அறிந்தவன்; தொண்டைமான் அஃதறியாது அழகு பார்ப்பவன் என்பது விளங்கும். தொண்டைமான் நகரம் காவல் மிக்கதாகையால், எளியரும் புலவரும் பிறரும் எளிதிற் புகுந்துவேண்டும் பொருள்பெற்றுச் செல்லும் அதிகமான் நகர்போன்ற சிறப்புடைத்தாகாது என்று அறிய வைத்ததும், அதிகன் உண்டாயிற் கொடுத்து, இல்லாயின் உடனுண்ணும் இயல்புடையான் என்று கூறி, அவனுடைய வள்ளன்மையைச் சிறப்பித்துத் தொண்டைமானிடம் அக்குணம் இன்மை குறிப்பால் அறிய வைத்ததும் விளங்கும். 'பகைவர் எப்பொழுது வருவரோ!' என்றஞ்சியே, தொண்டைமான் கடியுடை யநகரத்திருக்கின்றான் என்பதும், அதிகன் அவ்வாறு வாழ்வில்லை என்பதும் குறிப்பாற் புலப்பட வைத்ததும் கவனிக்க வேண்டும். 'இத்தகைய பெருமை வாய்ந்த அண்ணல் எங்கோமானாகிய அதிகமான் நெடுமானஞ்சி யோடு போர் புரியும் வன்மை உனக்கில்லை. வீணாக அபஜயமும் அவமானமும் அடையும்படி உன்னால் இயலாத பெரும்போர் செய்யத் துணியாதே,' என்று தொண்டைமானுக்கு அறிவுணர்த்துவார் போன்று ஔவையார் பாடியுள்ள இச்செய்யுள் தமிழுலகம் உள்ளளவும் அவர் சிறப்பை வெளிப்படுத்துவதாம்.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் அப்புலவர் தம்மை ஆதரித்த புரவலர்களைப் புகழ்ந்து பாடியபாடல்கள்

771.2

சங்க நூல்களில் மிக்க பொருளாழம் உடைய செய்யுட்களாய் இன்றும் காணக்கிடைக்கின்றன. அதிகமானுக்கு அருமைத் திருமகன் பிறந்த காலத்தும், அவன் கோவலூர்ப் போர் வென்ற காலத்தும் ஔவையார் பாடிய பாடல்கள் சிந்தைக்கும் செவிக்கும் வாய்க்கும் இனியனவாம். இத்தகைய வள்ளல் இறைவன் அடிநிழல்சேர்ந்த காலத்து, அவர் பாடிய பாடல் கல்லையும் உருக்கும் கனிவுடையது. இவை நிற்க.

அவனது பரம்பரையோருள் முன்னிருந்த சிலர் இந்நாட்டுக்குக் கரும்பு கொணர்ந்தனர் என்ற செய்தியும், மூவேந்தர் பறம்பு முற்றியிருந்த காலத்துப் பாரி என்ற வள்ளல் உணவுக்கு வருந்தா வண்ணம் கபிலர் என்ற புலவர் பெருமான் பறவைகளைக் கொண்டு கதிர்களைக் கொணர்வித்து, மலையில் இருந்தார் அனைவர்க்கும் உணவு தருமாறு செய்து உவந்த செய்தியும், அவர் பாடல்களால் அறியப்படுகின்றன. அவர் வாக்காகப் புறநானூற்றில் உள்ள இன்னொரு செய்யுளையும் தனிச் செய்யுள் ஒன்றையும் எடுத்துக் காட்டி விளக்கி, அவர் வரலாற்றை ஒருவாறு பூர்த்தி செய்வோம்: புறநானூற்றுச் செய்யுள் மூவேந்தரும் ஒரு சமயத்தில் ஓர் இடத்தில் இருப்பது கண்டு மகிழ்ந்த நம் புலவர் பாடியது; தனிச்செய்யுளோ, 'எம்மையும் பாடுக,' என்று வேண்டிக்கொண்ட சில விழலர்களை இகழ்ந்து பாடியது. முன்னது வருமாறு:—

"நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினுந் தம்மொடு செல்லா

வேற்றே ராயினும் நோற்றோர்க் கொழியும்
ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்
திரவலர்க் கருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலைப் புணைபிறி தில்லை
ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்,
யானறி யளவையோ விதுவே. வானத்து
வயங்கித் தோன்று மீனினு மிம்மெனப்
வியங்கு மாமழை யுறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநுங் நாளே."*

(இ - ள்.) தேவலோகம்போன்ற பல பகுதிகளை யுடைய பூமண்டலம் முழுவதும் தம்முடையவை என்று ஆண்டாலும் தமக்கே உரியவாய் நிற்பதில்லை; தவம் புரிந்தவர் பிறரேயாயின், முன்னையவரை விட்டு அவரிடம் போய் ஒழியும். ஆகையால், யாசித்த பார்ப்பார்க்குக் கை நிறையப் பூவும் பொன்னும் தானம் செய்து, பெண்கள் பொற்கலத்தில் தரும் மதுவைப் பருகி மகிழ்ந்து, இரவலர்க்கு அருமையான பலவகைப் பொருள்களையும் ஆபரணங்களையும் வாரித்தந்து, இவ்

* புறநானூறு—செய்யுள், 367.

வுலகில் வாழவுரிய நாளெல்லாம் வாழவேண்டும். இவ்வாறு நல்வாழ்வு பெறச் செய்த நல்வினை யல்லாமல், ஆழுங் காலத்துக்குப் புணை வேறொன்றில்லை. உயரிய உண்மையை ஆராயும் அறிவு நிரம்பி அடங்கிய வேதியர்கள் யாகங்களுக்கு உதவும் ஆகவநீயம், காருக பத்தியம், தக்ஷிணாக்கினி என்ற மூன்று அக்கினிகள்போல நன்கு கண்டு களிக்கக் காட்சி கொடுத்த வெற்றி வெண் குடையையுடைய கொடிகள் கட்டிய தேர்களையுடைய வேந்தர்களே, யான் மனமார உம்மை வாழ்த்தக் கூடிய காலவளவை இதுவே. ஆகாயத்து விளங்கித் தோன்றும் நக்ஷத்திரங்களைக் காட்டிலும், 'இம்'என்னும் ஒலியோடு இயங்கும் மழைத்துளிகளைக் காட்டிலும் உயர்ந்து அதிகமாக மிகுந்து பொலிக உமது வாழ்வு நாட்கள்.

இவ்வாழ்த்து, சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்டேர் தந்த உக்கிரப்பெருவழுதி, சோழன் இராசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற மூவரும் ஒருங்கிருந்த காலத்து ஔவையார் பாடியதாம். இவ்வாறே "நிலமே, நாடாயினும், காடாயினும், மேடாயினும், பள்ளமாயினும், எங்கு மனிதர் நல்லவரோ, அங்கு நீயும் நல்லை," என்று வாழ்த்தியதொரு பாடலும் உண்டு. அவர் வெள்ளி வீதியார் என்ற பெண்மணியின் கற்பைப் பற்றியும் அவ்வம்மையார் தம் கணவனைத் தேடிச்சென்றதைப் பற்றியும் பாராட்டிப் புகழ்ந்து பாடிய பாடல் மிகவும் உருக்கமுடையது. இஃது அகநானூற்றிலுள்ளது.

இனி, ஔவையாரிடம் பாடல்பெற விரும்பிய சிலர் தம் இயல்பைத் தாமே அறிந்து கொள்ளாது,

அவரை மிகவும் தம்மைப் புகழ்ந்து பாட வேண்டிக் கொண்டதற்கு, அவர் பாடியதாக வழங்கும் தனிப் பாடலை இங்கே தருகின்றோம் :

“ மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
‘எம்மையும் பாடுக,’ என்றனிர். நும்மை
யாங்ஙனம் பாடுவல் யானே? நீயிர்
களிறுபடு செங்களங் கண்ணிற் காணீர்,
வெளிறுபடு நல்யாழ் விருப்பமாய்க் கேளீர்,
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கிலீர்,
உடீஇர், உண்ணீர், கொடீஇர், கொள்ளீர்,
ஓவாக் கானத் துயர்மரம் போலத்
தூவாக் கனியிற் றேன்றி னீரே.”

இச்செய்யுள் வெளிப்படையாய்ப் பொருள் விளங்க வல்லதாகையால், பொருள் விரித்தெழுதாமல் விடப் பட்டது.

மேலே காட்டிய பல செய்யுட்களால் அறியப்படும் உண்மை வரலாற்றையுடைய ஔவையார் என்ற புல வர், தமது திருப்பணியால் இன்றளவும் தம் நாட்டவர் தம்மை மறவாதிருக்க இறவாத புகழ்படைத்து வாழ்ந்த வரலாறு ஒருவாறு இவ்வளவில் முடிவடைகிறது.

4. கபிலர்

ஆரிய வரசற் கருந்தமிழ் உணர்த்திய
புலனழுக் கற்ற புலவர் தலைவர்
கபிலர் காண்மலர் கருதிப்
போற்றுவம் புகழ்வம் புலமையெய் துறவே.

'வாய்மொழிக் கபிலன், நல்லிசைக் கபிலன், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன், பொய்யாநாவிற் கபிலன், புலனழுக்கற்ற அந்தணாளன்' எனத் தம் காலத்துப் புலவர்களாலேயே புகழப் பெற்ற கபிலர் என்னும் புலவர் பெருமான், பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூர் என்ற சிவ நகரிற் பிறந்தவர் என்பது பெரும்பற்றப் புலியூர் நம்பி என்ற பெரும்புலவர் கருத்தாம். இதனை அவர் பாடிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் உள்ள ஞானோபதேசம் செய்த திருவிளையாடலில் மூன்றும் செய்யுளாகிய கீழ்க் குறிக்கும் செய்யுளால் அறியலாம்:

"நீதிமா மனுக நீழல் நெட்டிலை யிருப்பை யென்றோர்
காதல்கூர் பனுவல் பாடும் கபிலனார் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துளங்கக் காட்டும்
வேதநா யகனார் வாழும் வியன்றிரு வாத வூரால்."

இக்கருத்து இக்காலத்து அறிவுடையார் பலர்க்கும் ஒப்ப முடிந்ததே.

கபிலர் என்னும் புலவர் பெருமான், மேற்கூறிய வண்ணம் திருவாதவூரிலே அந்தண வருணத்திலே பிறந்து, முற்காலத்திருந்த முனிவருட் சிறந்த சிலர்க்கிருந்த கபிலர் என்ற பெயர் சூட்டப்பெற்று, உரிய காலத்தில் வித்தியாரம்பம் செய்விக்கப்பெற்று, உயர்ந்த தமிழாசிரியர்களிடத்தே பயின்று, அக்காலத்து வழங்கிய இலக்கிய இலக்கணங்களில் மிக்க தேர்ச்சி பெற்று, தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத புலமைவாய்ந்தவராயினர். ஔவையார், பரணர் முதலிய பெரும் புலவர்களோடு இவர் பெருநட்புக் கொண்டிருந்தார் என்பது சங்கச் செய்யுள் பலவற்றால் அறியப்படும். 'கபிலரகவல் என்னும் அகவல் பாடிய கபிலர் வேறு,' என்பது பல விதக் காரணங்களால் அறிவுடைப் பெரியார் பலரால் நிச்சயிக்கப்பட்டிருத்தலால், சங்கப்புலவராகிய கபிலர் சரிதமே இங்கு அக்காலத்து எழுத்தாதரவுகளைக் கொண்டு எழுதப்படும்:

ஔவையாரைப் போலவே கபிலரும் இளம்பருவத்திலிருந்த பல அரசர்களையும் வேளிரையும் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்தனர். இவ்வாறு இவர் வாழ்ந்த வரலாறு சங்கச் செய்யுட்களால் அறியப்படும். இவர் பாடிய பாடல் எட்டுத்தொகை,பத்துப்பாட்டு, பதினேண் கீழ்க்கணக்கு என்னும் மூவகைத் தொகை நூல்களிலும் காணப்படுகின்றன. இவர் எல்லாவகைச் செய்யுட்களும் அழகுறப் பொருளாழத்தோடு பாட வல்லவர் என்பது இச்செய்யுட்களால் அறியப்படும். இக்காலத்தில் இவர் பாடியனவாகக் கிடைத்துள்ள பாடல்கள், நற்றிணையில் பத்தொன்பதும், குறுந்தொகையில் இருபத்

தொன்பதும், ஐங்குறு நூற்றில் குறிஞ்சிக்குரிய நூறும், பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தாச் செய்யுள் பத்தும், அக நானூற்றிற் பதினாறும், புறநானூற்றில் இருபத்தெட்டும், கலித்தொகையிற் குறிஞ்சிக்கலிச் செய்யுட்கள் இருபத்தொன்பதும், பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு ஒன்றும், பதினெண் கீழ்க்கணக்கில் இன்னா நாற்பது என்னும் நாற்பது செய்யுட்களும், நெட்டிலையிருப்பை என்ற தனிப்பாடல் ஒன்றும் ஆகும். எட்டுத்தொகை நூல்களில் ஏழில் இவர் செய்யுட்கள் இருப்பதால், பரிபாடலிலும் இவர் செய்யுட்கள் அமைந்திருந்து இக்காலத்து அகப்படாது மறைந்தவற்றுள் போயிருக்கலாம் என்று ஊகிக்கவும் இடம் உண்டு. இவர் பாடிய பாடல்களைக் கொண்டே இனி இவர் வரலாறு எழுதப்படும்.

இளம்பருவத்திலே இப்புலவர் பெருமான், சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற அரசனிடம் சென்றார். அவன் இவரது பெரும்புலமையைப் பற்றிப் பிறர் வாயால் முன்பே கேள்வியுற்றிருந்தவனாகையால், இவரைக் கண்டதும் மிகவும் அன்போடு வரவேற்றான். இவர் அவன் அரசாட்சியின் ஆரம்ப காலத்தில் போயிருந்த அவ்வமயம், அவனது திருவோலக்கச் சிறப்பையும் போர்த்திறத்தையும் பற்றிப் புகழ்ந்து பாடுவாராயினர். ஒரு செய்யுளில் அவனது வீரப் பிரதாபத்தையும் கொடைச் சிறப்பையும் புகழ்ந்து,

"விரைந்து செல்லும் சூரிய மண்டலமே, நீ பகற்பொழுதை உனக்கென்று கூறிட்டுக்கொள்கிறாய், சந்திரமண்டலத்துக்கும் புறங்கொடுத்தொளிப்பாய்; தெற்கிலும் வடக்கிலும்

இடம்மாறி வருவாய்; அத்த கிரியில் அஸ்தமனம் அடைவாய்; அகன்ற ஆகாயத்திலும் பகற்பொழுதுமாத்திரம் விளங்குவாய். நீ எங்ஙனம் சேரலாதனை நிகர்ப்பாய்?”

என்னுங் கருத்தமைத்திருக்கின்றனர்.

ஒரு சமயம் அவ்வேந்தன் கபிலரோடு பிரியமாய் அளாவளாவிக்கொண்டிருக்கையில் அவர் கைகளைப் பற்றி, அவற்றைச் சிறிதுநேரம் பார்த்து, “புலவரேறே, நும் கைகள் மிகவும் மெல்லியனவாய் இருக்கின்றன; எனது கை இவ்வாறு அமையவில்லையே! இறைவன் கவியெழுதுதற்கு உதவ வேண்டுமென்றே இத்துணை மெல்லிய கைகளைப் படைத்தனனோ?” என்று உசாவுவானாயினன். அதற்கு மறுமொழியாக நம் புலவர் பெருமான்,

“அரசே! முழந்தாள் வரை தாழ்ந்துள்ள உன் கைகள் மத யானைகளால் களைய மரத்தை முறித்து இரும்பினாலாகிய அங்குசத்தைக் கொண்டு அதனைத் தூண்டி வேண்டும் வினைகளை முடிக்கவும், குதிரைகளை வேண்டுமளவில் அடக்கி நிறுத்தவும், வில்லினது வலிய நாணில் அம்பைப் பூட்டிச் செலுத்தவும், பரிசிலர்க்கு வேண்டும் பொருள் கொடுக்கவும் உதவும் பொருட்டு வலியனவாய் அமைந்துள்ளன; எம் கைகளோ, கறியையும் சோற்றையும் உண்டு வருந்தும் செயலல்லது வேறு செயல் அறியாவாகையால், மிகவும் மெல்லியவாயின.”

என்ற கருத்தமைய ஒரு செய்யுள் செய்து புகழ்ந்தனர். அவன் கொடுத்த பரிசில் பெற்றுச் சில காலம் அவனுடன் வாழ்ந்திருந்தனர்.

பிறகு அச்சேரவரசனிடமிருந்து விடை கொண்டு பிரிந்து, பறம்புமலைத் தலைவனாகிய பாரி யென்ற வேளிர்

தலைவன்பாற் சென்றனர். அவன் இப்புலவர் பெருமானைச் சாதாரணமாய்ப் பரிசில் கொடுத்து அனுப்பி விடாமல், உயிர் நண்பராகத் தன்னைவிட்டு விலகாதிருக்குமாறு வைத்துக்கொண்டான். அவனிடம் ஆதரவு பெற்றிருக்கையில் நம்புலவர் பெருந்தகை பாடிய பாடல்கள் பலவாம். அவை அவ்விருவர் சரித்திரத்தையும் இன்றளவும் விளக்குகின்றன. அவற்றுட் சில பாடல்களின் கருத்தைச் சுருக்கி யுரைப்பாம்:

"உலகத்தார் சூடும் பூக்களில் நல்லவென்றும் தீயவென்றும் பகுக்கப்பட்டுள்ள இனத்துள் அடங்காத புல்லிய இலைகளையுடைய எருக்கம்பூவும் இறைவனால் உகப்போடு ஏற்கப்படும் மலராம். அதுபோல அறிவில்லாச் சிறியர் சென்றாலும், பாரி என்ற வள்ளல் தனது வண்மையை மறையாமல் கொடுப்பான்."

"எப்பொழுதும் மெய்யே புகலும் செந்நாப்புலவர்கள் 'பாரி பாரி,' என்று பல விதமாய் ஒருவனையே புகழ்வர். இவ்வுலகு காப்பாற்றும் தொழிலில் பாரி ஒருவனே யல்லன்; மாரியும் உண்டு."

"குறத்தி அடுப்பில் மாட்டிய சந்தனக் கட்டையால் மணங் கமழும் புகை வேங்கை மரத்திற் பாயும் பறம்பு நாடு, பரிசிலர்க்கு உரியதாயிற்று. இனிக் கொடுப்பதற்கொன்றும் இன்மையால், பரிசிலர் இரப்பின், பாரி தானே அவர்க்குரியனாவன்."

மேலே காட்டிய செய்யுட் கருத்துக்களால் பாரியின் வள்ளன்மையும் அதனை உலகறிய வைத்த புலவர் பெருமையும் விளங்கும். இவ்வுண்மையை யறிந்தே, சுந்தர மூர்த்தி சுவாமிகளும், "கொடுக்கி லாதானைப்

பாரியே யென்று கூறி னுங்கொடுப் பாரிலே,'' என்று அருளிச் செய்துளர். இவ்வாறு புலவர் பாடும் புகழ்க் குரியனாய் வாழ்ந்த பாரியினிடம் மூப்பெரு வேந்தரும் பொறாமை பூண்டனர். அவன் புகழ் முன் தம் புகழ் மழுங்கியது, அவர்க்குப் பெருந்துயர் விளைத்தது. அதற்குப் பரிகாரம் தேடுவாராயினர். அதுவும் தண்ட உபாயம் பற்றியதாயிற்று. பாரியின் பறம்பு மலையை மூவேந்தரும் முற்றுகை இட்டனர். இச்செய்தியை அறிந்த கபிலர், அவர் எண்ணம் நிறைவேறா வண்ணம் தடுக்கக் கருதித் தம்மால் இயன்றனவெல்லாம் செய்தனர்.

வேந்தர் சைனியத்தோடு வரும்போதே, பாரிக்கு வரும் பேராபத்தை உணர்ந்த புலவர், அவனைக் காப்பாற்ற விரைந்தார். மும்முடி மன்னரை அடுத்து, அவரைப் புகழ்ந்தும், அமைதியாய் உரையாடியும், போரை நிறுத்துமாறு வேண்டினர். அவர்கள் துணிந்து வந்திருத்தலை உணர்ந்து,

"பாரியின் பறம்பு மலை எளியதோ? அரசர்க்கு வேலால் வெல்லல் அரிதேயாயினும், நீல மலர்போல் விழியுடைய விறலிக்கு அவன் பாடிச் செல்லுங்கால் புகவெளிதாம்."
எனவும்,

"பகைவரை வென்று கொல்லும் படையையுடைய மூவேந்தரும் கூடிப் போராடினீராயினும், பறம்பு மலை கைக்கொளற் கரிதாம். குளிர்ந்த பறம்பு நாடோ, முந்நூறு ஊர்களையுடையது. முந்நூறு ஊர்களையும் பரிசிலாகப் பெறவுரியார் பெற்றுவிட்டனர். இனி எஞ்சியிருப்பவர் யாமும் பாரியுமே. நீர் பாடிச் சென்றால், குன்றும் உண்டு."
எனவும்,

"பாரியது பறம்பு மலை எளிதாகுமோ? முழங்கும் முரசினையுடைய மூவேந்தர் நீர் முற்றுகையிடினும், உழவர் உழாது பெறும்பயன் நான்கு பறம்பு மலைக்குண்டு: அவற்றுள் ஒன்று, சிறிய இலையையுடைய மூங்கிலில் விளையும் நெல்லாம்; இரண்டு, பலா மரங்களில் இனிய சுவையையுடைய சுளைகள் நிறைந்த பழங்கள் உளவாம்; மூன்று, கொழுத்த கொடியை யுடைய வள்ளிக்கிழங்கு நிலத்தினுள் உளது; நான்கு, ஓரி பாய்வதால் அருங்கொம்புகளில் உள்ள தேன் அம்மலையிற் சொரியும். அவனது மலையோ, வானத்திடத்தை யொப்ப உயர்ந்தது; அகன்றது; நீண்டது, வானத்தில் உள்ள நக்ஷத் திரங்கள்போல அம்மலையில் எண்ணிறந்த சுனைகள் உள. ஆகையால், அங்கே ஒவ்வொரு மரத்திலும் ஒவ்வொரு களிற் றைக் கட்டி நிலங்களிலெல்லாம் தேர்களைப் பரப்பி நீங்கள் காத்திருந்தாலும், உங்கள் முயற்சியாலும் போர்த்திறத்தாலும் பறம்பு நாடு உங்கள் வசமாகாது; பாரியும் உங்களுக்குத் தன் மலையை வாட்போரால் இழவான். ஆனால், அது கொள்ளும் வழியை யான் அறிவேன்: முறுக்குடைய நரம்புகளால் அமைத்த சிறிய யாழை வாசித்துக்கொண்டு மணமலர்க் கூந் தலையுடைய விறலியர் பின்னே வர, நீங்கள் பாணர்களாகி ஆடிப் பாடிக்கொண்டு வந்தால், அவன்நாடும் குன்றும் ஒருங்கே கொடுத்து விடுவான்."

எனவுங் கருத்தமைந்த பாடல்களைப் பாடினர்.

இத்துணை நல்ல கருத்துக்களையுடைய பாடல் களைக் கேட்டும் அவ்வேந்தர்கள் எண்ணம் மாறுபடாத வர்களாய்ப் பாரியோடு போரெதிர்ந்து, அவன் பறம்பு மலையைக் கைக்கொண்டனர். அப்போரிலே பாரி இறந்து வீர சொர்க்கம் அடைந்தான். அவன் மகளிர் இருவர் மணப்பருவம் அடைந்த நிலையில் தந்தையை யிழந்து தவிக்கலாயினர். அவ்விருவரும்,

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
எந்தையும் உடையோம்; எங்குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்; யாம் எந்தையும் இலமே."*

என்று புலம்பினர். இச்செய்யுளால் அங்கு நிகழ்ந்த போர் ஒரு மாத காலம் நிகழ்ந்திருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

இந்நிலைமையடைந்த பாரி மகளிரை யழைத்துக் கொண்டு, கபிலர் பறம்பு மலையைப் பார்த்துக் கண்ணீர் வார்த்து, பாடிப் பிரிந்து சென்றார். பிரிந்தும், அம்மலை இவர் மனத்தைக் கவர்ந்தது. சிறிது தூரத்தில் நின்று,

"யானை மென்று போட்ட கவளத்தினது கோதுபோல மதுப்பிழிந்து போட்ட கோதுகள் நிரம்பிச் சிதறியவற்றினின்றொழுகும் மதுச்சேறு ஒழுகும் முற்றத்தினையுடையதேர் வழங்கு நிலையுடைய பாரியின் மலை, இவ்விடத்து நின்றோர்க்கும் தோன்றும்; இன்னும் சிறிது தூரம் சென்று நின்றோர்க்கும் தோன்றும்."

என்று பாடினர். இப்படிப் பலவாறாகப்பாடிக்கொண்டே பிரிந்து சென்றார்.

வேள் பாரியின் மகளிரை அழைத்துக்கொண்டு சென்றார் ஆகையால், அவர்களைத் தக்கதோர் இடத்தில் மணம் புரிவிப்பது இவர் பொறுப்பாயிற்று. தாம் அறிந்த வேளிர் சிலரிடம் சென்றார். முதலில் விச்சிக்கோன் என்ற இளவரசனிடம் போய்,

* புறநானூறு—செய்யுள், 112.

"விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே,
இவரே, பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்;
யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்; நீயே,
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுநன்;
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்
அடங்கா மன்னரை அடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே."*

என்று பாடினர்.

இதன் பொருள் வருமாறு:

"சினத்தோடு போர்புரிந்த அடங்காத மன்னரை அடக்கும் வலிமையுள்ள குறையாத விளைவையுடைய நாட்டின் தலைவனே, விளங்குகின்ற மணிகளாற் செய்த வளைந்த ஆபரணங்களை அணிந்த விச்சிக்கோவே, இம்மகளிர் யாரெனில், பூக்கும் பருவம் மாறாத அழகியதொரு முல்லைக் கொடிச்கு அது நாத்தழும்பேறப் பாடாதாயினும், மணிகள் ஒலிக்கும் பெரிய தேர் ஒன்றைக் கொள்க எனக்கொடுத்த மிகுந்த சிறப்பையுடைய பாரி என்ற வேளின் மகளிராவர்; யானே, பரிசில் பெறும் தொழில்பூண்ட அந்தணன்; நீயோ, பகைவரைப்போர் செய்யும் முறையாற் பொருது வணங்கச் செய்யும் வாட்போர் வல்ல வீரன். நினக்கு யான் கொடுப்ப இவர்களை நீ ஏற்றுக் கொள்க."

இச்செய்யுளிற் பாரி முல்லைக் கொடிக்குத் தேர் தந்த செய்தி வந்துள்ளது. பாரி வேட்டைக்குப் போயி

* புறநானூறு-செய்யுள், 200.

ருந்த காலத்தில் முல்லைக் கொடி யொன்று கொழு கொம்பில்லாது தவித்ததைக் கண்டு, தனது தேரை நிறுத்தி, அது படரச் செய்தான் என்ற இவ்வரலாறு பிற புலவராலும் பாடப்பட்டுளது.

'கலியூழிக் காலத்துக் கெட்டார்க்கு நட்டாரோ இல்,' என்ற வாக்கு மெய்ப்படுமாறு, விச்சிக்கோன் கபிலர் வேண்டியும் பாரி மகளிரை ஏற்றுக்கொள்ள மறுத்தான். இவர் மிகவும் மன வருத்தம் அடைந்தார்; ஆயினும், இயன்றவளவு முயன்று பார்க்கக் கருதி, இருங்கோவேள் என்றவொரு சிற்றரசனிடம் சென்றார். இவர் அவனைப் புகழ்ந்து பாடிய பாடல் மிகவும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது:

"இவரியா ரென்குவை யாயின், இவரே
ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர்; யானே,
தந்தை தோழன்; இவர்என் மகளிர்;
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே;
நீயே, வடபால் முனிவன் தடவினுட் டோன்றிச்
செம்பு புனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தோன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே, விறற்போ ரண்ணல்,
தாரணி யானைச் சேட்டிருங் கோவே,
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய

ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்,
யான்றர இவரைக் கோண்மதி; வான்கவித்
திருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ, வென்வேல்
உடலுந ருட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே.''*

(இ - ள்.) ''இவர் யார் என்று வினவுவாயாயின், இவர் தாம் ஊரெல்லாவற்றையும் இரப்போர்க்கு வழங்கித் தேரினை முல்லைக்கு வழங்கிய அழியாப் புகழ் பூண்ட மணிகள் கட்டிய யானைப்படையையுடைய பறம்பின் தலைவனாகிய மிகப் பெருஞ் சிறப்பினுக்குரிய பாரி என்பான் மகளிர். நான் இவர்கள் தந்தையின் தோழன். ஆகையால், இவர்கள் எனக்கு மக்கள்முறை உள்ளவர்கள் ஆனார்கள். அந்தணப் புலவன் யான் இவர்களை அழைத்து வந்தேன். நீயே, வடநாட்டிலிருந்த ஒருமுனிவாது ஓம குண்டத்திலிருந்து தோன்றிச் செம்பாற் புனைந்து செய் ததுபோ லமைந்த நெடிய மதிலையுடைய துவராபதி என்ற நாடாண்டு வெறுப்பின்றிக்கொடுக்கும் குணமுடையராயிருந்த நாற்பத்தொன்பது தலைமுறை வந்த வேளிருள் சிறந்த தலைவனாய் உள்ளவன். போர்த்திறம் மிக்க தலைவனே, தாரணிந்த யானைகளையுடைய பெரிய இருங்கோவே, ஆண்மையைக் கடப்பாடாகக் கொண்டமையால், பாணர்க்கு வேண்டு முறையில் உதவும் தழைக்கண்ணி கொண்ட புலிகடி மாலே, யான் தருவேன்; நீ இவர்களை ஏற்றுக்கொள்வாயாக. வானர் கவியப்பெற்றுப் பெருங்கடல் சூழ்ந்த இவ்வுலகின்கண் அணுகற் கருமையாக அமைந்த பொன் விளையும் மலையின் தலைவ, வெற்றி வேலையுடைய பகைவரஞ்சும் படைகளையுடைய கேடில்லா நாட்டு மன்னனே, இவ்வேண்டுகோள் செவிக்கொள் வாய்.''

* புறநானூறு—செய்யுள், 201.

இச்செய்யுளில் வேளிர் பூர்விக வரலாறு சிறிது கூறப்பட்டுளது. இருங்கோ வேளை மனமார வாயாரப் புகழ்ந்து, தமக்கும் பாரி மகளிர்க்கும் உள்ள உறவின் முறையைத் தெளிவாய்க் கூறி, 'நான் பரிசிலன்; நீ கொடுக்கும் குடியிற் பிறந்தவன்; ஆயினும், முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் மகளிரை யான் தருகின்றேன்; நீ கொள்க,' என்று எவ்வளவோ சொல்லியும், அவன் பாரி மகளிரைக் கொள்ள மனங் கொண்டிலன். அவன் தம் சொல்லை ஏற்காதது கண்ட கபிலர், பெரிதும் மனம் வருந்திப் பின் வருமாறு கருத்தமையப் பாடினர்:

"பெரிய மலை நாட்டுத் தலைவனே, உங்கள் குடியோங்கும் வண்ணம் கோடிக் கணக்கான பொருளை உங்களுக்கு உதவிய மிகப் பெரிய அரையம் என்ற நாடு கெட்டழிந்த கதையைக் கேள்: நீயாகத் தேடிக் கொண்ட பொருளன்றி உன் முன்னோர் தேடி வைத்த பொருளையும் மிகுதியாக வைத்து அனுபவிக்கும் தழைத்த மாலையையுடைய புலிகடி மாலே, உங்கள் குடியில் முன்னிருந்தவர்களில் உன்னைப்போல் அறிவு படைத்த ஒருவன், புலவர் புகழும் கழாத்தலையார் என்ற புலவரை இகழ்ந்ததன் பயனாக, அப்பெருங்கேட்டை அடைந்தான். இவர்கள் வண்மை மிக்க வேள் பாரியின் மகளிர். ஆகையால், அவன் குடியோடு ஒத்த குடியாகிய எவ்வியின் பழங்குடியில் இவர்களைச் சேர்த்துவிடலாம் என்று நான் எண்ணி அறியாமையாற் கூறிய புன்சொற்களைப் பொறுத்துக் கொள்க. இனி நான் விடை கொண்டேன். உன் வேல் வெற்றி தருவதாக."

இவ்வாறு இவர் இருங்கோ வேளிடம் சொல்லி, அவனை விட்டு விலகிப் பாரி மகளிரையும் அழைத்துக்

கொண்டு, வேறிடங்கட்குச் சென்றனர். அக்க இடங்கள் இரண்டில் முயன்றும் பயன்படாமல் போகவே, இவர்க்கு அம்முயற்சியால் மனத்தளர்ச்சி சிறிது உண்டாகியது. தாம் நட்புக் கடன் கழிக்க முயன்றதில் இறைவர் திருவருள் துணை யில்லாமையை அறிந்து, மனம் வருந்தி, இரு பெண்களையும் சில அந்தணரிடம் அடைக்கலமாக வைத்துவிட்டுப் பொருள்தேடச் சென்றார்.

இவர் மலையமான் நாட்டுக்குப் போய்த் திருமுடிக்காரி என்ற மன்னனைப் புகழ்ந்து பாடினர். அவன் சிறிதளவு பரிசில் கொடுத்தான். அதனை யேற்றுக் கொள்ளாது,

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருகுவர் பரிசில் மாக்கள்.
வரிசை யறிதலோ வரிதே; பெரிதும்
ஈதல் எளிதே. மாவண் டோன்றல்,
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே."*

என்ற பாடலைப் பாடினர். பிறகு அம்மன்னன் இவர் பெருமையை யறிந்து ஏற்றவாறு மரியாதை செய்தான். பிறகு அம்மன்னனைப் பற்றி அவன் குணங்களைப் பல படப் பாராட்டி மூன்று பாடல்கள் பாடினர்; அவற்றால் அவன், கொடை மடத்தை உலகறிய வைத்தனர். அச்செய்யுட்களில்,

"உன் நாடு அந்தணர்க்குரித்தாம். மூவேந்தர் கொடுக்கும் பொருளுதவியே உங்கள் குடிக்குக் கூழுக்காம். உனக்கு

* புறநானூறு—செய்யுள், 121.

உன் மனைவியாகிய அருந்ததிக் கற்பின் மடவரல் தோளளவே உரியது. உனது என ஒன்றும் இல்லை."

எனவும்,

"மலையமான் இரவலர்க் கீந்த தேர்கள் மாரித் துளியைக் காட்டிலும் பலவே."

எனவும்,

"நல்ல நாளில்லாது அபசகுனத்திலே போய், சமயமறி யாது உட்புகுந்து, சொல்லும் வழியறியாது சொல்லினும், மலையமான் திருமுடிக்காரியைப் பாடியவர் வாளா திரும்புவா ரல்லர்."

எனவும், அமைத்த கருத்துக்கள் பாராட்டற் பாலன.

பின்னர் அவனை விட்டு விலகி வையாவிக்கோப் பெரும்பேகன் என்ற வள்ளலைக் கண்டு, புகழ்ந்து பாடு வாராயினர். இவர் அங்குப் பாடிய பாடலின் கருத்து, பேகனுக்கும் அவன் மனைவிக்கும் இடையில் நிகழ்ந் திருந்த மன மாறுபாட்டைத் தீர்க்க அமைந்ததாகும். அங்குள்ள கருத்துக்கள் மிகவும் உருக்கம் உள்ளவை:

"ஈகை சிறந்த பேகனே, நேற்றுக் காட்டிலே வெயிலில் நடந்து வருந்திய எனது சுற்றம் பசித்திருந்த துணர்ந்து, அருவிநீர் சிறந்த இம்மலையை யடைந்து, உன்னையும் உன்மலை யையும் யான்பாடி நிற்க, அப்பொழுது துன்புற்றுச் சொரியும் கண்ணீரை அடக்கமாட்டாமல் அக்கண்ணீர் மார்பை நனைப் பப் பொருமி, குழல் இரங்கி யொலிப்பதுபோல அழுது நின்ற அவ்விரங்கத் தக்கவள் யாரோ?"

இவ்வாறு நின்ற பெண்மணி கண்ணகி என்னும் பெயருடையாள்; பேகன் என்னும் தலைவன்றன் பெரு மனைக் கிழத்தியாய் இருந்தவள்; அவன் மனம் மாறுபாடு

அடைந்ததுமுதல் தன் விதியை நொந்து வருந்தியிருந்தவள். அவள்பொருட்டுப் பரணரும்அரிசில்கிழாரும் பெருங்குன்றூர் கிழாரும் பேகனைப்பாடியிருக்கின்றனர். பெருங்குன்றூர் கிழார் பாடலில் கற்புடைப் பெண்டிர் இலக்கணம் நன்கு அமைத்துப் பாடப்பட்டிருக்கிறது. அவ்வரசன், புலவர் பலர் பாடியதால் தன் மனம் நல்வழியில் திரும்பித் தன் மனைவியை உரியவாறு ஏற்றுக்கொண்டான் என்று ஊகிக்கப்படுகிறது. அப்பேகனே மயிலுக்குப் போர்வைகொடுத்தவன் என்று சொல்லப்படுபவன்.

பின்னர்க் கபிலர், செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேர வரசனை யடைந்து, பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தாகப் பத்துப் பாடல்களைப் பாடினர். அப்பாடல்களில் முதற் செய்யுளிலேயே பாரி இறந்த செய்தியை மிகவும் உருக்கமாகக் கூறியுளர்:

"என்றும் மாறாத ஈகையையுடைய மிகப்பெரிய வள்ளலாகிய பாரி, தன் நாட்டில் உள்ள முழவுகள் அடிப்போரின்றி மார்ச்சனை காய்ந்து கிடக்கவும், இரப்போர் வருந்தவும், திரும்பி வாராத் தூரதேயத்துக்குப்போய்விட்டானாகையால், என்னைக் காப்பாற்றுக என்று உன்னிடம் இரப்பதற்கு வந்தேனிலேன்; உண்மைக்கு மாறாகப் பொய்யாகப் புகழ்ந்து கூற மாட்டேன். 'தான் கொடுத்ததற்காக வருந்தான்; கொடுத்த அளவில் தான் அது செய்த பெருமை பாராட்டி மகிழான்; கொடுக்குந்தோறும் மேலும் கொடுக்க விரும்பும் பெரிய வள்ளல்,' என்று உலகங் கூறும் உனது நல்ல கீர்த்தியை உனக்குத் தரவே வந்தேன்."

என்று முதற் கவியில் அமைத்துளர். பதிற்றுப்பத்தில் வந்துள்ள பின் வரும் செய்யுளடிகள் மிகவும் பாராட்டற் பாலன:

"நிலந்திறம் பெயருங் காலை யாயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே."
"மாயிரு விசும்பிற் பன்மீன் ஒளிகெட
ஞாயிறு தோன்றி யாங்கு மாற்றார்
உறுமுரண் சிதைத்தநின் னோன்றாள் வாழ்த்திக்
காண்கு வந்திசின்..............."
"இல்லோர் மெய்ம்மறை சேர்ந்தோர் செல்வ,
பாணர் புரவல, பரிசிலர் வெறுக்கை,"
"கால்கடிப் பாகக் கடலொலித் தாங்கு
...........முரசம்....அதிர..........."
"வேள்வியிற் கடவுள் அருத்தினை; கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை;
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கடன் இறுத்த வெல்போ ரண்ணல்,"

என்று இவ்வாறு பல வகை நற்கருத்துக்கள் அமையப் பாடி, நல்லரசர்க்கிருக்கத் தக்க இலக்கணங்களை இக் காலத்தவரும் அறிய வைத்தது நாம் கவனிக்கத் தக்க விஷயமாம். இப்பாடல்களுக்குக் கபிலர் பெற்ற பரிசில் நூறாயிரம் காணமும், 'நன்றா' என்ற குன்றின்மேல் நின்று கண்ட நாடுமாம். இவ்வளவு வாழ்வு வந்தும் இவர் வேள் பாரியை மறக்கவில்லை.

கபிலர் பாடியனவாகப் பிற தொகை நூல்களில் உள்ள பாடல்கள் வேள் பாரியிடம் இருக்கும்போதே இடையிடைக் கிடைத்த அவகாச காலங்களிற் பாடப் பெற்றனவென்று ஊகிக்கப்படும். ஆரிய வாசனாகிய

பிரமதத்தன் என்பவனுக்குத் தமிழ் அறிவுறுத்துவதற்காக இவர் பாடிய பாடலே பத்துப்பாட்டில் ஒன்ருகிய குறிஞ்சிப்பாட்டு. அப்பாடல் கேட்ட பிறகு அவன் சங்கப் புலவரை யொப்பத் தானும் பாடும் திறம் பெற்ருன். இன்ன நாற்பது பாடப்பெற்றதும் அக்காலமே. இவ்வாறு இவர் பாடிய பல வகைச் செய்யுட்களிலும் உள்ள நயங்களை ஆராய்வதும், எடுத்துக் காட்டுவதும் எளிய செயலல்ல. நற்றிணையில், "இசைபட வாழ்பவர் செல்வம்போலக் காண்டொறும் பொலியும் வேழம்," எனவும், "ஆளில் பெண்டிர் தாளிற் செய்த நுணங்கு நுண் பனுவல்" எனவும் அமைத்தது மறக்கத் தக்கதன்று. பின்னே காட்டிய அடிகளால் நம் நாட்டில் அக்காலத்தில் தம்மை ஆதரிக்கும் ஆண் மக்களைப் பெருத பெண்டிர் நுண்ணிய நூல் நூற்கப் பழகியிருந்தனர் என்ற செய்தி அறியப்படும்.

இவ்வாறு உலகிற்குதவும் அறப்பணி பூண்ட இப் பெரியார், பாரியையும் அவன் மகளிரையும் தம் வாழ்வுக்கிடையில் மறவாமல், அம்மகளிரைப் பார்க்க வந்தார். இவர் மலை நாடு சென்றிருந்த காலத்தில் அங்கு வந்து அம்மகளிரைக் கண்ட ஔவையார், அவர்களை அழைத்துச் சென்று, திருக்கோவலூரை அடைந்து, அந்நாட்டு மன்னனுகிய தெய்வீகன் என்பானுக்கு அவர்களை மணம் புரிவித்திருந்தார். இச்செய்தியைக் கேள்வியுற்று மகிழ்ந்த நம் புலவர் இனித் தாம் கழித்தற்குரிய கடன் ஒன்றும் இன்மையால், வேள் பாரி இறந்த இடத்திற்குச் சென்று தம் உயிரையும் விடத் தீர்மானித்துப் பறம்பு நாட்டுக்கு அருகில் வந்தார்; அங்

குப் பாரி இறந்த இடமும் அவன் பொருட்டு அமைந்திருந்த வீரக் கல்லும் கண்டு புலம்பினர்; தாம் பல நாளாகப் பிரிந்து வாழ்ந்து, அவன் இறந்தபோது உடன் செல்லாக் குறையைக் கூறி வருந்தி, அங்கு வடக்கு நோக்கியிருந்து, மூச்சை அடக்கி உயிர் விட்டு, இறைவரடிநிழல் அடைந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் இவர் பாடிய பாடல் பின் வருவது :

"கலையுணக் கிழிந்த முழவுமருள் பெருஂபழம்
சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்
மலைகெழு நாட, மாவண் பாரி,
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே;
பெருந்தகு சிறப்பின் நட்பிற் கொல்லா
தொருங்கு வரல்விடாஅ தொழிகெனக் கூறி
இனையை யாதலின், நினக்கு மற்றியான்
மேயினே னன்மை யானே; ஆயினும்,
இம்மை போலக் காட்டி உம்மை
இடையில் காட்சி நின்னோ(டு)
உடனுறை வாக்குக வுயர்ந்த பாலே."*

(இ - ள்.) "பெருங்குரங்குகள் உண்ணும் பொருட்டுக் கிழித்து வைத்த முழவுபோன்ற பெரிய பலாப் பழம் மலையில் வாழும் வில்வல்லவராகிய குறவர்களுக்குச் சிலநாளைக்கு இட்டு வைத்து உண்ணும் உணவாய் உதவ அமைந்துள்ள வளமிகுந்த மலை நாட்டரசே, மிகவும் வண்மை சான்ற பாரியே, முன்னே நாம் இருவரும் கலந்திருந்த நட்புக்குப் பொருந்தாத

* புறநானூறு—செய்யுள், 236.

வண்ணம் என்னைக் காப்பாற்றிய ஆண்டுகளை மறந்து, என்னிடம் விருப்பமில்லாதவன்போல பெருந்தக்க சிறப்பை உடைய உனது நட்பிற் கேலாதவாறு நான் உன்னோடு வரவிடாமல், என்னை, 'இவ்வுலகில் இருக்க,' எனக் கூறி, நீ முன்னே சென்றாய். ஆயினும், உனக்கு நான் இவ்வாறு அன்பற்றவனாயினும், இப்பிறப்பில் நாம் வாழ்ந்திருந்ததுபோல உம்பரகத்தும் உன்னோடு பிரியா வாழ்வையான் அடையுமாறு எனக்கு நல்விதி உன்னுடன் வாழும் நிலையை உதவுவதாக."

மாப்பெரும்புலவராகிய கபிலர் குணங்களில் இந் நட்பைக் காட்டிலும் எதைச் சிறந்ததென்போம்! எல்லாச் செய்யுளும் இயற்ற வல்ல அவர்தம் உண்மைக் குறையுளாம் புலமையோ, பாரிபாற் கொண்ட நட்போ, எது பெரிது என யாம் அறியோம்.

5. பரணர்

மறத்துறை யழிய வறத்துறை விளக்கும்
பாடல்கள் பாடிய பரணர்
புகழெனுங் கடலிற் புகுந்து திளைப்பமே.

கபில பரணர் என்று உம்மைத் தொகைக்கு உதாரண மாகக் காட்டப்படும் பெயர் பூண்ட இருபுலவரும் சிறந்த நண்புபூண்டு தமிழ்ப்பணி இயற்றிய பெருந்தகை யாளர் என்பது, தமிழராவார் அறிந்ததே. கபிலர் வரலாறு ஒருவாறு சுருக்கமாக ஆராயப்பட்டது. இனி, பரணர் வரலாற்றை இவர் பாடல்களைக் கொண்டே ஆராய்ந்தெழுதுவோம்:

கபிலர் தம்மைத்தாமே 'அந்தணன் புலவன்'என்று கூறிக்கொண்டுள்ளதுபோல, இவர் எங்கும் தம்குலத்தை வெளியிட்டிலர். பிறரும் இவரைப்பற்றி இன்ன குலத்தார் என்று கூறியிருப்பதாய் இதுவரை விளங்கவில்லை. சில சிறந்த புலவர் சமீபகாலத்தவராய்இருந்தும்,இன்ன குலத்தார் என்று அறியப்படாதிருப்பதுபோல, இவர் குலமும் நாம் தற்காலம் அறியலாகாத நிலையில்உள்ளது.

இவரிடம் ஒரு சிறந்த இயல்பு உண்டு. தாம்பாடும் செய்யுள் அகப்பொருளைப் பற்றியதாயினும், புறப் பொருளைப் பற்றியதாயினும், ஏதேனும் ஒரு சிறந்த நீதியையாவது,ஓர் அரசன் வரலாற்றையாவது புகுத்தி,

உலகத்தார்க்கு அறிவு புகட்டுவது இவர் வழக்கம். இவ்வாறு இவர் பாடியுள்ளதால், தற்காலத்தில் நாம் அறிந்திருக்கும் பண்டைத் தமிழரசர் வரலாறுகள் பல; சிற்றரசர், வேளிர், பெண்டிர், புலவர் வரலாறுகள் சில. இப்புலவர்க் கொப்பாக இவ்வரும்பணி புரிந்தவர் வேறு எவரும் இருப்பர் என்று நாம் துணிந்து கூறுவதற்கில்லை.

தற்காலம் இவர் பாடியவையாக நமக்குக் கிடைத்திருக்கும் செய்யுட்கள், நற்றிணையில் பன்னிரண்டும், குறுந்தொகையிற் பதினைந்தும், பதிற்றுப்பத்தில் பத்தும், அகநானூற்றில் முப்பத்திரண்டும், புறநானூற்றில் பன்னிரண்டும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும் ஆக எண்பத்திரண்டு பாடல்களேயாம்:

பரணர், தமது இளம்பருவத்திற் கரிகாற் சோழன் தந்தையாகிய உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னி என்பவனைப் பாடினர். அவன் சிறந்த வீரன் என்பதையும், பகைவரஞ்சும் போர்த்திறம் படைத்தவன் என்பதையும் தற்காலத்துத் தமிழுலகத்தார் அறியச் செய்தவர் இவரே. இவர் அச்சோழனைப் பாடிய செய்யுளில் சிறந்த ஒரு போர்வீரனுக்குரிய இலக்கணங்களை நன்கு அமைத்திருக்கிறார். அச்செய்யுட் பொருள் பின் வருமாறு:

"உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியின் வாள், போர் வெற்றிதாற்பொருட்டு, இரத்தக் கறை பட்டுச் செவ்வானம் போன்றிருந்தது. அவன் பாதங்கள் போர்க்களத்தை அடக்கப் புடை பெயர்ந்து திரிந்து, அரும்புபோல் தொழில் செய்

யப்பட்ட வீரக் கழல் அணிந்து, எதிர்த்தாரைக் கொல்லும் ஆனேற்றின் கொம்புபோல விளங்கின. அவன் கடலினின் றெழும் செஞ்ஞாயிற்றின் அழகு பெற்று விளங்கினன். அவன் இவ்வாறு இருத்தலால், பகைவர் நாடு தாயின்மையால் உண வின்றி அழும் குழவிபோல ஓயாது கூவி யழும்."

தாம் புகழக் கருதிய அரசனுக்குப் பகைவராவார் நாளெல்லாம் அவன் வரும் வரும் என்று அஞ்சியும், அவன் வந்தக்கால் நடுங்கியும், தாயில்லாக் குழவிபோல ஓயாது அழுவர் என்பது தம் கருத்தை விளக்க எத் துணைப் பொருத்த முடையது! கபிலர் தோழராகிய இவர்க்கன்றி வேறு எவர்க்கு இவ்வுவமை தோன்றும்? இவ்வழகிய பாடலைக் கேட்டு அவன் கொடுத்த பரிசிலைப் பெற்றுச் சில காலம் சோணாட்டில் வாழ்ந்திருந்தனர்.

பின்னர்த் திருப்போர்ப் புறம் என்னும் நகரில் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி என்பவ னும், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், போர் செய்வதாய் அறிந்து, தம் நாவன்மையால் அவர்களைச் சமாதானப்படுத்த எண்ணி, அங்குச் சென்றார். ஆனால், இவர் போதற்கு முன் அவ்விருவரும் ஒருவர்க்கொரு வர் இளையாது போராடித் தம் சைனியமும் தாமும் ஒருசேர எமனுலகடைந்தனர். இக்காட்சியைக் கண் டதும் உள்ளம் உருகி நம்புலவர் பாடிய கவி கன்னெஞ் சையும் கரைக்க வல்லதாம். அக்கவியின் மூலம் உல கில் வாழ்வும் செல்வமும் வீரமும் அரசும் புகழும் பிற வும் அழிவனவென்பதும், அறிவுளார் காண நிற்கும் இந்நிலையினை நினையாமை அறிவின்மையாம் என்பதும் விளக்கினார்.

அக்கவி வருமாறு:

“ எனைப்பல் யானையும் அம்போடு துளங்கி
விளைக்கும் வினையின்றிப் படையொழிந் தனவே!
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொ டாண்டுபட் டனவே!
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப வொருங்குமாய்ந் தனரே!
விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குந ரின்மையின் இருந்துவிளிந் தனவே!
சாந்தமை மார்பில் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர்; இனியே,
என்னா வதுகொல் தானே கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கித் தண்புனற் பாயும்
யாணற் றறாஅ வைப்பிற்
காமர் கிடக்கையவர் அகன்றலை நாடே ?”*

(இ-ள்) “ எத்தனையோ யானைகள் அம்புகள் பாய்தலாற் கலங்கி, மேலே ஒன்றும் செய்ய இயலாமல், படைக்கூட்டத்தின் இடையிலே இறந்து கிடந்தன; வெற்றியாற் புகழ் படைத்த சிறந்த குதிரைகள் எல்லாம், தாம் சுமந்து நின்ற வீரம் சிறந்த ஆண் மக்களோடு அங்கே இறந்து கிடந்தன; தேரேறிப் போர் செய்யும் சிறந்த வீரரெல்லாம், தாம் பிடித்த கேடகமே தம் முகங்களை மறைக்க இறந்துகிடந்தனர்; வாரால் நன்றாகக் கட்டி அமைக்கப்பட்டிருந்த மயிர் போக்காத தோல் போர்த்த முரசங்கள், தேடுவார் இன்மையினாலும், சுமப்பார் இன்மையாலும், வாளா கிடந்தன; மண மிக்க சந்தனம்

* புறநானூறு—செய்யுள், 63.

திமிர்ந்த மார்பில் நெடுவேல் பாய்ந்ததால், வேந்தர்களும் போர் செய்து களத்தில் இறந்தனர். இவ்வாறு எல்லாம் ஆகியதால், இனி வயல்களிலே ஆம்பற்றண்டால் அமைத்த வளையல்களை அணிந்த கையினையுடைய இளமகளிர் புதிய அவலை முக்கிக் குளிர்ந்த தண்ணீரிலே பாயும் புது விளைவும் வருவாயும் மாறாத ஊர்களையுடைய அழகிய நிலங்களைக் கொண்ட இவ்வேந்தர்களின் நாடுகள் என்னாகுமோ?"

இரு பெருவேந்தரும் அவர் தம் படைகளும் ஒன்றும் மிஞ்சாமல் அழிந்ததால், இறந்த அவர்களுக்காகவும், இறவாது அந்நாட்டில் இனித் தம்மைப் பாதுகாப்பார் இன்றி இருந்தவர்க்காகவும், நம்புலவர் இரங்கி இவ்வாறு புலம்பினார்:

"புது வருவாய் உள்ள நாடுகள் இவ்வாறு அரசர் பகையாற் பாழாகின்றனவே! யானையும் குதிரையும் வீரரும் தலைவரும் மன்னரும் தாம் பாதுகாத்தற்குரிய நாட்டையும் ஊர்களையும் உயிர்களையும் விட்டு இவ்வாறு இறந்தனரே! இவர்தம வீரத்தாற் போந்த பயன் யாது? ஒரு நாடும் அதைச் சார்ந்த ஊர்களும், மற்றொரு நாடும் அதைச் சார்ந்த ஊர்களும் உழவு தொழில் முதலியன செய்வார் இன்றியும் பெண்டிர் தம் கற்பைப் பேணுவார் இன்றியும் அழிந்ததுதானே பயன்! இவ்வழிவுக்குக் காரணமாகிய தம் பகையை இவர்கள் முன்னரே உரிய உபாயங்களால் தணித்திருப்பின், செழிப்பும் நீர்வளமும் மிக்க இந்நாடுகள் இந்நிலைக்கு வந்திராவே!"

என்று உருக்கமுறப் பாடல் பாடித் தெரிவித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் கழாத்தலையார் என்றவொரு புலவரும் மிகவும் உருக்கமாக ஒரு செய்யுள் செய்துள்ளர். இவரே இருங்கோவேளிடம் சென்ற காலத்துக் கபில

ராற் புகழப்பட்டவர். இவ்விரு பெரும்புலவரும் தெரிவித்த இச்செய்தியிலிருந்து அக்காலத்தில் அரசர்கள் போர் செய்த முறையும், அவர்தம் வீரமும், ஊக்கமும், பெண்டிர்தம் பெருமையும், பிற உயர் குணங்களும் விளங்குகின்றன.

பின்னர் வையாவிக் கோப்பெரும்பேகன் என்ற வேளிர் தலைவனைப் புகழ்ந்துபாடினர். அப்பாடல்களால் அவன் புகழும் இவரது சொல் வன்மையும் விளங்குகின்றன. ஒருசெய்யுளில் புலவராற்றுப்படைப் பொருளமைத்தார். மற்றொன்று அவ்வரசன் இயல்பு தெரிவிக்கும் இயன்மொழிப் பொருளதாம். பேகனால் துறக்கப்பட்ட அவன் மனைத் தலைவி கண்ணகி காரணமாக இரண்டு செய்யுட்கள் பாடப்பட்டுள. இந்நான்கு செய்யுட்களால் பேகன் வரலாறும், அவன் இயல்பறிந்து பாடிய புலவர் பெருமையும் விளங்குதலால், அச்செய்யுட்களின் கருத்து இங்கு வேண்டுமளவு விளக்கப்படும்:

"பாணன் சூடிய பொற்றாமரை மலர் சிறந்த ஆபரணங்களை அணிந்த விறலியின் பொன்னரி மாலையோடு விளங்க, வேகமாய்ச் செல்லும் குதிரைகள் பூட்டிய பெரிய தேரை நிறுத்தி, 'இளைப்பாறி நும்மூரில் இருப்பவர்போல இவ்வனத்தில் தங்கியிருக்கும் நீர் யாவர் பாணரே,' என எம்மைக் கேட்கும் எளிய சுற்றத்தாரையும் மிக்க பசியையும் உடைய இரவலனே, எம்மை நன்கு ஆதரித்த வெற்றி வேலுடைய தலைவனைக் காணுமுன்பு யாம் உன்னைக்காட்டிலும் வறுமை பூண்டிருந்தேம்;இப்பொழுது அவ்வறுமை நீங்கி, இத்தன்மை அடைந்தேம். எக்காலத்தும் அளவு உடுப்பதுமில்லை போர்ப்பதுமில்லை என்று அறிந்தும் மயிலுக்குப் போர்வை கொடுத்த எம் தலை

வன் பேகன் கொடுக்கும் கொடை எவ்வளவாயினும், மறு பிறப்பை நோக்கிற்றேவெனின், அவ்வாறன்று; அவன் கை வண்மை பிறர் வறுமை நோய் நீக்கக் கருதுவதே யொழிய, தன் வாழ்வைக் கருதுவதன்றாம்."

இங்குக் கூறிய விஷயங்களால், பரணர் என்ற புல்வர் பெருமான் பாணர் குடியிற் பிறந்தவரா யிருக்கலாமோ என்று சிலர் ஊகிக்கக்கூடும். ஔவையார்சரித்திரத்திற் கூறிய சமாதானமே இங்கும் கூறக் கூடும். ஆகையால், இக்கவியைக்கொண்டு இவர்பிறந்தகுடியை நிர்ணயிப்பதற்கில்லை யென்றே கூற வேண்டும். பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தான் என்ற வரலாறு பிற புலவராலும் பாராட்டப்பட்டுளது. ஒரு காலத்தில் காட்டில் வேட்டையாடச் சென்ற பேகன், மேகத்தின் வருகையைக்கண்டு ஆனந்தமுற்று ஆடியதொருமயிலைக் கண்டு, அது குளிரால் வருந்தி நடுங்குவதாய் எண்ணித் தான் போர்த்திருந்த அழகியதொருபோர்வையை அதற்குப் போர்த்தினன் என்று இவ்வரலாறு வழங்குகிறது. 'உடா போரா ஆகுதல் அறிந்தும், மயிலுக்குப் போர்வை தந்தவன் புலவர்க்கு வேண்டுவன தருதல் வியப்போ ?' எனவும் அவன் கொடுப்பது பயன் கருதியன்றெனவும்,

> "பயன்றூக்கார் செய்த வுதவி நயன் றூக்கின்
> நன்மை கடலிற் பெரிது."

என்பதற்கிணங்க, அவன் இரப்போர் வறுமை தீரவே கொடுப்பான் எனவும் புகழ்ந்துரைத்தார்.

மற்றொரு செய்யுளில், "இன்னார் இனியார் என்று பாராது எவர்க்கும் வரையாது பொழியும் மாரி போல,

பேகன் கொடைமடம் படுக லல்லது, பிறர் படை எதிர்த்து வருகையிற் படைகளைப் பிரயோகிப்பதில் அறியாமை கொண்டு தயங்கான்," என்று கூறியுளர். இனிக் கண்ணகி யென்ற அவன் மனைவி காரணமாகப் பாடிய பாடல்களை ஆராய்வோம்: அவைமிகவும்உருக்க முள்ளவை. அவற்றை இங்கு எடுத்துக்காட்டுவோம்:

"அருளா யாகலோ கொடிதே; இருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக,
நீனறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனைப்ப,
இனைத லானா ளாக, 'இளையோய்,
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்(கு)?' என
யாந்தற் றொழுதனம் வினவக் காந்தள்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா,
'யாமவன் கிளைஞரே மல்லேம்; கேளினி:
எம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வருஉ மென்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென வொலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே."*

(இ-ள்) "மாலைக்காலம் வந்தவளவில் சிறிய யாழை இரங்கலுக்குரிய பண்ணாகிய செவ்வழிப் பண் பாடுதற்கேற்றவாறு அமைத்துக்கொண்டு, மழை பெய்யும் நிலை பெற்ற நினது காட்டைப்பற்றி யாம் பாடியபோது, மணமிக்க நீல நெய்தற் பூப்போலப் பொலிந்த மையுண்ட கண்கள் கலங்கி விழுந்த கண்ணீர்த் துளிகள் பூணையுடைய மார்பை நனைப்ப வருத்தம்

* புறநானூறு—செய்யுள், 144.

தவிராதவளாய் நின்ற ஒரு பெண்மணியைக் கண்டு, 'இளமைப்பருவம் உடைய பெண்ணே, எமது கேண்மையை விரும்பும் பேகனுக்குக் கிளைமை யுடையாயோ?' என யாம் அவளை வணங்கிக் கேட்க, அவள் காந்தள் மொட்டுப் போலும் விரலாலே கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "நாங்கள் தற்காலம் அவருடைய கிளைஞர் அல்லேம். நீ இப்போது உண்மை கேட்டு அறிந்துகொள்: அவர் எம்மைப்போன்ற ஒரு பெண்ணின் அழகை விரும்பித் தேர்கள் ஒலி மிகும் முல்லை வேலி சூழ்ந்த தமது மூதூரின்கண் எந்நாளும் வாழ்ந்து வருகின்றார் என்று பிறர் சொல்லுவர்," என்றாள். இவ்வண்ணம் பேகனே, நீ அருளில்லாதிருத்தல் கொடிது."

கணவன் மனைவியர் உடனுறை வாழ்வில் இடையிடை நேரும் சிறுகலாம் பலவாம் ஆயினும், இவ்வாறு வெறுப்படைந்து பிரிவு நேர்தலும் அபூர்வமாய் உளதாமாகையால், நல்லோர் நியாய வாதம் பேசி இருவரையும் முன்போல வாழச் செய்தல் முறையே. இம்முறைபற்றி ஒரு கற்புடை மனைவியின் துயர் நீக்க வேண்டி, அவள் சார்பாக நியாய வாதம் செய்ய வந்த இப்புலவர் பெருமான், தம் வேண்டுகோளைப் பெரும்பான்மையும் அவள் நிலைமை புலப்படுத்துவதாய் அமைத்தது கவனிக்கத் தக்கது. மாதர் உரிமைக்கு வழக்கிடவும் மன்றாடவும் உரியவர் இத்தகைய நல்லோ ரல்லரோ? இவ்வளவு உருகிய வுரைக்கும் பேகன் மனம் மாறுபடவில்லை. ஆகலின், பின்னரும் ஒரு கவி பாடினார்:

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக,

டசித்தும் வாரேம்; பாரமும் இலமே.
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி,
'அறஞ்செய் தீமோ வருள்வெய் யோய்,' என
இஃதியா மிரந்த பரிசில்: அஃ திருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னா துறைவி அரும்படர் களைமே." *

(இ-ள்) "மெல்லிய இயல்புடைய மயிலொன்று குளிரால் வருந்துமென் றெண்ணிப் போர்வை உதவிய கெடாத நற்கீர்த்தி பெற்ற மதங் கொண்ட யானையும் குதிரைப்படையும் உடைய பேகனே, யாம் இப்பொழுது பசியால் வருந்தி வந்திலேம்; யாம் தாங்கவேண்டியசுற்றத்தாரும் அதிகம்இல்லை களம்பழம்போலக் கறுத்த கொம்பையுடைய சிறிய யாழை இசை யின்பம் விரும்பி வாழ்வார் தலை யசைக்க வாசித்து, 'அருளை விரும்பும் தலைவனே, அறத்தைப் புரிவாய்,' எனயாம் நின்னை இரந்து வேண்டும் பரிசில் யாதெனில், இன்றிரவே மணிகள் அழுத்திய பெரிய தேரில் ஏறிக் காண்டற்கு இனிமையின்றித் துன்பவுருவாய் வாழும் நினது மனைவி கண்ணகியின் தாங்கற்கரிய துயரைக் களை என்பதே."

இச்செய்யுளில் இப்புலவர் பரிசில் பெறும் தம் தொழிலையும் மறந்து, தமக்கு வேண்டும் பரிசிலாகப் பேகன் தன் கடமையைமுறையேசெய்யவேண்டுவதை இடித்துக் கூறியது கவனிக்கத் தக்கது. முதலிரண்டடிகளில்,

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசை,"

* புறநானூறு—செய்யுள், 145.

என அமைத்தது, வேறோர் உட்கருத்தையும் விளக்கும்: 'பேகனே, நீ மடத்தகை மாமயில் பனிக்குமென்று அருள்புரிந்து, படாம் ஈந்த கெடா நல்லிசை பூண்டாய். ஆனால், இங்கே மடத்தகை மாமயிலாகிய நின் மனைவி கண்ணகி கண்பனிப்பது கண்டும் இரங்காதிருத்தல் உன் இயல்புக்குப் பொருந்துமா?' என்று இடித்துரைத்தவாறும். தவிரவும், 'உண்மையில் வருந்தாதிருந்ததும் உன் உதவியை வேண்டாதிருந்ததும், நீ புரிந்த உதவியின் திறத்தை உணர்ந்து உன்னைப் போற்றவும் புகழவும் அறியாததும் ஆகிய மயிலுக்கே நீ உதவிபுரிந்தாய். இங்கு வருத்தம் தாங்கி யிருப்பவளும், உனது அருளையே எதிர் நோக்கி யிருப்பவளும், நீ புரியும் சிறிது அளவுள்ள உதவியையும் கண்டு உன்னைத் தெய்வமாக மதித்துப் பாராட்டிப் போற்ற வுரியவளுமாகிய உன் மனைவிக்கு இரங்குதல் உன் இயல்புக்கு இயைந்ததொன்றன்றோ!' என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. இப்பொருள் பற்றியே பெருங்குன்றூர் கிழாரும் பேகனைப் பாடி யிருக்கின்றார். அருள் நிரம்பிய பெருங்குணத்தானாகிய அவன் இவ்வரும்பொருளுரைகளைக் கேட்ட பிறகும் நல்வழிக்குத் திரும்பாது இருந்திருப்பான் என்று கூறுவதற்கில்லை.

இனி, இப்புலவர் மகட்பாற் காஞ்சி என்ற துறையிற் சில பாடல்கள் பாடியுளர். மகட்பாற் காஞ்சி என்பது, பெண் கேட்க வுரியவர் கேட்கவும், அவர்க்குக் 'கொடேன்,' என்று கூறும் நங்கையின் தன்மையையும், அப்பொழுது அப்பெண் இருக்கும் நிலையையும் வியந்து பாடுவதாம். இவ்வாறு பரணர் வாக்கில் அமைந்த செய்

யுட்கள் ஆறாகும். செங்குட்டுவனைப்பற்றி இவர் பாடிய தொரு செய்யுளும் உளது. இவற்றின் கருத்துக்களுள் இவ்வரலாற்றுக்கு வேண்டுமளவு இங்கு எடுத்துக் காட்டுவோம்:

மகட்பாற் காஞ்சியாகிய ஒரு செய்யுளின் கருத்து வருமாறு:

"மணம் செய்துகொள்ள விரும்பிய வேந்தனும் மிக்க சினம் உள்ளவனாயிருக்கிறான்; செய்தற்குரியவற்றைச் செய்ய இவள் தந்தையும் முயன்றிலன்; பொன்னாலாகிய வளையல்களை யணிந்த கொம்புகளை ஒளி பொருந்திய முகத்திலே யுடைய களிறுகளும் தம்மைக் கட்டுதற்குரிய காவன் மரத்திற் கருகிற் போகவில்லை; ஒளி பொருந்திய வேலைத் தாங்கிய மறவர்களும் வரும் விளைவை அறியாது வாயை மூடிக்கொண்டனர்; வாத்தியக்காரரும் அறியாத பல வாத்தியங்கள் முழங்க, அந்தோ! இவ்வரும் பெருங்காவல் உடைய பழையவூர் பெருங் கவலைக்குள்ளாகியது! இப்பெண்ணைப் பெற்ற தாய், பெண்ணின் இயல்பை விளக்கும் நகையொடு இப்பெரும்பகையையும் வளர்ப்பவளாயினள். ஆகையால், அவள் அறனிலள் என்றே கூற வேண்டும்."

இதைக் காட்டிலும் வீரமும் பகையும் தோன்றப் பாடிய பாடல்களும் உள. இனி இப்புலவர் பெருமான் தம் பாடல்கள் மூலம் தெரிவித்துள்ள வரலாறுகளையும் பிற குறிப்புக்களையும் ஆராயுமுன், செங்குட்டுவனைப் பற்றி இவர் பாடியதொரு பாடற் கருத்து இங்குச் சுருங்க வுரைக்கப்படும்:

"படையில் உள்ள யானைகள் மேகமாகவும், மறவர் வீசிய வாட்படை மின்னலாகவும், முரசு முழக்காக இடி முழக்கங் கேட்ட அரசராகிய அரவங்கள் நடுங்கும் துன்புறு பொழுதில்,

குதிரைகள் சுழல் காற்ருகவும், வில்நாணில் செலுத்திய அம்பு மழை பொழியும் அகன்ற போர்க்களமாகிய ஈர வயலுக்கு ஏற்ற கலப்பையாகத் தேரைச் செலுத்திப் படைஞர் கைப் படைகளாற் கீழ்மேலாகத் திருப்பப்பட்ட சாலில் பகைவரிடம் கைக்கொண்ட வேல்களையும் கணையமரம் என்னும் ஆயுதத்தையும் விதைத்துத் தலை சாய்ந்த அச்சந் தரும் பயிரைப் பேய்களும் பிறவும் நரிக் கூட்டங்களோடு புகுந்து கைக்கொள்ள வரப் பூதம் காப்ப இருந்த இவ்வருங்கலையி லிருந்த களத்தைக்கொண்டு ஆண்மை சிறந்து, பாடுவார்க்குக் காட்சி கொடுப்பவனாய் இருந்த அரசனே, பாடல் பாடி, யாழும் வாசித்து, உன்னைக் கண்டு கொள்ள வந்தேன். குட்டியும் பிடியும் உடையதொரு பெருங்களிற்றைப் பரிசிலாகக் கொடுக்க வேண்டுகிறேன்.''

ஒரு போர்க்களத்தை இதைக்காட்டிலும் அழகுற வருணிக்க வேண்டுமென்று வேறு எப்புலவரும் நினைக்கவும் இடமிராதவாறு இப்புலவர் பாடிய பாடல் பண்டைத்தமிழ் அரசருள் போர் வெற்றியிற் சிறந்த செங்குட்டுவன் சிறப்பை நன்கு விளக்குவதாம். பதிற்றுப் பத்திலும் இப்புலவர் பெருமான் செங்குட்டுவனைப் பற்றியே பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் இரண்டொரு கருத்துக்கள் இங்கே காட்டப்படும்:

பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தில் உள்ள பத்துப் பாடல்களும் பாணர் பாடியவை யென்பது முன்னரே கூறப்பட்டது. அவற்றுள் செங்குட்டுவனது சிறப்பையும் புகழையும் விளக்குவது எல்லாச் செய்யுட்கும் ஒப்ப முடிந்ததாயினும், இரண்டொரு செய்யுட்களுள் அவன் சரித்திரத்தை விளக்கும் சிறு குறிப்புக்களும் உள. அவற்றை நன்கு ஆராய்ந்து விளக்கிச் 'சேரன்

சேங்குட்டுவன்' என்னும் ஒரு வசன நூல் எழுதிய மு. இராகவையங்கார் என்னும் தமிழ்ப் பெரும்புலவர் தமிழுலகிற்கு இயற்றிய திருப்பணி மறக்கத் தக்க தன்று. அக்குறிப்புக்களுட் சில இங்கு எடுத்துக் காட்டப்படும்:

"வடதிசை யெல்லை யிமய மாகத்
தென்னங் குமரியொ டாயிடை யரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவி னழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!"

இவ்வடிகளால், செங்குட்டுவன் பாரத நாடு முழுவதும் ஆண்ட வரலாறு கூறப்பட்டது.

"பெரிய வாயினும் அமர்கடந்து பெற்றது
அரிய வென்னா தோம்பாது வீசி."

இவ்வடிகளால் செங்குட்டுவன் கொடைப் பெருமையும்,

"மோகூர் மன்னன் முரசங் கொண்டு,"

என்பதால், அம்மன்னன் மோகூர் மன்னன் என்னும் சிற்றரசனைப் போரில் வென்ற செய்தியும் சொல்லப் பட்டன. மழைகொளக் குறையாது புனல் புக நிறை யாது உள்ள கடலின் தன்மை அவனுக்கமைந்ததா கவும் கூறினர். 'கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு' என்ற அடியால், அவன் பெயர்க்கு முன் உள்ள கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்னும் அடை மொழிப் பொருள் விளங்கும். இவ்வாறு நம்புலவர் பெருமான் தம் செய்யுட்கள் பலவற்றிலும் ஒவ்வொரு சரித்திரக் குறிப்பு அமைத்திருக்கும் அழகை விவரிப்

பது இச்சிறு புத்தக அளவுக்குள் அடங்காது. ஆயினும், மிகவும் முக்கியமாய் உள்ள சில குறிப்புக்கள் இவர் பாடிய பிற செய்யுட்களில் வந்துள்ளவற்றி லிருந்து எடுத்துக்காட்டப்படும்: பதிற்றுப் பத்துப் பாடியதால் இவர் பெற்ற பரிசில், சேர நாட்டுள் அக்காலத்திருந்த உம்பற் காட்டு வருவாயும், அச்சேரவரசன் குமரன் குட்டுவன் சேரல் என்ற இளவரசனுமாம். பதிற்றுப் பத்துள் இப்புலவர், "கரண மமைந்த காசறு செய்யுட் டரணர்," என்று கூறப்பட்டுளர்.

கொல்லிப் பாவை என்றவொரு பெண் தெய்வத்தைப்பற்றி இப்புலவர் நற்றிணை 201-ஆம் செய்யுளில்,

"செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வங் காக்குந் தீதுதீர் நெடுங்கோட்
டவ்வெள் ளருவிக் குடவரை யகத்துக்
கால்பொரு திடிப்பினுங் கதழுறை கடுகினும்
உருமுடன் றெறியினும் ஊறுபல தோன்றினும்
பெருநிலங் கிளரினுந் திருநல வுருவின்
மாயா வியற்கைப் பாவை."

எனவும், குறுந்தொகை, 89-ஆம் செய்யுளில்,

"பேஎமுதிர் கொல்லிக் கருங்கட் டெய்வம்."

எனவும், அகநானூறு, 62-ஆம் செய்யுளில்,

"களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
யொளிறுநீ ரடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவு ளெழுதிய பாவை."

எனவும் பாடி, அதன் இயல்பையும் நிலையையும் விளக்கினர்.

இவர் நன்னன் என்னும் ஒரு சிற்றரசன் இயல்பை நாடு அறியச் செய்ததும் கவனிக்கத்தக்கது: நன்னனைப் பற்றி நற்றிணையில், 'வேந்த ரோட்டிய வேந்துவேல் நன்னன்,' என்று பாடி, குறுந்தொகையில்,

"மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்(கு)
ஒன்பதிற் றேன்பது களிற்றேடும் அவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன்."

என்று பாடி, அவன் கொடுமையை அறிவித்தார்.

இந்நன்னன் என்பவன் மேலைக் கடலோரத்தில் உள்ள பூழி நாட்டையாண்டவொரு சிற்றரசன். இவனது தோட்டத்தில் இருந்த மா மரத்தின் பசுங்காய் ஒன்று அங்கு அருகில் ஓடிய ஒரு கால்வாயில் விழுந்து வந்ததை அங்கு நீராடச் சென்ற ஒரு பெண் எடுத்துத் தின்ற தவற்றுக்காக அவளை மன்னித்துப் பொறுத்தருளும்படி அவள் தந்தை எண்பத்தொரு களிறுகளும் அவள் நிறையளவு பொன்னும் தருவதாகக் கூறி வேண்டியும் கேளாது கொல்வித்தான் என்ற வரலாறு இந்நாள்வரை நாம் அறிய வைத்தவர் பரணர் என்ற பாவலரே யாவர்.

சோழன் கரிகாற் பெருவளத்தான் மகளார் ஆதிமந்தியார் என்ற கற்பரசியாரின் வரலாறு இவராற் பல செய்யுட்களிற் கூறப்பட்டுளது.

அகநானூற்றில், 135-ஆம் செய்யுளில்,

"எழுதெழில் மழைக்கண் கலுழநோய் கூர்ந்து
ஆதி மந்தியின் அறிவுபிறி தாகி."

எனவும், 222-ஆம் செய்யுளில்,

"கழாஅர்ப் பெருந்துறை விழவி னாடும்
ஈட்டெழிற் பொலிந்த வேந்துகுவவு மொய்ம்பின்
ஆட்ட னத்தி நலனயந் துரைஇத்
தாழிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ்."

எனவும், 236-ஆம் செய்யுளில்,

"ஆட்ட னத்தியைக் காணீ ரோவென
நாட்டி னாட்டி னூரி னூரிற்
கடல்கொண் டன்றெனப்புனலொழிந் தன்றெனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த
ஆதி மந்தி."

எனவும், 376-ஆம் செய்யுளில்,

"ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறை
கலிகொள் சுற்றமொடு கரிகால் காண

* * *

புனனயந் தாடும் அத்தியணி நயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு."

எனவும், 396-ஆம் செய்யுளில்,

"ஆர்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்பநின்
மார்பு தருகல்லாய் பிறனா யினையே
இனியான் விடுக்குவ னல்லனெண மந்தி
பனிவார் கண்ணள் பலபுலந் துறையக்
கடுந்திற லத்தி யாடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்கு."

எனவும் பாடியவை கவனிக்கத் தக்கன. இவ்வாறு இப்புலவரால் நாம் அறியும் வரலாறுகள் பலவாம்.

6. நக்கீரர்

தருமி பொருட்டாற் பரமனோ டெதிர்த்த
புலவர் எனப்பலர் புகலும்
நக்கீரர் சால்பினை நாவால் அளத்துமே.

பாண்டிய நாட்டின் தலை நகராகிய மதுரை நகரில் எவரும் அறியப் புகழ் படைத்த தமிழ்ப் பெருங்கணக்காயர் ஒருவர் இருந்தார். அவர் நாடெல்லாம் தமது இயற்பெயரை எவரும் அறியாது கணக்காயர் என்றே கூறத்தக்க அத்துணைச் சிறப்பு அடைந்திருந்தார். அப்புலவர் பெருமான் பாடிய பாடல்கள் எட்டுத் தொகை நூல்களிற் சில உள. மதுரைக் கணக்காயனார் என்ற அப்புலவரே தமிழராவார் அனைவரும் இன்றளவும் அறிந்திருக்கும் நக்கீரர் என்ற புலவர்க்குத் தந்தையாராவர். அதனால், நக்கீரர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்றே சங்க நூல்களிற் கூறப்படுகிறார். மதுரை நக்கீரர் என்னும் மற்றொரு பெயர் சங்கச் செய்யுள் செய்த புலவர் வரிசையில் உண்டு. இரு பெயரும் ஒருவருக் கமைந்தனவே என்பது நற்றிணைப் பதிப்பாளர் கருத்தாமாயினும், சில தகுந்த காரணங்களால் மதுரை நக்கீரரும் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் இரு வேறு புலவரே யென்பது தாக்ஷிணாத்ய கலாநிதி மகா மகோபாத்தியாய-வே. சாமிநாதையரவர்கள் கொள்கையாம். மதுரை நகரில் அக்

காலத்திருந்த தமிழ்ச் சங்கப் புலவர்களில் தலைமைபூண்டிருந்தவராய் மதிக்கப்படுகிற நக்கீரனார் வரலாறே இங்கு ஆராயப் படுவதாம்:

இவரியற்றிய செய்யுட்கள் பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்ற இரண்டும், புறநானூற்றில் இரண்டும், அகநானூற்றில் பதினேழும், நற்றிணையில் ஏழும், குறுந்தொகையில் எட்டும் உளவாம். யாப்பருங்கலவிருத்தியில் நக்கீரர் நாலடி நாற்பது என்றதொரு செய்யுட் பெயர் வருகிறது. அஃது இவர் இயற்றியதோ, அன்றோ என்று உறுதிசெய்யவழியில்லை.

இவரது இயற்பெயர் கீரன் என்பது; ந என்னும் எழுத்துச் சிறப்பு உணர்த்துவது என்பர். மகன்றந்தைக் காற்றும் உதவியையும், தந்தை மகற்காற்றும் நன்றியையும், ஒருவர்க்கொருவர் நன்கு புரிந்துகொண்ட கணக்காயரும் அவர்மகனார் நக்கீரனாரும் தமிழுலகமும் தமிழ்மொழியும் உள்ளவளவும் தமிழராகிய நம்மால் மறக்கவியலாத புலவரேயாயினும், இவர் இன்ன குலத்தவர் என்பது நாம் இன்னும் உறுதிசெய்ய இயலாததாகவேயுளது. சிலர் இவர் அந்தணருள் ஒருவகையார் என்பர்; வேறு சிலர் வேளாளர் என்பர்; மற்றுஞ் சிலர் வணிகர் என்பர். இவ்வாறு பல பண்டைப் புலவருடைய குலம் இன்னும் உறுதியாய் அறியப்படாமையால், இவ்விஷயத்தில் நாம் ஒன்றும் துணிந்து கூறுதற்கில்லை. இப்புலவர் பெருமானைப்பற்றித் திருவிளையாடற் புராணத்திலும் சீகாளத்திப் புராணத்திலும் வழங்கும் வரலாறுகள் பிறகு ஆராயப்படும்; சங்க நூல்களைப் பின் பற்றிய வரலாறு முன்னர் வரையப்படும்:

திருமுருகாற்றுப்படை என்னும் பாட்டு இப்புலவர் பெருமானால் இயற்றப்பட்டது என்பது முன்னர்க் கூறப்பட்டது. அச்செய்யுளில்,

“அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கோற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.”

என முருகப்பிரான் திருவருளைப் பெற்றான் ஒருவன், அதைப் பெற முயல்வான் ஒருவனுக்கு அவன் செல்லற்குரிய வழியைத் தெரிவித்தவாறாகப் பாடப்பட்டுள்ளது. அப்பாட்டிலுள்ள,

“இருணிற முந்நீர் வளையஇய வுலகத்
தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கும்.”

என்னும் அடிகளால் அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டவன் பெறும் பரிசிலும் தெரிவிக்கப்பட்டது. இப்புலவர் பெருமானது பக்திப் பெருக்கமும், தமிழ்ச் செய்யுள் சுவை பட அமைக்கும் திறமும் இச்செய்யுளால் அறியப்படுதல் இதனைப் பாராயணம் செய்வோர் அறிவர்.

பத்துப்பாட்டினுள் நெடுநல்வாடை என்பதும் இப்புலவர் இயற்றியதேயாம். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற புலமை

சிறந்த புரவலனைப் புகழ்ந்த இச்செய்யுள் கார்காலத்தை நன்கு வருணித்து விளக்குவதாம். போரின்பொருட்டுச் சென்று பாசறையில் தனித்து மனம் பொறுத்திருக்கும் தலைவனைப்பற்றியும், அவன் பிரிந்ததால் மனம் வருந்தியும் நாட்டுள் பொறுத்திருக்கும் தலைவியைப்பற்றியும் சிறப்பிக்கும் இச்செய்யுள் மிகவும் சுவையுடையது. இதிற் சில அடிகள் இங்கே எடுத்துக்காட்டப்படும்:

"மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்."

இவ்வடிகள் இயற்கைநலந் தோன்றமழைக்காலம்இருக்கும் நிலையைத் தெரிவித்தல் கவனிக்கத் தக்கது.

"யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையகல் நிறையநெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
யறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதோறும் பாயிருள் நீங்க,"

இவ்வடிகள், யவனர் செய்த பாவை விளக்குகள் எரியும் இயல்பை விளக்குவனவாம்.

"அம்மா சூர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு
புனையா வோவியம் கடுப்பப் புனைவில்
தளிரேர் மேனித் தாய சுணங்கின்",

இவ்வடிகள், தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியின் நிலையை அழகுற விளக்கும்.

“விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனோடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச்சில தெறியாப்
புலம்போடு வதியும் நலங்கிள ரரிவை.”

இவ்வடிகளும் இயற்கையொடு பொருந்தத் தலைவியின் தனிப்படர் மிகுதி தெரிவிப்பனவாம்.

“புடைவீ ழந்துகில் இடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.”

என்னும் இவ்வடிகளால் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் போர்க்களத்துப் பாசறைக்கண் இருக்கும் நிலை அழகுற விளக்கப்பட்டுளது. இதன் கருத்து,

“பாசறைக்கருகில் நள்ளிரவிலும் துயில் கொள்ளாமல் பகைவரை அழிக்கும் உபாயத்தை ஆராய்ந்துகொண்டிருந்த அரசன், இடத்தோளிலிருந்து சரிந்து வீழ்ந்த தனது உத்தரீயத்தை இடப் பக்கத்தில் தழுவிப் பிடித்துக்கொண்டு, வாளைச் சுமந்து வரும் வீரன் ஒருவன் தோள்மேற் கையைத்

துச்சாய்ந்துகொண்டு, நூலாற் சட்டத்தைக் கட்டின முத்து மாலையையுடைய வெண்கொற்றக் குடையானது தவ்வென்னும் முழக்கொடு அசைந்து பரவும் மழைத்துளியை மேலே விழாமல் தடுக்கச் சிலரோடு சஞ்சரித்திருந்தான்.''

என்பதாம். இதனுல், அவன் தனித்திருந்து போரிற் சிந்தை செலுத்தி யிருந்ததும் அழகுறத் தெரிவிக்கப் பட்டது.

பத்துப் பாட்டில் இரண்டு பாட்டுப் பாடிய இப் பெரும்புலவர், புறநானூற்றிலும் இரண்டு செய்யுட்கள் செய்துளர். அவற்றுள் ஒன்று, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியதாம்; மற்றொன்று, பொருண்மொழிக் காஞ்சி என்னும் துறையில் உயர்ந்தகொள்கையை உலகிற் குணர்த்துவதாய் அமைந்தது. இவ்விரண்டு செய்யுட்களும் இங்கு வேண்டுமளவு ஆராயப்படும். பின்னதாம் செய்யுளை முன்னர் ஆராய்வோம்:

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்;
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே;
பிறவு மெல்லா மோரொக் கும்மே.
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.''*

(இ - ள்) "தெளிந்த நீரால் நிரம்பிய கடல் சூழ்ந்த உலகம் முழுவதையும் பிற வேந்தர்க்கும் தமக்கும் பொதுவாகாமல்

* புறநானூறு—செய்யுள், 189.

தமக்கே உரிமையா யிருக்க அடக்கி வெண்கொற்றக் குடை நிழற்ற அரசாண்ட பெருமையையுடைய வேந்தர்க்கும், இடையிரவிலும் நண்பகலிலும் துயிலாதவனாய் விரைந்தோடும்மிருகங்களைப் பிடிக்கக் கருதிப் பதுங்கி யிருக்கும் கல்வியறிவில்லா வேடனுக்கும் உண்பது நாழி; உடுப்பவை இரண்டு துணிகளே; பிற அனுபவங்களும் எல்லாம் ஒப்பேயாம். ஆனல், 'செல்வத்தின் பயன்தான் என்ன?' என்று வினவுவீ ராயின், மனங்கொண்ட மட்டும் அன்போடும் ஆதரவோடும் பிறர்க்கு ஈதலேயாம். நாமே எல்லாவற்றையும் அனுபவிக்கலாம் என்று எண்ணுவீர்களாயின், தவறிப்போவன பலவாம்."

இச்செய்யுளால் அறியவைத்த நீதி மிகவும் போற்றத்தக்கது. உலக முழுவதும் பொதுவற ஆளும் வேந்தனும், இரவும் பகலும் உயிர்க் கொலையே கருதியிருக்கும் அறிவில்லாத வேடனும் ஒரு நிகராதல் எதனாலெனில், அரசன் காக்க அமைந்தவனாயினும் கல்வியும் அறிவும் படைத்தவனாதலால் பல வழிகளாலும் தான் பெறும் செல்வத்தை உரிய வழிகளால் நல்லோர்க்குப் பயன் படுத்தக் கடமைப்பட்டவனாயிருக்கவும் அதை அறியாதவனாய் உண்பதும் உடுப்பதுமாகக் கழிவனாயின், அவன் அவ்விரண்டு செய்வதே தன் தர்மமாக வுடைய வேடனுக்கு இயல்பால் நிகராதலால் என்க. பிறவும் என்பதால், உலகத்தில் அனுபவிக்கும் பிற போக போக்கியங்கள் எல்லாம் தெரிவிக்கப்பட்டன. இதனால், அரசர் கைக்கொள்ளத் தக்க அறம் நன்கு தெரிவிக்கப்பட்டுளது. இனி மூன் செய்யுள் ஆராயப் படும்:

"ஏற்றுவல னுயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்,
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்,
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்,
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்கும் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வ ருள்ளும்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்;
வலியொத் தீயே வாலி யோனை;
புகழொத் தீயே யிகழுந ரடுநனை;
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்;
ஆங்காங் கவரவ ரொத்தலின், யாங்கும்
அரியவும் உளவோ நினக்கே? அதனால்,
இரவலர்க் கருங்கல மருகா தீயா,
யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாள் மாற,
அங்கண் விசும்பின் ஆரிரு ளகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும் குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇயர் உலகமோ டுடனே." *

* புறநானூறு-செய்யுள், 56.

இச்செய்யுட் கருத்து, "சிவபெருமான் பலராமன் திருமால் முருகப்பிரான் என்னும் நாலு தேவர்க்கு நிகராகச் சீற்றமும், வலிமையும், புகழும், நினைத்தது முடிக்கும் திறமையும் உடைய அரசனே, நினக்கு அரியது ஒன்றும் இல்லை. ஆகையால், இரவலர்க்கு வேண்டும் பொருள் எல்லாம் குறைவறக் கொடுத்து, இன்ப வாழ்க்கையில் வாழ்ந்து, ஞாயிறும் திங்களும் போல நிலை பெற்ற வாழ்வு பெறுவாயாக," என்று வாழ்த்தியதாம்.

இத்துணை அழகுறப் புகழ்ந்து வாழ்த்தும் திறம் நிறை மொழிப்புலவராகிய இவர்க்கன்றிவேறுஎவர்க்கு இயலும்? இவனே பெரும்புலமை பெற்ற அரசனாகை யால், எதிர்த்தாரை வென்ற வேந்தனாகையால், இப் புகழ் பெறற்கு உரிமையுடையானுமாயினன்.

இனிஇப்புலவர் பெருமான் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்னும் தொகை நூல்களிற் செய்திருக்கும் செய்யுட்களைக் கொண்டு, இவர் சரித்திரத்தை ஆராய்வோம்:

நற்றிணையில் 340-ஆம் செய்யுளில்,'கல்லாயானைக் கடுந்தேர்ச் செழியன்,' என்றொரு பாண்டியனைப்பற்றியும், வாணன் சிறுகுடி என்றதொரு சிற்றூரைப் பற்றியும் புகழ்ந்துளர். 358-ஆம் செய்யுளில், பசும்பூண்வழுதி என்னும் ஒரு பாண்டியன்பெயர் வருகிறது. சிறுவெண் காக்கை பகலில் இரைதேடுமாறு இச்செய்யுளிற் கூறப் பட்டது. இதனால், அக்காலத்து வெண்காக்கைகள் இருந்தன என்பது அறியப்படும். 367-ஆம் செய்யுளில் உள்ள பின் வரும் அடிகளால் அருமன் என்ற ஒருவன் இயல்பு அறியப்படுகிறது:

"கோடுங்கட் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக்கிளை பயிர்ந்து
கருங்கட் கருனைச் செந்நெல்வெண் சோறு
சூருடைப் பலியோடு கவரிய குறுங்காற்
கூழுடை நன்மனை குழுவின விருக்கும்
மூதி லருமன் பேரிசைச் சிறுகுடி."

(இ-ள்) "கோணலாகப் பார்க்குங் கண்களையும் கூர்மையான வாயையுமுடைய காக்கைப் பேடை, நடுங்குகின்ற இறகுகளையுடைய தன் குஞ்சைத் தழுவிக்கொண்டு, தன் சுற்றமாகிய காக்கைகளைக் கூவி யழைத்து, கரிய தோலையுடைய கருனைக்கிழங்குக் கறியோடு செந்நெல்லரிசியாற் சமைத்த வெண் சோற்றை தெய்வத்துக்கிடும் பலியுடனே கவர்ந்துகொள்ளுமாறு குட்டையான கால்கள் நாட்டிக் கட்டிய மிக்க உணவு உள்ள நல்ல வீடுகள் கூடியிருக்கும் புகழ் மிக்க அருமன் என்பானது சிறுகுடி என்ற சிற்றூர்."

இச்செய்யுளில் காக்கையின் இயல்பும், காக்கைக் குஞ்சின் இயல்பும், அக்காலத்துத் தமிழ் மக்கள்பிதிர்க் கடன் கழித்தலும், வாயச பிண்டம் இடுதலும், அவர் வாழ்ந்த வாழ்க்கையும் நன்கு விளங்க இயற்கை நலம் தோன்ற விளக்கி யிருத்தல் அறியப்படும்.

குறுந்தொகையில் இப்புலவர் பாடிய செய்யுட்கள் எட்டு என்பது முன்னமே குறிக்கப்பட்டது. குறுந்தொகையில் 78-ஆம், செய்யுளில் "மலையருவி கூத்தரது முழவு போலஒலிக்கும்," என்பர்; 105-ஆம் செய்யுளில், "தெய்வத்துக்கென்று நேர்ந்த தினைத்தாள்களை அறியாது தின்றமயில்கள் வெறியாடு மகள்போல் பெருமூச்சுவிட்டு நடுங்கிநிற்கும்," என்பர்; 131-ஆம்செய்யுளில், 'ஈரமுள்ள

பைம்புனத்தில் ஓரேருழவன் நினைத்ததை நிறைவேற்ற இயலாது மயங்குதல், தலைவன் சேணிடையுள்ள தலைவியின் ஊரை நினைந்து வருந்துதற்கு நிகராம்,' என்பர்; 143-ஆம் செய்யுளில், "நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற் கடப்பாட்டாளன் உடைப்பொருள் தூங்குதற்கு உரியதன்று," என்பர்; 161-ஆம் செய்யுளில், மழைக்கால இரவையும் நற்றாயின் இயல்பையும் அழகுறத் தெரிவிப்பர்; 266-ஆம் செய்யுளில், "புள்வாய்த் தூது விடுதற்குரிய சந்தர்ப்பம் தெரிவிப்பர்; 280-ஆம் செய்யுளில், தலைவனது அநுராகப் பெருமையை அளந்துரைப்பர்; 368-ஆம் செய்யுளில், "சிறியரும் பெரியரும் வாழும் ஊரில்இடையறா நீர்ப்பெருக்குடையகுளக் கரையில் உள்ள பெரிய மரம் பல வகை நிலைமையும் அடைந்திருக்கும்," என்று அழகுற வருணிப்பர். இவ்வாறு தாம் பாடும் நிலங்கட் கேற்றவாறெல்லாம் கருத்துக்களை அமைக்கும் ஆற்றல் இப்புலவர்க் கமைந்திருந்தது, பாராட்டுதற் குரியதே.

அகநானூற்றில் இவர் இயற்றிய செய்யுட்களுள் அமைந்த பின் வரும் வரலாறுகளும் கருத்துக்களும் கவனிக்கத் தக்கனவாம். 36-ஆம் செய்யுளில், நெடுஞ்செழியன், (சேரலன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், இயறேர்ப்பொருநன் என்ற) எழுவர் நல்வலம் அடங்க, ஒரு தினத்தில் முரசும் வெண்குடையும் அகப்படப் புகழ் பெறுமாறு கொன்று களங் கொண்ட காலத்து எழுந்த வீரரார்ப்பை விரித்துரைப்பர்; 57-ஆம் செய்யுளில் செழியன் கடலருகுள்ள முசிறியை முற்றிக் களிறுகள் அழிய

எதிர்த்துப் பொருத பெரும்போரிற் புண்பட்டோர் செயல் செப்புவர்; 78-ஆம் செய்யுளில், வாய்மொழிக் கபிலர் செய்தி யொன்றினை அழகுற வமைப்பர்; அச் செய்யுள் அடிகள் எளிதினமைந்த அரும்பொருளன வாதலாற் கருதிய பொருளை விளக்குமாறு இங்குக் காட்டப்படும்:

> "உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
> வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
> செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
> தடந்தா ளாம்பல் மலரோடு கூட்டி
> யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
> தாளிடூஉக் கடந்து வாளமருழக்கி
> யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
> கடும்பரிப் புரவிக் கைவண் பாரி."

கபிலர் பெருமை இவ்வடிகளால் நன்கு விளங்கும். 93-ஆம் செய்யுளில், ஆரங்கண்ணி அடுபோர்ச் சோழர் அறங்கெழு நல்லவையுள்ள உறையூரையும், அரண்பல கடந்த முரண்கொள் தானையையுடைய வாடா வேம்பின் வழுதி கூடலில் உள்ள நாளங்காடியையும், கடும் பகட்டியானை நெடுந்தேர்ச் சேரன் திருமாவியனகராம் கருவூரின் முன்றுறையில் உள்ள உயர் கரையுடைய தெளிந்நீர் நிரம்பிய ஆன்பொருநையையும் அழகுறப் புகழ்ந்துரைப்பர்; 126-ஆம் செய்யுளில், வேள் எவ்வியிடம் பாண் மகள் கழங்கு நிகர் முத்தமும் பல்கலனும் பரிசில் பெறும் பெருமையைப் புகழ்வர்; அத்தகைய எவ்வி சமாதான மொழி கூறியும் கேளானாய்த் திதியன்

என்ற வள்ளலொடு போர் செய்த அன்னி யென்பான் மாண்ட வரலாறும் கூறுவர்; 205-ஆம் செய்யுளில், உயிர்கலந்தொன்றிய பழமையாம் நட்பினர் செயிர் தீர்நெஞ்சமொடு சேர்ந்தோர் செய்கையும் வாய்மொழி நிலைத்த சேண்விளங்கு நல்லிசை வளங்கெழுகோசர்தம் படைகளை யழித்து நாடு கொளக் கருதிய கிள்ளி என்ற சோழனது காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும் அமைத்துரைப்பர்; 227-ஆம் செய்யுளில், தமிழகப் படுத்த இமிழிசை முரசம் முழங்கும் வருவார்க்கு வரை யாத பெருநாள் இருக்கையில் தூங்கல் என்ற பறவை கள் பாடியிருக்கும் ஒங்குபெரு நல்லிசையையுடைய தழும்பன் என்பானது ஊணூர்ச்சிறப்பும், மருங்கூர்ப் பட்டினத்து ஆவணச் சிறப்பும், அங்குள்ள முழக்கத் தளவும் அளந்துரைப்பர்; 249-ஆம் செய்யயுளில், வேம்பி என்ற வூரில் வாழ்ந்த முசுண்டை என்பான், பாணர் இரப்பின் ஆனேறுகளை மாலை பூட்டிப் பொன் னல் அலங்கரித்துப் பரிசிலாக ஈயும் பெருமையை வியந்துரைத்துப் பின்னரும் மழவர் என்ற வீரர்கள் 'நாகா வீழ்த்துத் திற்றி தின்றல்' என்ற பொழுதுபோக்கு அயர்வதையும் விவரித்துரைப்பர்; 253-ஆம் செய்யு ளில், வாடாப் பூவிலையுடைய கொங்கரைப் புறங்காட்டி யோடச் செய்து, அவர் நாடுகளைக் கொண்ட பாண்டி யன் கூடலில் இன்னிசை யார்ப்பு இறன்றதையும், வடு கர் வேங்கடனுகிய எருமை யென்பானது அயிரி என்னும் ஆற்றின் இயற்கையையும் விளங்கவுரைப்பர்; 290-ஆம் செய்யுளில் குட்டுவன் என்ற சேர வரசனது தொண்டி யென்ற கடற்கரைக்கண்ணதாகிய நகரைப்பற்றிப்பேசு

வர் ; 340-ஆம் செய்யுளில் திரையன் என்ற வேந்தனது பவத்திரி என்ற நகரைப்பற்றியும், வட நாட்டவர் செய்து தந்த நல்ல நிறமுடைய வட்டக் கல்லில் சந்தனம் அரைக்கும் இயல்பைப்பற்றியும்கூறுவர் ;346-ஆம் செய்யுளில், பழையன்மாறன், மாடமலி மறுகிற் கூடல் நகரின்கண் பெருத்த சேனையோடு வந்த கிள்ளி வளவனை வென்றதாற் கோதை மார்பன் உவந்த உவகையின் பெருமையைப் பேசுவர் ; 369-ஆம் செய்யுளில் கடல்போன்ற சேனையுள்ள வள்ளன்மை மிக்க சோழர் நகராகிய கெடாச் சிறப்புள்ள உறையூர் நிதியுடை நன்னகராம் என்பர் ; 389-ஆம் செய்யுளில்,

" இரப்போ ரேந்துகை நிறையப் புரப்போர்
புலம்பி லுள்ளமோடு புதுவதந் துவக்கும்
அரும்டோருள் வேட்டம் எண்ணிக் கறுத்தோர்
சிறுபுன் கிளவி செல்லா பாழ்பட
நல்லிசை தம்வயின் நிறுமார் வல்வேல்
வான வரம்பன் நன்னாடு "

என அமைத்து, வானவரம்பன் நன்னாட்டைப்புகழ்வர்.

இவ்வாறு இவர் பாடியுள்ள பல அகப்பொருட் செய்யுட்களிலும் இடையிடை வந்துள்ள வரலாறுகள் பலவும் இவர் சரித்திரத்தோடு சம்பந்தப்பட்டன என்பதை நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம். புறப்பாடல்களிலே படுமாறு வெளிப்படையாற் புகழலாகாத அரசர் பெருமைகளை உவமை முகத்தால் அகப்பாட்டுக்களிலும் அமைத்துரைப்பது புலவர் வழக்கு ஆகும். அம்முறைபற்றி, இப்புலவரும் தாம் அறிந்த

பல புரவலரையும் வேளிரையும் இவ்வண்ணம் உரிய விடங்களிலே அமைத்துப் புகழ்ந்தார் என்று நாம் அறிதல் வேண்டும். இவ்வாறு கருதுவோமாயின், இவர் பாண்டியர், சோழர், சேரர் ஆகிய மூவகை யரசரிடமும் பிற வள்ளல்களிடமும் பயின்று பாடிய புலவர் என்பது விளங்கும்.

இனி இவரைப்பற்றி வழங்கும் பண்டை வரலாறுகள் சிலவற்றை ஆராய்வோம்: தொல்காப்பியச் செய்யுளியலில், 178-ஆம் சூத்திரமாகிய,

> "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திர மேன்ப."

என்றதனுரையிற் பேராசிரியர், "மந்திரச்செய்யுள் வல்லார் வாய்க் கேட்டுணர்க. இவை தமிழ் மந்திர மென்றற்கும், பாட்டாகி அங்கதமெனப்படும் அவற்றை நீக்குதற்கும், "தானே என்று பிரித்தார்," என்று பொருள் பட எழுதி, இரண்டு செய்யுட்களை அங்கதத்திற்கு உதாரணமாகக் காட்டினர். அவை வருமாறு:

> "முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி;
> பரண கபிலரும் வாழி;—அரணிய
> வானந்த வேட்கையான் வேட்கோக்குயக்கோடன்
> ஆனந்தஞ் சேர்க்கசுவா கா."
> ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
> காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்--சீரிய
> அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையினாற்
> செந்தமிழே தீர்க்கசுவா கா."

இச்செய்யுட்களின் கீழ்க்குறிப்பாகப் பேராசிரியர், "இவை தெற்கண் வாயில் திறவாப் பட்டிகை வரைந்திருப்பது,

பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப்பாட்டாயின்,'' என்பதே. இதனை நன்கு கவனித்துப் பார்த்தால், இவ்விரு செய்யுட்களும் நக்கீரராற் பாடப்பெற்றன வென்பதும், ஒன்று ஒருவனை வாழ வைக்கவும், மற்றொன்று இன்னொருவனைச் சாக வைக்கவும் பாடிய அங்கதப் பாட்டுக்களாம் என்பதும் அவர் கருத்தாம் என்பது விளங்கும். குயக்கோடன் என்பது பிற்காலத்தில் குயக்கொண்டான் என்று கொள்ளப்பட்டது. இதனால் விளங்கும் வரலாறு வருமாறு :

பாண்டிய நாட்டிலே மதுரையம்பதியிலே, நக்கீரர் காலத்திலே, தெற்கு வாயில் என்ற நகரப் பகுதியில் அமைந்திருந்த பட்டி மண்டபத்தில் வீற்றிருக்கும் அறிவுடைப் புலவர் பலர்க்கிடையில் குயவனாகிய கோடன் என்பவன் ஒருவன், மனந் துணிந்து, 'ஆரியம் நன்று; தமிழ் தீது,' என்று கூறினன். அது கேட்டுப் பொறாத பட்டி மண்டபத்தார் அங்கிருந்த நக்கீரரைப் பார்த்து, "புலவரேறே, நும் முன்னிலையில் இப்புல்லியோன் இவ்வாறு கூற, நீவிர் பொறுத்திருக்கலாமா?" என்று வினவினர். அதனைச் செவிக்கொண்ட நக்கீரர், உடனே தமிழின் பெருமை நாட்டக் கருதித் தமிழ்ப் பரம குருவாகிய அகத்தியரைப் பொதியில் முதற்புத்தேள் என்று புகழ்ந்து வாழ்த்திப் பாண கபிலரையும் வாழ்த்தி, 'வேட்கோவர் குலத்துப் பிறந்தானாகிய குயக்கோடன் மாரணம் அடைக,' என்று சபித்தார். உடனே அவன் இறந்து விழுந்தது கண்ட பட்டி மண்டபத்தார், அவன்பாற் கருணை கூர்ந்து, நக்கீரரை நோக்கி, "இவன்

உயிர் பெறப் பாடுக,'' என்றனர். அவரும் அவ்வாறே, "ஆரியம் நன்று தமிழ் தீது என வுரைத்த காரியத்தாற் காலன்வாய்ப் பட்டானைப் பொதிய மலையில் வாழும் அகத்தியமுனிவர் ஆணையாற் செந்தமிழே,உயிர்கொடுத் துக் காப்பாற்றுக,'' என்று வாழ்த்தினர். உடனே அவன் பிழைத்தெழுந்து, நல்லறிவு படைத்தவனாய், அப்புலவர்களை வணங்கிச் சென்றான்.

இவ்வாறு இரண்டு செய்யுளையும் பெற்றவன் ஒருவனே யென்பது பொருத்தமாமென்றறிந்து, பிற்காலத் தார் அவ்வாறு துணிந்தனர். பேராசியர் உரையில் ஒருவனே என்ற சொல் இரண்டு முறை வந்திருப்பது இக்கொள்கைக்கு விரோதமாம்.ஆயினும்,அது பண்டை நூல்களைப் பிரதி செய்வோரால் நேர்ந்தனவாய வழுக்க ளுள் ஒன்றாய் இருக்கலாம் என்று அமைதலே சிறப் பாம். இவ்வரலாற்றால் நம் புலவர் நக்கீரர் பெருமை விளக்கமுறும்.

யாப்பருங்கல விருத்தி யுரையில் மேற்கொள்ளப் பெற்றுள்ள நக்கீரர் நாலடி நாற்பது என்ற நூலின் செய் யுட்களைப்பற்றிச் சிறிதளவு இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாம். அச்செய்யுட்கள், அவிநயர் யாப்புக்கு அங்கமாகச் செய்யப்பட்டன என்பது குணசாகரர் கொள்கையாம்.

இறையனார் அகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்கு நக்கீரரே நல்லுரை கண்டார் என்பது, ஒரு பண்டை வரலாறு. அதுவும் இங்குச் சிறிது எடுத்துக் காட்டப்படும்:

"அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி, 'வம்மின்; யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் போய், நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளிவம்மின்,' என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை, அரசன், 'இனி நாடு நாடாயிற்றாகலின், நூல் வல்லாரைக் கொணர்க,' என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்பட்டிலேம்,' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று,'என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்,' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்: 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சிபெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்,' என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

"இட்ட பிற்றை ஞான்று, தேவர் குலம் வழிபடுவான், தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டு, பீடத்தின் கீழ்ப்பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக் குறிப்பினான், 'அலகிடுவன்,' என்று உள்ளங் குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ்போந்தன. போதரக்கொண்டு போந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப் பார்ப்பான் சிந்திப்பான்: 'அரசன் பொருளதிகாரம் இன்மையிற்

கவல்கின்றான் என்பது பட்டுச் செல்லா நின்றதுணர்ந்து நம் பெருமான் அருளிச் செய்தானாகும்,' என்று, தன் அகம் புகாதே கோயிற் றலைக்கடை சென்று நின்று கடைகாப்பார்க் குணர்த்த, அரசன், 'புகுதருக, புகுதருக' என்று பார்ப்பானைக் கூவச்சென்று புக்குக் காட்டக்கொண்டு நோக்கி, 'இது பொரு ளதிகாரம்! நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்,' என, அவர்கள் அதனைக் கொண்டு போந்து, சுன் மாப்பலகை ஏறியிருந்தாராய்வுழி, எல்லாரும் தாம்தாம் உரைத் தவுரையே நன்றென்று, சில நாளெல்லாம் சென்றன. செல்ல 'நாம் இங்ஙனம் எத்துணை யுரைப்பினும், ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச் சென்று, நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும் என்று கொண்டு போந்து, அவனாற் பொருளெனப் பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக் காண்டும்,' என எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென் றார்.

"செல்ல, அரசனும் எதிர் எழுந்து சென்று, 'என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்.' என, 'போமின், நமக்கோர் காரணிகனை எங்ஙனம் காடுவேன்? நீயிர் நாற்பத் தொன்பதின்மர் ஆயிற்று; நமக்கு நிகராவார் ஒருவர் இம்மை யினின்றே!' என்று அரசன் சொல்லப் போந்து, பின்னையும் சுன்மாப் பலகையேறியிருந்து, 'அரசனும் இது சொல்லி னான். யாம் காரணிகனைப் பெறுமாறென்னைகொல்?' என்று சிந்தித் திருப்புழி, 'சூத்திரஞ் செய்தான் ஆலவாயின் அவிர்சடைக் கடவுளன்றே? அவனையே காரணிகனையுந் தரல் வேண்டுமென்று சென்று வரங் கிடத்தும்,' என்று சென்று வரங்கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரி குடி கிழார் மகனாவான் உருத்திர சன்மன் என்பான், பைங்கண்ணன்,

புன்மயிரன், ஐபாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளையுளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டு போந்து, ஆசனமேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லாவுரை கேட்டவிடத்து வாளா விருக்கும். அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினாற் றோன்றினான்,' என மூக்கால் இசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங் கொண்டு போந்து, உப்பூரி குடி கிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, 'ஐயனாவான் உருத்திர சன்மனைத் தரல் வேண்டும்,' என்று வேண்டிக் கொண்டுபோந்து, வெளியதுடீஇ,வெண்பூச்சூட்டி,வெண்சாந் தணிந்து, கன்மாப்பலகை யேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிள நாகனார் உரைத்த விடத்து ஒரோ வழிக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்திப் பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த விடத்துப் பதந்தோறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு!' என்றார்.

"அதனால், 'உப்பூரி குடி கிழார் மகனாவான் உருத்திர சன்மனாவான் செய்தது இந்நூற்குரை,' என்பாருமுளர்; அவர் செய்திலர்; மெய்யுரை கேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமான் அடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு குமாரசுவாமியாற் கேட்கப்பட்டதென்க."

இதற்குமேல் இவ்வுரை வாய்முறையாக வந்த வரலாறு சொல்லப்பட்டுள்ளது. நக்கீரர் தம் மைந்தர்க் குரைக்க,அப்படியே மாணவர் பரம்பரை வழியேவந்து

ஒன்பதாந் தலைமுறையில் முசிறி யாசிரியர் நீலகண்ட னார்க்கு இவ்வுரை கிடைத்தது; பிறகு எழுத்துருவம் பெற்று வழங்கலாயிற்று. இவ்வுரைக்கு எழுத்துருவம் தந்தவர் இளம்பூரணராயிருக்கலாம் என்பது பல அறி வாளர் கொள்கையாம். மேலே காட்டிய வரலாற்றால், நக்கீரர் இறையனார் அகப்பொருட்கு நல்லுரை கண்ட வர் என்ற உண்மை விளங்கும். இப்பொழுது நாம் காணும் உரை அவர் கைப்பட எழுதியதன்று என் பதை இந்த வரலாறே விளக்கும். எவ்வாறாயினும், அறிவுடையார் பலர் உண்மை யென்று நம்பியிருக்கும் ஒன்றை மறுத்துப் பொய் என்று உரைக்கத் துணிதல் எவர்க்கும் எளிதன்று. சிவபெருமானே இந்நூல் செய் தளித்தனர் என்றலும், மூங்கைப்பிள்ளை உரை நுட்பம் ஆராய்ந்தான் என்றலும், இந்நூல் தோன்றுங் காலத் தே பொருளதிகாரமே இல்லாதொழிந்தது என்றலும் இக்காலத்தாராய்ச்சியாளர் எதிருரையாடாது ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கைகள் அல்லவாம்.

‘உப்பூரி குடி கிழார் மகனுவான் உருத்திரசன்மன் செய்தது இந்நூற்குரை என்பாரு முளர்,’ என்ற வாக் கியம் இவ்வுரையில் அமைந்திருத்தல் அதிசயமே பயக் கும். நக்கீரர் காலத்திலிருந்து ஒன்பது தலை முறை கழிந்த சிறிது பிற்பட்ட அக்காலத்திலேயே இவ்விஷ யத்தில் புலவர் குழுவினுள் சந்தேகம் உண்டாய்விட் டது என்பதும், உருத்திர சன்மன் அதற்குள் மூங்கை யாயிருந்தது மறக்கப்பட்டு, அவனே உரை யெழுதி யிருப்பான் என்று எண்ணுவார் சிலர் இருக்கவும் இட மிருந்தது என்பதும் நாம் அறிகிறோம். மேலும், தேவர்

குலங்களைப் பெயர்த்தெடுத்தாவது சாய்த்தாவது சரித்தாவது அலகிடும் வழக்கமில்லாத இந்நாட்டிலே, தேவர் குல பீடத்தின்கீழ் ஒரு நாள் ஒருவன் தவக்குறிப்பால் அலகிட்டான் என்றலும், அலகோடு செப்பிதழ் போந்தன என்றலும் ஆராய்தற்குரிய விஷயமாம். விக்கிரகங்களுங்கருகில் அலகு உபயோகிக்கப்படும் வழக்கம் நம் நாட்டில் இன்றளவும் இல்லை. இன்னும் உப்பூரி குடிகிழார் என்ற பெயர் வேளாளர்க்குரியது என்றலும் உருத்திர சருமர் என்ற பெயர் அந்தணர்க்குரியது என்றதும் பொதுவில் அறியப்படும். இவ்வாறு பல முரண்பாடுகள் தோன்றலால், இவ்வுரை வரலாற்றைப் பற்றி இக்காலத்தார் பலர் பலவாறு சங்கைகள் எழுப்புவாராயினர். நக்கீரர் வரலாற்றிலே இச்செய்தி இடம் பெறுதிருத்தல் ஒரு குறையாகத் தோன்றுமாகையால், இவ்வளவும் எழுதப்பட்டது.

இனி நம் புலவர் பெருமானைப் பற்றிப் பிற்காலத்துப் புராணங்களிலே சொல்லப்படும் வரலாறுகளைச் சுருக்கமாக எடுத்துரைத்து, ஆராய்வோம்; திருவிளையாடற் புராணத்திலும் சீகாளத்திப் புராணத்திலும் இவர் வரலாறுகள் வரும். இரண்டையும் ஒட்டி ஒருவாறு சுருக்கி யெழுதுவோம்:

புலவர் நாற்பத்தெண்மர் வேண்டுகோட்கிணங்க இறைவர் அளித்த சங்கப் பலகை, அவர்க்கும் அவர் நூலுக்கும் உள்ள உண்மை மதிப்பைத் தெரிவிப்பதாயிருந்தது. சிவபெருமானும் ஒரு புலவராய் வந்து இறையனார் என்ற பெயரோடு அதில் வீற்றிருந்தருளினர். இவ்வாறு இருக்கையில், ஆதி சைவ குலத்துப் பிறந்த தருமி யென்பான் ஒருவன், தன் வறுமை மிகுதி

யால் உரிய காலத்தில் மணம் புரிந்துகொள்ள வியலாத வனுய்ச் சோக்கலிங்கக் கடவுளைத் தனது குறைபோக்க வேண்டினன். அக்காலத்தில் அரசு புரிந்த பாண்டியன், ஒரு நாள் தனது அரண்மனை உப்பரிகையில் உலாவிக் கொண்டிருக்கையில், தான் அதற்கு முன்பு என்றும் நுகர்ந்தறியாத ஒரு புது மணம் காற்றோடு வருவதாய் அறிந்தான். அதற்குப் பிறப்பிடம் அடுத்திருந்த சோலை யில் உலவிக்கொண்டிருந்த தன் பெருந்தேவியின் கூந் தலே யென்று ஊகித்தான். பெண்கள் கூந்தலில் இயற்கை மணம் உண்டோ, இல்லையோ என்பது அவன் மனத்தில் உறுதியடையாத சந்தேகமாய்நின்றது. அத னைத் தெளிந்துகொள்ளும்பொருட்டுச் சங்க மண்டபத் தில் ஒரு பொற்கிழி தூக்கி, "என் மனம் கருதியபொரு ளைத் தெளிவுறுப்போர் இதனைப் பெறுவர்," என்று விளம்பரம் செய்வித்தான். புலவர் பலரும் பாடுவாராயி னர். ஒருவர் செய்யுளேனும் அரசன் கருத்தைத் தழுவி யிருக்கவில்லை. இச்செய்தியை அறிந்த தருமி, சொக்க நாதர் கோயிலை யடைந்து, "அரசன் கருத்துக்குப் பொருந்த ஒரு செய்யுளை இயற்றித் தந்து, அப்பொற் கிழியை அடியேன் பெறுமாறு அருள்புரியவேண்டும்," என்று வேண்டிக்கொண்டான். அதற்கு இறைவர் திருவுள மூவந்து, பின் வரும் செய்யுளைச் செய்து கொடுத்தார்.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பீ,
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்

செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே?''

தருமி இதை அரசனிடம் சொல்லி, அவன் ஏற்றுக் கொள்ளச் செய்து, சங்க மண்டபத்தில் உள்ளகிழியை அறுக்க வந்தான். அங்கிருந்த நக்கீரர், "இப்பாட்டுக் குற்ற முடைத்து. இக்கிழியறுக்கத் தகுதியுடையான் நீயல்லே,'' என்று கடிந்துரைத்தார். இவ்விடையூறு நேர்ந்ததைத் தருமி இறையனாரிடம் விண்ணப்பித்துக் கொண்டான். அவர், தமிழ்ப் புலவராக வந்து, "என் பாட்டிற் குற்றமிருப்பதாய்க் கூறினர் யாவர்? அக்குற்றம் யாது?'' என்று வினவினர். நக்கீரர் எழுந்து நின்று, "பெண்டிர் கூந்தலுக்குப் பூ, புகை முதலியவற்றின் சேர்க்கையால் மணம் உண்டாகுமன்றி, இயற்கையில் எழுதலில்லை யென்பது உலக மறிந்த வுண்மையாம்; அவ்வாறிருக்கும் இயற்கைக்கு மாருக, 'அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியும் பூவே?' என்பது குற்றமாம்,'' என்றார். இறைவர், "பதுமினிப் பெண்கள் கூந்தலில் மணமுண்டென்பது உண்மையன்றோ?'' என, நக்கீரர், "அங்குஞ் செயற்கை மணமே உண்டு,'' என்றார். "பார்வதி தேவியார் கூந்தலிலோ?'' என்று அவர் கேட்க, "அங்கும் அவ்வாறேயாம்,'' என்றார். உடனே சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணைக் காட்டியும் சடையைக்காட்டியும் வெருட்டினர். நக்கீரர், 'நெற்றிக் கண்ணைக் காட்டினும், குற்றம் குற்றமே,' என்றார். அப்பொழுது இறையனார்,

"அங்கங் குலுங்க அரிவாளி னெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்

கீர்கீர் எனவறுக்குங் கீரனோ வென்கவியை
ஆராயும் உள்ளத் தவன் ?”

என்ற பாடலைப் பாடினார். அதற்கு மறு மொழியாக நக்கீரர்,

‘ சங்கறுப்ப தெங்கள்குலம்; தம்பிராற் கேதுகுலம்?
டங்கமுறச் சொன்னாற் பழுதாமோ ? —சங்கை
அரிந்துண்டு வாழ்வோம்; அரனே, உனைப்போல்
இரந்துண்டு வாழ்வ திலை.”

என்ற பாடலைப் பாடினார். சிவபிரான் நெற்றிக் கண் கொண்டு பார்த்ததால் வெப்பு நோய் அடைந்த நக்கீரர், இறைவர் அருட்சினத்தால் அருகிலிருந்த பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்தனர்; பின்னர்ப் புலவர்பலரும் வேண்ட, இறைவர் அருளாற் கரை யேறிச் செய்த குற்றத்துக்குப் பிராயச்சித்தமாகக் கயிலைவரை நடந்து சென்று, இறைவரைத் தரிசிக்கப் புறப்பட்டார்; காளத்தியிலேயே கயிலைத் தரிசனம் கண்டார்; இறைவரருள் பெற்றார்; அகத்தியனாரால் இலக்கணம் பெற்றார். திருமுருகாற்றுப்படை என்ற பாட்டு இப்புலவர் பெருமான் கயிலை சென்ற காலத்துப் பாடப்பட்டது என்பதொரு கதையும் உளது. அக்கதை வருமாறு:

ஒரு மலைக் குகையில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை அடைத்து, இன்னொருவரைச் சேர்த்து ஆயிரவராக்கி உண்ணக் கருதி இருந்ததொரு பூதம், அவ்வழியில் வந்த நக்கீரரைக் கண்டு, அவரையும் அதில் அடைத்தது. அடைபடு முன்பு அவர் அங்கிருந்ததொரு குளத்திலே குளித்து, அதன் கரையில்

7743

சிவ பூசை செய்திருந்தார். செய்யும்போது, அருகில் இருந்ததோர் அரச மரத்தின் இலை குளத்தின் நீரில்ஒரு பாதியும் நிலத்தில் ஒரு பாதியுமாக அமைய விழுந்தது. குளத்துப்பட்டபகுதி, மீனாகமாறியது; நிலத்துவிழுந்த பகுதி பறவையாய் மாறியது. இவ்வாறு தோன்றிய மீனும் பறவையும் ஒன்றையொன் றிழுத்துக்கொண் டன. இவ்வதிசயக் காட்சியைக் கண்ட புலவர் பெரு மான், சிவ பூஜையை மறந்து, சிறிது பொழுது இருந் தார். இவ்வாறு முறை வழுவினரையே முன்னே பிடித் தடைத்த பூதம் இவரையும் பிடித்தடைத்தது. அங்கி ருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்ம ரும், நக்கீரரை நோக்கி, "ஐயன்மீர், இந்நாள்வரை யாங்கள் பூதத்தால் நன்கு போஷிக்கப்பட்டோம்; இன்று நீர் வந்து சேர்ந்ததால், அனைவரும் உயிரை இழக்க நேரிடும் என்று அறிகின்றோம். என் செய் வோம்!" என்று கலங்கினர். புலவர் அவர்களை நோக்கி இரங்கி, "நீயிர் வருந்தன்மின்," என்று கையமைத்து, முருகப்பிரானைத் தியானித்துத் திருமுருகாற்றுப்படை பாடி, எல்லோரையும் மரண பயம் நீக்கிக் காப்பாற்றி னார்.

இக்கதை திருமுருகாற்றுப்படையிற்சிறிதளவேனும் சூசிக்கப்படாதிருத்தலும், கதைகள் எழுத வல்ல நச்சினார்க்கினியராற் சிறிதளவேனும் குறிப்பிக்கப்படா திருத்தலும் அதிசயமே. ஆயினும், நக்கீரரைப் பற்றி வழங்குங் கதைகளில் ஒன்றுக்கொன்று அமைந்த பொருத்தத்தைச் சிறிது கவனிப்போம்:

அகப்பொருள்செய்த இறையனார்க்குநக்கீரர்மதிப்
புக்குரிய உரையாசிரியரானார்; தருமிக்குப் பொற்கிழி
தரக் 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாடல் பாடிய
இறையனார்க்குக் கடும்பகையாகிய பிரதிவாதியாயினார்.
எங்கும் உள்ளன்போடு இறைவரைத் துதிக்கும் நக்கீ
ரர், "நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே,"
என்றார் என்பது எவ்வாறு பொருந்துமோ, அறியோம்.
நக்கீரர் சங்கப் புலவருள் தலைவராய் மதிக்கப்பட்டார்
என்றலும், கபிலரும் பரணரும் உயிருள்ளவராய்
இருந்த காலத்துப் பொருந்துமோவென்பது ஆராய்ச்
சிக்குரியதாம். கொங்குதேர் வாழ்க்கை யென்ற செய்
யுள் குறுந்தொகையில் இரண்டாம் செய்யுளாய்ச்
சேர்க்கப்பட்டுளது. அச்செய்யுட்கீழ் அமைந்த பண்
டையோர் குறிப்பில் இவ்வரலாற்றுள் ஒரு சிறு பகுதி
யேனும் காணப்படாமை கவனிக்கத் தக்கது. கல்லா
டத்துள் இவ்வரலாறு சிறிது குறிப்பிடப்பட்டுளது
என்பது மெய்யேயாயினும், அது சங்க காலத்துச்
செய்யுள் அன்று என்பார் கூற்று அத்தகைய வரலாறு
களால் வலியுறுமேயன்றி, நக்கீரர்க்குக் குறையேற்றக்
கூடிய ஒன்றையும் அது கொண்டு நிச்சயித்தலியலாது.
நற்றிணை, அகம், புறம் என்னும் தொகை நூல்களில்
இரண்டிரண்டுசெய்யுட்கள் செய்த பேராலவாயார்என்ற
புலவர் பெயர் பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளை
யாடலில் இறையனார் தம் பெயரென வெளியிட்ட
பெயராகவுள்ளதால், சிலர் பேராலவாயார் என்பவர்
இறைவரே யென்று எண்ணியதுமுண்டு. அப்பெய
ருள்ளவர் பிறரைப் போல நல்லறிவு படைத்த தமிழ்ப்

புலவரே யென்று நல்லோர்களால் உய்த்துணரப்படுவது போல, இறையனார் என்ற பெயருடைய ஒரு புலவர் இருந்து, அகப்பொருள் செய்து, இச்செய்யுளும் பாடினர் என்று கொண்டு, இவ்வாத வரலாறெல்லாம் கர்ண பரம்பரைக் கதைகளேயாம் என அமைதல் தற்காலத்து நுண்ணறிவுடையார் சிலர் கொள்கையாம்.

இவ்வளவும் ஆராய்ந்தது, நிஷ்களங்கமாகிய நக்கீரர் சரிதையில் உள்ள ஒரு மறுவை யொழிக்குங் கருத்துக் கொண்டதாலே யெனக்கொண்டு, அறிவாளர் நடு நின்று உய்த்துணர்ந்து, சிவபெருமான் அடிக் கமலங்களிற் பக்தியின்மையால் எழுந்த வாய் மொழி யெனக் கொள்ளா தொழிவாராக. கீரர் என்ற இயற் பெயர் உள்ள இப்புலவர் மைந்தனர் பெயர் கோற்றனார் என்பதாம். தந்தை பெயரையும் சேர்த்து வழங்கும் பண்டை வழக்குப்பற்றி அவர் கீரங்கோற்றனார் எனப்படுவர். மதுரைக் கணக்காயனார் பௌத்திரராகிய அவர், தம் தந்தையாரிடமே கலை பயின்று, தெளிவு பெற்று, இறையனார் களவியலுக்கு இவர் செய்த வுரையினை உலகத்தவர்க்கு வெளியிட்ட பரம்பரையில் முன்னின்றவரானார். இவ்வாறு வழி வழியே தமிழ் வளர்த்த இக்குடியினர் பிறந்ததும் வாழ்ந்ததும் மதுரையே யென்ற செய்தி ஒன்றே உறுதியாய்ச் சொல்லத் தக்க செய்தியாம் இவர்கள் சைவ மதத்தினர்கள் என்பதும், கீரனார் பாடல்களால் நன்கு உணரப்படும். அந்தணருள் ஒரு வகையார் என இவரைப் பலர் கருதுவார் என முன்னே கூறினோம்.

இவர் செய்த செய்யுட்கள் அவ்வத் திணைகட்கேற்ற சொல்லும் பொருளும் கொண்டு அழகுற அமைந்திருத்தல் அவற்றை ஊன்றிப் படிப்போர்க்கு விளங்காதிராது. முருகன் திருவுருவத் தோற்றமும், அவன் செயலும், இவர் வாக்கால் அறிந்தவர் எளிதில் மறத்தல் இயலாது. இனிப் பதினோராந்திருமுறையில் இவர் பாடியவாய் வழங்கும் பிரபந்தங்களைப்பற்றிச் சிறிது கூறுவோம்:

பதினோராந் திருமுறையில் நக்கீர தேவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் கயிலை பாதி காளத்தி பாதி யந்தாதி, திருவீங்கோய் மலை யெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்னும் இப்பத்துமாம். இவற்றுள் திருமுருகாற்றுப் படை பத்துப்பாட்டுள் ஒன்று என்பது நாம் அறிந்த விஷயமே. பிற பிரபந்தங்கள் எல்லாம் வடசொற்கள் அதிகம் கலந்து, மோனை எதுகை முதலிய இயைபிற் சொல்லமைதி பெற்றுப் பிற்காலப் புலவர் வாக்குப்போலத் தோன்றுதல் நன்கு கவனிக்கத்தக்கது. முற்காலப் புலவர் இவ்வமைதியை மதியாதவரே யென்பது அவர் வாக்கைப் பல்காலும்பயின்றவர் அறிந்ததே. சூலபாணி, பரமயோகி, பரமேஷ்டி, பாதாரவிந்தம், பரமேச்சுவரன், முதலிய வடசொற்கள் பண்டைத் தண்டமிழ்ப்பனுவல் களில் அகப்படுவது அருமையாகையால், இச்சொற்களே மிகுதியாகப் பெற்ற பதினோராந் திருமுறைப் பிரபந்தங்கள் சங்கப் புலவர் நக்கீரர் வாக்காக

இருக்கலாமோ என்பது ஊகித்து உண்மை யுணர வேண்டுவதேயாம். கயிலை பாதி காளத்தி பாதி யந்தாதி யென்னும் பிரபந்தத்துள் நக்கீரர் அத்தலங்களோடு சம்பந்தப்பட்ட தம் வரலாற்றுள் ஒரு சிறிதும் உரையாதிருப்பதும், பிற்காலத்தவராகிய கண்ணப்பரைப் பற்றி யுரைத்திருப்பதும் அதிசயமே பயக்கும். அன்றியும், திருமுறை வகுத்த பெரியார்கள் கால வரன்முறையை ஒருவாறு அறிந்தே வகுத்திருக்க வேண்டு மாகையால், சம்பந்தர்க்கும் பிறர்க்கும் காலத்தால் மிகவும் முந்திய நக்கீரர் பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையில் இருத்தலும், அவர்க்கும் முற்பட்ட கபில பரணர் பிரபந்தங்கள் அவர் பிரபந்தங்களின் பின்னே தொடுக்கப்பட்டிருத்தலும் நோக்குமிடத்து, அப்பெரியார் கருத்தில் சம்பந்தர் முதலிய நாயன்மார்களுக்குக் காலத்தாற் பிந்திய ஒருவரே இப்பிரபந்தங்களைச் செய்தவராயிருத்தல் வேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்கலாம் என்பது விளங்கும். திருமுருகாற்றுப்படை இங்கு இடம் பெற்றது எவ்வாறெனில், இப்பிரபந்தங்களைத் தொகுத்தோர் நக்கீரர் பாடியதாய் முருகன் துதியாய் வழங்கும் ஒன்று இக்கூட்டத்திற் சேர்க்க வுரிமை பெறுவதாம் என்று கருதிச் சேர்த்திருக்கவேண்டும் என்றே ஊகிக்க வேண்டும். திருமுருகாற்றுப்படையின் நடையையும், கோபப்பிரசாதம், திருக்கண்ணப்ப தேவர் திருமறம் முதலியவற்றின் நடையையும் ஊன்றிப் பார்க்கும்போது இவ்வுண்மை நடுவு நிலைமையுடையார் எவர்க்கும் விளங்காதிராது. ஆகையால், சங்கப் புலவராகிய நக்கீரர் வரலாற்றில் வேண்டுமளவு இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

7. அரிசில் கிழார்

உருகிய வுளத்தால் உறுதிப் பொருளினை
யுலகினர் தெருண்டிடப் பலகவி சொற்றருள்
அரசச் செல்வம் அடைந்த
அரிசில் கிழாரைப் பரசுவம் புகழ்ந்தே.

அரிசில் கிழார்எனும் புலவர், கபிலர், பரணர், நக்கீரர் முதலிய பெரும்புலவர்களைப்போல இக்காலத்துப் பொதுமக்களுக்குப் பெயரளவிலேனும் தெரிந்திருக்கும் புலவர் அல்லராயினும், இவர் வரலாற்றை ஆராயும் போது, முன்சொன்ன பெரியார்களோடு ஒருங்குவைத் தெண்ணத் தக்கவராகவே தோன்றுகிறார். அரிசில் என் பது இவர் பிறந்த ஊர்ப்பெயராகவே இருக்கவேண்டும். கொள்ளிட நதியின் வடகரையில் உள்ளதோர் ஊர் இக் காலத்து அரியிலூர் என்னும் பெயரால் வழங்குகிறது. இயக்கி யென்பது இசக்கி யென்றும், மயற்கை யென் பது மசக்கை யென்றும் மாறி வழங்கும் இக்கால வழக் கிற்கேற்ப, அரிசிலூர் என்பதே அரியிலூர் என்று மாறியிருக்கலாமோ என்று ஊகிக்கலாம். சகர யகரங் கள் இவ்வாறு மயங்குதல் இக்காலத்துப் பலசொற்களி லும் காண்கின்றோமாகையால், இஃது ஒருவாறு பொ ருத்தமாகவே தோன்றும். அரிசிற்கரைப் புத்தூர் என்ற பாடல் பெற்ற தலம் ஒன்றுண்டு. அதுவும் இதற்குப் பொருந்தலாம். மைசூர் சமஸ்தானத்திலும் அரிசிற்கரை

(Arsikeri) என்னுமோர் ஊர் உளது. அவ்வூர்க்கும் இப் புலவர் பெயர்க்கும் யாதேனும் சம்பந்தமிருக்கலாமோ என்பது துணிந்து கூறக்கூடாததாய் இருக்கிறது. கிழார் என்றபட்டம் வேளாளர்க்கே யுரியது என்பது பேராசிரியர் முதலிய பெரியார் பலர் கருத்தாகையால், இப்புலவர் வேளாளராகவே இருக்க வேண்டும்.

இப்புலவர் பாடிய பாடல்கள் பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தாகிய பத்தும், குறுந்தொகையில் ஒன்றும், புறநானூற்றில் ஏழும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும், தகடூர் யாத்திரையில் ஒரு செய்யுளும் ஆகும். இவற்றைக்கொண்டு ஆராய்ந்து இப்பெரியார் வரலாறு ஒருவாறு சுருக்கமாக வரையப்படும்:

பேகன் எனும் வள்ளல் தன் மனைவியைத் துறந்த செய்தியை அறிந்து, அவன் அறநெறிக்கு மாறுக அது செய்தலாகாது என்பதை வற்புறுத்திக் கூறிய புலவர்களில் இவரும் ஒருவர். இவர் இச்சந்தர்ப்பத்திற்பாடிய செய்யுள் மிகவும் உருக்க முடையதே;

“ அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேஎ மடுபோர்ப் பேக,
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட வென்னை நயந்து
பரிசில் நல்குவை யாயிற் குரிசில்நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்
அருந்துய ருழக்குநின் திருந்திழை யரிவை,
கலிமயிற் கலாபங் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்

தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே."*
இச்செய்யுட்பொருள் பின் வருமாறு:

"இரவலர்க்கு வேண்டுவன நல்கும் நினது வள்ளன்மை எனக்கும் உதவும். அது நிற்க. நின்னாலே தரப்படும் அருங் கலன்களும் பொன்னும் பொருளும் ஆகிய அவற்றை விரும் பேன். போரெதிர்ந்தாரைக் கொல்லும் திறம் உடைய பேகனே, எனது சிறிய யாழைச் செவ்வழிப் பண் பாட ஏற்ற வாறு அமைத்து வாசித்து, நினது வலிய நிலமாகிய மலைநாட் டைப் பாட, என்னைப் பாராட்டி அன்பு கூர்ந்து எனக்குப் பரிசில் தர விரும்புவையாயின், யான் வேண்டும் பரிசு இது வாம்: தலைவனே, நீ இரங்காமையாற் கண்டவர் இரங்க உடம்பு மெலிந்து பொறுத்தற்கரிய துயரத்தால் வருந்தும் உன்னுடைய திருந்திய அணிகளை அணிந்த மனைவியாகிய அரிவையது தழைத்த மயிற்பீலியைக் கால் பொருந்தக் குவித் தாற்போலத் தோன்றும் தழைத்த மெல்லிய கூந்தற்கண்ணே மணங் கமழும் புகையை யேற்றிக் குளிர்ந்த மணங் கமழும் மாலையைச் சூட்ட வளமிக்க செலவையுடைய உயர்ந்த தேரில் நின் குதிரைகள் பூட்டப்படுவனவாக."

முன்பு கபில பரணர் என்ற புலவர் பெருமக்கள் இப்பொருள் பற்றிப் பேகனைப் பாடியதைக் கவனித் தோம். இப்புலவர் பாடலில் ஒரு விசேஷம் இங்குக் குறிப்பிடத் தக்கதாம்: அவர்களைப்போலவே இவரும் தமக்குத் தரற்குரிய பரிசிலையும் பெரிதாய் மதியாது, கற்புக்கரசியாகிய கண்ணகியைப் பேகன் ஆதரித்த லுக்கு வேண்டுமளவுகூறுவாராய், 'நின் பரிசிலை யான்

* புறநானூறு—செய்யுள், 146.

விரும்பேன். நீ நான் பாடும் இப்பாட்டுக்குத் தர வேண்டும் பரிசில், ஒரு குறையும் இல்லாளாகிய உன் மனைவியை ஆதரவோடு அங்கீகரிக்கவே,' என்கிறார்; அதையும் வெகு அழகாய் அமைத்துச் சொல்கிறார் "உன் மனைவி நீ பிரிந்திருக்கும் காரணத்தால் தழைத்த மெல்லிய மயிற்பீலி போன்ற தன் கூந்தலிலே புகை யேற்றுதல் பூச்சூடுதல் எண்ணெயிடுதல் முதலிய மங்கள காரியம் ஒன்றும் செய்துகொள்ளாது, கணவன் பிரிந்த காலத்து மனைவியர் வாழ வேண்டிய முறைப் படி இருக்கின்றாள். இத்தகைய கற்புடையாள் திறத் தில் நீ இரக்கங் கொள்ளாதிருத்தல் நின் கருணைக் கழ கன்று. ஆகையால், இப்பொழுதே நீ தேரேறிச் சென்று அவளை அடைந்து, இன்றுவரை பிரிந்த துயர் மாறும் வண்ணம் அவள் கூந்தற்குப் பூச்சூட்டிப் புகை யேற்றி இன்புறுவாயாக," என்றமைந்த கருத்துடைய இச்செய்யுள் தமிழ்நாட்டுப் பெண்டிர் கற்பின் திறத்தை யும், புலவர் பெருமக்களது அருட்சிறப்பையும், புரவ லர்க்கும் புலவர்க்கும் இடையில் இருந்த அன்பின் அளவையும், இந்நாட்டு நாகரிகத்தையும், தமிழ்மொழி யில் உயரிய கருத்துக்கள் அழகுற வெளிப்படுத்தலில் ஆற்றலுண்மையும்,பிறவற்றையும் நம்மனோர்க்கு நன்கு தெரிவிப்பதாம் இப்புலவர் பாடல்களுள் முதற்கண் நாம் எடுத்தது இப்பொருள் பற்றி யிருத்தலும் உள்ளத் துள் ஊறும் இன்பத்தை வளர்ப்பதாம்.

இப்புலவர்பெருமான் பிறகு பேகனுடைய ஆதரவு பெற்றிருந்தார். இவர் எண்ணிச் செய்த புண்ணிய வினை அங்கு நிறைவேறிய பின், அவனை விட்டு நீங்கி

னர்; எழினி என்னும் பெயர் பூண்ட வள்ளல் ஒருவனை அடுத்தார்; அவனைப் புகழ்ந்து பாடி, அவனிடம் வாழ்ந்திருக்கையில், அவனுக்கும் தகடூரில் வாழ்வானும் ஔவையாரை ஆதரித்த பிரபுவுமாகிய அதிகமான் என்பானுக்கும் பகை நேர்ந்தது. இருவரும் சிறந்த வீரரே யாகையால், தகடூரில் நகர்ப்புறத்துள்ள ஒரு பெரு வெளியில் பெரும்போர் நிகழ்ந்தது. அப்போரில் எழினி வீரசொர்க்கம் புகுந்தான். புரவலரோடு போர்க் களத்துக்கும் செல்லும் புலவருடன் சென்றிருந்த நம் புலவர் பெருமான், தம்மை ஆதரித்தவனும் பெருங் கொடை வள்ளலுமாகிய எழினிக்கு நேர்ந்த நிலையை அறிந்தார். இவர் அடைந்த துயர்க்கோர் அளவில்லை. அங்கு இவர் பாடிய பாடல் கல்லையும் கனிவிக்கும் உருக்கம் வாய்ந்தது:

"கன்றம ராயங் கானத் தல்கவும்
வெங்கால் வம்டலர் வேண்டுபுலத் துறையவும்
களமலி குப்பை காப்பில வைகவும்
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்
வையகம் புகழ்ந்த வயங்குவினை யொள்வாட்
டொய்யா வெழினி டொருது களஞ்சேர
ஈன்றேள் நீத்த குழவி டோலத்
தன்னமர் சுற்றம் தலைத்தலை யினையக்
கடும்பசி கலக்கிய விடும்பைகூர் நெஞ்சமோடு
நோயுழந்து வைகிய வுலகினும் மிகநனி
நீவிழந் தனையே யறனில் கூற்றம்,
வாழ்தலின் வரூஉம் வயல்வள னறியான்

வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங்
கோருவ ளுருயிர் உண்ணு யாயின்
நேரார் பல்லுயிர் பருகி
யார்குவை மன்னேவவ ணமரடு களத்தே!"*

(இ - ள்) "கன்றுகளோடு கூடிய பசுக் கூட்டங்கள் பக லெல்லாம் வயிறுர மேய்ந்த பிறகு இரவில் காடுகளிலேயே தங்கியிருக்கவும், வெப்ப மிக்க வழிகளிலே நடந்து தளர்ந்து வந்த புதியவர்கள் அவரவர்க்கு விருப்பமான இடத்திலே தங் கவும், நெல் அறுத்துக் களங்களிலே அடித்தும் அடியாமலும் கிடக்கும் குவியல்கள் ஒருவரும் தொடுவாரின்றிக் காப்பின் றிக் கிடக்கவும், எதிர்த்து நிற்கும் வலி படைத்த பகைவரை யெல்லாம் அழித்த நிலத்தவர் கலங்காத செங்கோல் கொண்ட உலகம் புகழும் போர் புரியும் ஒள்ளிய வாட்படை தாங்கிய பொய்யறியா நாவினனாகிய எழினி என்ற அரசன் போர் புரிந்து களத்திலே இறந்து கிடக்க, தாயை யிழந்த உண வில்லாக் குழவிகள் போலத் தன்னை மேவிய கிளைகள் பல விடங்களிலும் கலங்கி வருந்தக் கடும்பசி கலக்குகின்ற துன்ப மிக்க மனத்தோடு நோய் மிக வருந்தி யிருக்கும் உலகத்தவ ரைக் காட்டிலும் அறனில்லாத கூற்றமே, நீ இழந்ததே அதிக மாகும். நல்வாழ்விற் பயன் தரும் வயலின் வளத்தை அறி யாதவனாய்த் தளர்ந்த குடியையுடைய ஓர் உழவன் விதைக்கு வைத்திருந்த நெல்லையே சமைத்துண்டதுபோல, நீ இவ் வெழினி ஒருவனுடைய அரிய உயிரை உண்ணுதிருப்பை யாயின், இவன் போர் செய்யும் போர்க்களத்தின்கண் அழியும் பல உயிர்களைக் குடித்து இன்புறுவையே!"

அரிசில் கிழார் இச்செய்யுளில் அமைத்திருக்கும் சொல்லும் பொருளும், நல்லறிவாளர் உள்ளம் போன்று

* புறநானூறு—செய்யுள், 230.

ஆழ்ந்து தெளிவுடையன. முற்பகுதியில் நான்கு அடிக ளில் எழினியின் செங்கோன்மையும், இடையில் அவன் ஆதரவு பெற்றிருந்தார் அவனை இழந்ததால் அடையும் வருத்தமும், இறுதியிலுள்ள பிற்பகுதியில் யமன் தன் செயலால் அடைந்த நஷ்டமும் தெரிவிக்கப்பட்டுள. செங்கோன்மையைப் பற்றிய இப்புலவர் கொள்கை என்னவெனில், முல்லை நிலத்து மேய்ந்த பசுக்களும் கன்றுகளும் பகலில் தங்கிய இடத்து இரவிலும் காவ லின்றித் தங்குமாறு புலி முதலிய துஷ்ட மிருகங்களால் அவற்றிற்கு எவ்வித ஆபத்தும் அச்சமும் நேரிடாமல் காக்கும் வண்ணமும்; புதியராய்த் தன்னாட்டுள் வெயிற் கடுமை பொறுத்து நடந்து வந்தோர், பாலை முதலிய நிலங்களில் ஆறலைப்போர் ஆகியரால் துன்பமுறாது இன்ன விடத்தில்தான் இருக்கலாம் என்ற கட்டுப்பாடின்றித் தம் மனங்கொண்டபடி உரிய சுற்றத்தார்போலஎங்கும் இடம்பெற்று வாழக் காக்கும்வண்ணமும்; நெற்களங்க ளில் அளந்தும் அளவாமலும் அடித்தும் அடியாமலும் குவிந்து கிடக்கும் குப்பை நெல்லைக் கொள்ளை கொள் வோர் எவரும் இலராக, உரியவர் கவலையற்றிருக்கக் காக்கும் வண்ணமும் செங்கோன்மையில் மூன்று முக் கிய நெறிகளை அறிவித்தவாறும். எவர்க்கும் பயன்படும் நெல்லையும் பசுவையும் காவலன் காவா விடின், நாடு, 'நாடு' எனப்படும் தன்மை இழக்கும். உறங்கும் ஆயி னும் மன்னவன் தன்ஒளி கறங்கு தெண்டிரைவையகங் காத்தலால், எழினியின் நாட்டில் இவ்விரண்டும் நன்கு அமைந்தனவன்றிப் புலவ ராகவோ, இரவல ராகவோ, பிறராகவோ வருவார் போவார் எவரும் உட்புகவும்

வெளிப்போகவும் யாதொரு கட்டுப்பாடுமின்றியிருக்கு மாறு அவ்வளவு சமாதானம் நிலைக்கும்படி நாடாண்ட தன்மையும் விளக்கப்பட்டது. இத்தகைய செங்கோல் வேந்தனை இழந்த மக்கள் துயருறல் இயல்புதானே! அவர் துயரமும் எவ்வாறிருந்ததெனில், தானுகவொன்றை எடுத்து உண்ணும் பருவமும் பிறர் ஆதரவு பெற்றிருக்கும் பருவமும் பெருத சிறியகுழவி,தாய்ப்பாலொன்றே பருகிப் பயின்ற குழவி, தன் தாயினை இழக்க நேருமாயின், அஃது எத்துணை அல்லற்படுமோ, அநேகமாய் உயிர் இழக்கவும் நேரிடுமோ, அதுபோலத் தாமாகவே தமக்கு வேண்டிய நன்மையைத் தேடிக்கொள்ளும்ஆற்றலும் பிறர் ஆதரவுக்குள் புகும் எண்ணமும் அற்ற அவர்கள், தம் அரசன் அன்பொன்றே அமுதமெனக் கொண்டு, அவனே உயிராகத் தாமேஉடலாக வாழ்ந்தவராகையால், பெரும்போரில் எதிர்ப்பாராத வண்ணம் அவனை இழக்கவே, உயிரே போகத்தக்க அல்லலுழந்தனர். இனி வரும் கருத்துக்களே நம் புலவர் உண்மைப் பெருமையை விளக்குவனவாம். ஏனெனில், இவ்வளவு துயருறும் குடி மக்கள் நிலையைக் காட்டிலும் உலகுயிருண்ணும் கூற்றம் அடைந்த இழவின்நிலையே பெரிதும் இரங்கத் தக்கதென்று அவன்பொருட்டு இரங்குவார் போலப் பாடுகின்றார். கூற்றம் எழினியின் உயிரைக் கொள்ளைகொண்டதால் தமக்கு நேர்ந்த வருத்தம் பெரிதாகையால், அவன் அறவுருவனுயிருக்கவும், 'அறனில் கூற்றம்,' என்று விளித்தார். பெருங்குடியிற் பிறந்த ஓர் உழவன், வறுமை மிகுதியால் விதைப்பதற்கென்று சேகரித்து வைத்திருந்த நெல்லையும் உண்டுவிட்டவாறு

போலக் கூற்றுவன் எழினியை உண்டான்; ஆகை யால், அவன் துயருறத் தக்கவனே என்றார். இவ்வுவமையில் நயத்தைப் புலவரே அழகுற விளக்கிவிட்டார். 'தென்றிசைத்தலைவன் இவ்வெழினி யொருவனுயிரைக் கொள்ளை கொள்ளாதிருப்ப னாயின், அவன் செய்யும் போர்களில் அழிந்துபடும் அநேக ஆயிர. வீரர்களைக் காலமெல்லாம் உண்டு மகிழ்ந்திருக்கலாமே! அவ்வறி வின்றி அவனைக் கொன்றனனே! அவன் செய்தது தற் கால வறுமையைப் பார்த்துப் பின்னர்ப் பெரும்பயன் விளைக்கும் விதை நெல்லை அரிசியாக்கி உண்டு ஒழித்த உழவன் செயலையே ஒக்கும். ஆகையால், உலகுயிர்கள் அடைந்த நஷ்டத்தைக் காட்டிலும், அவன் அடைந்த நஷ்டமே பெரிது உலகத்தார் எழினியால் அடைந்த நன்மையை யிழந்தனர்; கூற்றுவனோ, அவனால் அடை யும் நன்மையை எதிர் காலத்திலும் இழந்தனன். உல கத்தார் அரசனை இழந்தவராய் உயிர் விடும் நிலையில் உளராகையால், அவர் உயிரிழத்தலால் அவனை இழந்த துயர் சிறிது காலமே அனுபவிப்பாராவர்; கூற்றுவனோ மரணம் இல்லாதவன் ஆகையால், தனக்கு வருவாய்க் கிடமிருந்த வழியைக் கெடுத்த துயரத்தை என்றும் மறக்க வியலாதவனாய்ப் பெருந்துயர் உறுவன்,' என்பதாம். இவ்வளவு அழகுற இப்புலவர் கையறு நிலைச் செய்யுள் பாடியிருத்தலால், இவரது சொல்லாற் றல் நன்கு விளங்கும். இதே கருத்தை யுட்கொண்டு, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆடு துறை மாசாத்தனார் பாடியிருக்கும்,

"நனிபே தையே நயனில் கூற்றம்,
விரகின் மையின் வித்தட் டுண்டனை.
*   *   *
இனியார் மற்றுநின் டசிதீர்ப் போரே ?" *

என்ற பாடலடிகள் இங்கு நினைக்கத் தக்கனவாம்.

இனி, இப்புலவர் பெருந்தகை புறநானூற்றிலே பாடியுள்ள பிற செய்யுட்களால் உலகத்தார் பெறும் பயனைச் சுருங்க வுரைப்போம்: ஒன்று பேய்க்காஞ்சி என்னும் துறை பற்றியதாம். பேய்க்காஞ்சியாவது, பிணங்கள் நிறைந்த போர்க்களத்திலே உடம்பெல்லாம் புண்பட்டு விழுந்துகிடப்போரைச் சூழ்ந்து வரும் பேய்கள் அவ்வீரரைத் தொடா வண்ணம், பெண்டிர் கடிப் பகைகளின் உதவியாற் காவல் செய்திருத்தலை உரைப்பதாம். இதன் நோக்கம் என்னவென்பது, இப்புலவர் பாடிய செய்யுளால் விளங்கும், அது வருமாறு:

"தீங்கனி யிரவமொடு வேம்பு மனைச்செரீஇ
வாங்குமருப் பியாழொடு டல்லியங் கறங்கக்
கைடயப் டெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி யாம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி,
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே."†

(இ - ள்.) "இனிய கனிகளையுடைய இரவந்தழையொடு வேப்பிலைகளை வீட்டிற் செருகி, வளைந்த கொம்பு என்னும்

* புறநானூறு — செய்யுள், 227.
† புறநானூறு — செய்யுள், 281.

உற்றுப்பினையுடைய யாழொடு வேறு பல வாத்தியமும் முழங்கக் கையை மெல்லப் பெயர்த்து வைத்து, மை தீட்டி, வெண் சிறு கடுகை அருகிலே சிதறி, ஆம்பற் குழல் ஊதி, மணிகளை ஆட்டி, காஞ்சிப்பண்பாடி, நீண்ட நகரிடத்திற் பேய்களுக்குப் பகையாயுள்ள வாசனைத் திரவியங்களைப் புகைத்து, அரசன் பொருட்டுப் போர் புரிந்து இந்த நிலையை அடைந்து புண்பட்டுக் கிடக்கும் அழகிய வீர கண்டை அணிந்த கால்களையுடைய நம் வீரன் தாங்கிய புண்ணைப் பேய் தொடாது காப்பம்; தோழியே, வருக."

இச்செய்யுளால் நம் தமிழ் நாட்டார் பண்டைய நாகரிகம் ஒன்று விளங்குகிறது: போர்க்களத்திலே இறந்தார் வீர சொர்க்கம் புகுதலால், அவர் மனைவியர் உடன்கட்டையேறி உயிர் விடுதல் கேட்டிருக்கும் நம் பூர்விகர் வரலாற்றில், அப்போர்க்களத்தில் உடம்பெல்லாம் புண்ணுக எழவும் பிறர் உதவியாற் பெயர்ந்து செல்லவும் சக்தியற்றுப் புண்பட்டுக் கிடக்கும் சில சுத்தவீரர் விரைவில் இறத்தல்கூடும். ஆகையால், பிணம் பிறங்கும் களத்தில் நடமாடும் பேய்கள் அவ்வீரர் அருகில் வாரா வண்ணம், வேப்பிலை, இரவ மரத்தின் தழை, வெண்கடுகு முதலிய பேய்ப் பகைகளும்; குழலூதல், மணியடித்தல், யாழ் வாசித்தல் முதலிய உதவிகளும் துணைகளும்கொண்டு, அங்கிருந்து பெண்டிர் தத்தமக்குரிய தலைவர் உயிர் நீங்குகாறுங் காவல் செய்வர் என்பதும், அங்கு அவர் இறக்க நேரிடின், உடனே தாமும் உயிர் விடுவர் என்பதும் ஆகிய வீர மகளிர் செயல்கள் உண்டு என்பதை நாம் அறிகின்றோம். இவ்வாறு கேட்பார் நெஞ்சை இளக்கும் செயல்களை அக்கால வரன்

முறையை யொட்டிப் பாடிய புலவர்களுள் அரிசில் கிழாரும் ஒருவராய் இருத்தலால், இத்தகைய அருஞ் செயல்களின் வரலாறெல்லாம் நமக்கு நன்கு இன்று வரை விளங்கும் நிலையில் உள்ளன.

'பாசறை யீரே,' என்று தொடங்கும் மற்றொரு செய்யுளில் இப்புலவர் சொல்லும் செய்தி மிகவும் பாராட்டற்பாலது:

"வீரருள் வீரனாகிய ஒரு குரிசில் மார்பிலேவேல்பாய்ந்து கழல் நிணம்பட நிலத்து விழுந்து கிடந்தான். அந்நிலையில் அங்குவந்த பலர் அவனைப் புகழ்ந்தனர். பிறர் புகழப் பொறாத வீரனாகிய அவன், 'இச்செயல் யான் என் நாட்டின் பொருட்டும் அரசர் பொருட்டும் செய்வது என் கடமையேயாகும். இதனை நான் செய்துள்ளதற்காகப் புகழ்ச்சிக்கும் உரியனாவேனோ!' என்ற எண்ணத்தைத் தெரிவிப்பான் போலத் தன் தலை வணங்கி அங்கு நின்ற புலவரைப் பணிந்து, பின்னிய நெற்கதிர் சூழும் வயல்களை யொழித்து ஒரு காம்பைச் சிற்றூரை வறியோர் தலைவனாகிய ஒரு புலவனுக்கு அப்பொழுது கொடுப்பதாக மன மகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் உரைத்தான்."

இச்செய்தியால் வீரர் வீரமும் உயிர் போகுங் காலத்தும் அவர் வள்ளன்மை விளக்கமும், சமாதான காலத்திலே அருகிலிருந்து பாடிப் புகழ்ந்து பரிசு பெறும் புலவர்கள் போர் தொடங்கும் காலத்தும் போர் நிகழும் களத்தும் உடனிருந்து அரசரை ஊக்குவதும், தாம் புகழும் வீரர் அங்கு உயிர் துறக்கும் நிலையடையும்வரை அவரைப் புகழ்வதும், வாழ்த்துவதும், அங்கு அவர் உயிர் இழக்க நேரின், உலகறியக் கையற்று நிலை

பாடலும், பிற உயர்வும் விளங்கும். இப்பெரும்போர்க் களத்துச் சென்ற புலவருள் அரிசில் கிழாரும் ஒருவ ராய் இருந்தார் என்பது இச்செய்யுளால் அறியப் படும்.

'கொடுங்குழை மகளிர்,' என்று தொடங்கும் மற் றொரு செய்யுளில், "வளிதொழி லொழிக்கும் வண்பரிப் புரவிப் பண்ணற்கு விரைதி," என்று குதிரை மறம் அமைத்துப்பிறகு,'நேற்றுஎன் தமையனைக் கொன்றவன் தம்பியோடு நாளை நான் போர் செய்வேன்,' என்றுகூறி, உணவுங். கொள்ளாது பல குதிரைகளையும் செலுத்து கின்றான்என்று கேள்வியுற்று,வெற்றிவேந்தன் பாசறை யோர் அவன் சொன்ன சொல் இரண்டாகாதென்று எண்ணி நடுங்கினர்," என்று அமைத்திருப்பது, ஒரு சபதம் செய்த வீரர் அது முற்றும்வரை உண்ணாதிருப் பர் என்ற பண்டையோர் வழக்கைத் தெரிவிப்பதாம். இச்செய்யுளில் நம்புலவர் இரண்டு அரும்பொருள் அமைத்திருத்தல் கவனிக்கத் தக்கது.

இத்துணையவாகிய அரும்பொருள்களை நமக்கு உதவிய அரிசில் கிழார் என்னும் பெரியாரது உண்மைப் பெருமை விளங்குவது பதிற்றுப்பத்திலே யென்பது தமிழகம் அறிந்த உண்மையேயாம். பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தே இப்புலவர் பாடியதாம். அப்பத்தின் பதிகத்தில் காணப்படும் பின்வரும் செய்தி இவர் பெரு மையை உலகறியச் செய்தது:

"பல்வேற் றானை அதிக மானோ
டிருபெரு வேந்தரையு முடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங்கோண்

டுரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகடீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல்
இரும்பொறையை

மறுவில் வாய் மொழி அரிசில் கிழார் பாடினர் பத்துப் பாட்டு. பாடிப் பெற்ற பரிசில்: தானும் கோயிலாளும் புறம் போந்து நின்று கோயிலுள்ளவெல்லாம் கொண்மினென்று காணம் ஒன்பது நூறாயிரத்தொடு அரசு கட்டிற் கொடுப்ப, அவர், 'யான் இரப்ப இதனை யாள்க,' என்று அமைச்சுப் பூண்டார்."

அதிகமானுக்கு உதவியாய் வந்த சோழ பாண்டிய ரோடு அவனையும் வென்று, தகடூரைக் கைப்பற்றிய பெருஞ்சேர லிரும்பொறை என்ற சேர வேந்தனை இப் புலவர் பாடிய பத்துப் பாடல்களுக்கு அவன் தன் நாட்டில் வழங்கிய நாணயமாகிய காணத்தில் ஒன்பது லக்ஷமும் கொடுத்துத் தன் அரசிய லுரிமையையும் பரிசிலாக வழங்கித் தேவியும் தானும் இனி அரண்மனையில் இருப்பது பொருத்தமில்லையென்று வெளிப்பட்டான். அவ்வாறு வந்தவனைத் தடுத்து வணங்கி, "நான் பெற்ற அரசைத் திரும்பித் தாங்களே ஏற்றுக்கொள்ளும் வண்ணம் மிகவும் பிரார்த்திக்கின்றேன்; இவ்வளவு அன்பு பூண்டதற்காக அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்கிறேன்," என்று கூறி, அவ்வண்ணமே செய்தார் என்பதே இதனால் நாம் அறியும் வரலாறு; இப் படி இவர்க்கு அரசச் செல்வம் பெற வுரிமை யளித்த செய்யுட்களைப்பற்றி இனிச் சிறிது ஆராய்வோம்:

பதிற்றுப்பத்து எட்டாம்பத்தில் அரிசில் கிழார் அமைத்த கருத்துக்களிற் பின் வருவன சாமானியரும் அறிந்து இன்புறற் பாலனவாம்: முதற் செய்யுளில்,

"கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாரின்
அலந்தனர் பெருமநின் னுடற்றி யோரே."

என, 'நெருங்கியவரைக் கடுமையாகத் துன்புறுத்தும் இயல்புள்ள குளவிகள் மொய்த்துத் தூங்கும் அழகிய கூடுகளைக் கிளைத்து விட்ட சிறுவரைப்போலே உன்னோடு எதிர்த்தோர் மிக்க துன்பமடைந்தனர்,' என்று பொருள்படுமாறு அமைத்ததும்; இரண்டாம் செய்யுளில்,

"மன்பதை காப்ப வறிவுவலி யுறுத்து
நன்றறி யுள்ளத்துச் சான்றோ ரன்னநின்
பண்புநன் கறியார் மடம்பெரு மையின்."

என, 'உலகவுயிரைப் பாதுகாப்பதற்கேற்ற நெறிகளைத் தம் அறிவின் நுட்பத்தால் அரசர் அறிய உறுதியுறக் கூறும் நன்மையுணர்ந்த உள்ளமுடைய அமைச்சர் ஆகிய சான்றோர் போன்ற அறிவுள்ள உனது குணச்சிறப்பை உன் பகைவர் தம் அறிவின்மை மிகுதியால் அறியமாட்டார்,' என்று பொருள்படுமாறு அமைத்ததும்; மூன்றாம் செய்யுளில்,

"உரவோர் எண்ணினும் மடவோர் எண்ணினும்
பிறர்க்குநீ வாயின் அல்லது நினக்குப்
பிறருவம மாகா வொருபெரு வேந்தே!"

என அரசனைப் புகழ்ந்து, பின்னும், 'நீயே சோழனாகவும் பாண்டியனாகவும் சேரனாகவும் உள்ளாய். உனது வளம்,

ஆண்மை, கைவண்மை என்ற குணங்கள் மாந்தர் அளவிறந்தனவென்று யான் பல நாளாகச் சென்று உரைப்பவும் கேளாத சிலர் சான்றோர் உரைப்பின் அறிவர் என உள்ளத்துள்ளி என்மதி நினது புகழை அளந்துரைக்க வலியற்றிருப்பதால் யான் எவ்வாறு புகழ்வேன்?' என வருந்துகிறார் என்று பொருள்படுமாறு அமைத்ததும்; நான்காம் செய்யுளில்,

"கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
வேள்வி வேட்டனை யுயர்ந்தோர் உவப்ப."

எனச் சாஸ்திரங்களை ஆராய்ந்தார் வாய்க்கேட்டுவிரதம் ஒழுங்குற நடத்தி யாகஞ் செய்த வரலாறும்;

"எண்ணியல் முற்றி யீரறிவு புரிந்து
சால்புஞ் செம்மையும் உளப்படப் பிறவும்
காவற் கமைந்த அரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை."

என, தம் தாய்வயிற்றில் எண்ணும் இயல்புள்ள மாதம் பத்தும் நிரம்பி, இம்மை யறிவும் மறுமை யறிவும் பெற்றுச் சிறந்த ஒழுக்கமும் செவ்விய நடையும் பிறகுணங்களும்கொண்டு, காவற்றொழிற்குரிய அரசியல் நூல்களுணர்ந்த உணர்வுடைய னாகிய வலிமை சிறந்த புதல்வனைப் பெற்ற வரலாறும் விளங்க வறியப் பொருள் பொருந்த வமைத்ததும்; ஐந்தாம் செய்யுளில்,

"இரும்புலி கொன்று பெருங்களி றடூஉம்
அரும்பொறி வயமான் அனையை பல்வேற்
பொலந்தார் யானை இயல்தேர்ப் பொறைய!"

எனப் புகழ்ந்து, 'ஆகையால், உன்னை வேந்தரும் வேளிரும் பணிந்து நின் வழிப்படற்குரியர் ; பணியா ராயின், உணவுக்கும் அல்லற்படும் நிலையடைவர்,' என்று பொருள்பட அமைத்ததும்; ஆறும் செய் யுளில்,

"இரந்தோர் வாழ நல்கி யிரப்டோர்க்(கு)
ஈதல் தண்டா,"

நிலைமையைக் கண்டு உவந்து புகழ்ந்ததும்; ஏழாம் செய்யுளில், அச்சேரன் கொங்கரோடு பொருது அவ ரை வென்ற செயல் குறிப்பித்து, 'அவன் சேனை அளப் பரியது. சேனையில் உள்ள யானையே எண்ணற் கரிய வாய்ப் பசு மந்தை போன்றிருக்கும்,' எனப் புகழ்ந் ததும்; எட்டாம் செய்யுளில், தகடூர் என்ற அதிக மான் நகரை அழித்த செய்தி கூறிப் புகழ்ந்ததும்; ஒன் பதாம் செய்யுளில்,

"உயிர்போற் றலையே செருவத் தானே!
கோடைபோற் றலையே இரவலர் நடுவண்!
பெரியோர்ப் பேணிச் சிறியோரை யளித்தி."

எனப் புகழ்ந்து, பகைவரை யழிக்குமாறு அமைத்ததும்; பத்தாம் செய்யுளில்,

"பிறக்கடி யொதுங்காப் பூட்கை யொள்வாள்
ஒடிவில் தெவ்வர் எதிர்நின் றுரைஇ
இடுக திறையே புரவெதிர்ந் தோற்கென
வம்புடை வலத்தர் உயர்ந்தோர் பரவ
அனையை யாகல் மாறே."

என, வணங்கா முடியாரராய்ப் புறங்கொடா வீரராய் இருந்த பகைவரையும் வென்று திறை பெறும் பெருமையை உணர அளந்துரைத்ததும் பிறவும் உணர்ந்துணர்ந் தின்புறற் குரியனவாம்.

அரிசில் கிழார் பாடியவையெனத் தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணை யியலிலே இரண்டு செய்யுட்கள் வருகின்றன. அவற்றுள் ஒன்று தகடூர்யாத்திரையாய் இருக்கலாம் என்று பெரியோர் துணிகின்றனர்; மற்றொன்று இன்ன நூலகத்தது என்பது விளங்கவில்லை. இரண்டு செய்யுட்களும் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையைப்பற்றியவையே யென்பது தெரிகின்றது. அவை வருமாறு :

"மெய்ம்மலி மனத்தின் நம்மெதிர் நின்றோன்
அடர்வினைப் பொலிந்த சுடர்விடு பாண்டில்
கையிகந் தமரும் தையணற் புரவித்
தளையவிழ் கண்ணி யிளையோன் சீறின்
விண்ணுயர் நெடுவரை வீழ்புயல் கடுப்பத்
தண்ணறுங் கடாஅ முமிழ்ந்த வெண்கோட்
டண்ணல் யானை யெறிதலொன்றோ
மெய்ம்மலி யுவகையன் நம்மருங்கு வருதல்
கடியமை கள்ளுண் கைவல் காட்சித்
துடியன் உண்கண் நோக்கிச் சீறிய
கொலைமொழி மின்னுச்சிதர்ந் தனையதன்
வேறிரித் திட்டு நகுதலு நகுமே."

"இஃது அதிகமானாற் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதியாது சேரமான் முனைப்படை நின்றானைக்

கண்டு அரிசில் கிழார் கூறியது,'' என்பர் நச்சினார்க்கினி யர். இச்செய்யுளே தகடூர் யாத்திரையைச் சேர்ந்ததா யிருக்கலாம் என்பது சில பெரியோர் கொள்கையாம்.

இதன் கருத்து, "அரிசில் கிழார் முதலிய சில புலவர் முன்னிலையில், உயர்ந்த இலக்கணமமைந்த குதிரைகள்மீது அமர்ந்து இளங்காளைபோலத் தோன்றிய சேரமான், மழை பொழியுங்கால் அருவி பெருகியோடும் மலை யொப்ப மதம் பொழியும் யானைகள் பலவற்றைக் கொன்று, துடி முழக்கு வோனை நன்கு முழக்க உத்தரவிட்டுக் கையகத்துள்ள வேலைச் சுழற்றி நகுதலும் செய்வன்,'' என்பதாம்.

இதனால் இச்சேர வரசன், அதிகமான் படை யனைத்தையும் அதன் தலைவனாய் நின்ற பெரும்பாக்கனை யும் எதிர்த்துப் பொருது வென்று கொண்ட செய்தி யை அப்போர்க்களத்திலிருந்தே அரிசில் கிழார் கண்டு மகிழ்ந்து புகழ்ந்தனர் என்பது விளங்கும்.

" கலையெனப் பாய்ந்த மாவும் மலையென
மயங்கமர் ருழந்த யானையு மியம்படச்
சிலையலைத் துய்ந்த வயவரு மென்றிவை
பலபுறங் கண்டோர் முன்னா ளினியே
அமர்புறங் கண்ட பசும்புண் வேந்தே,
மாக்களி றுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற் றாற்றுயற் கிடப்பக்
களையாக் கழற்காற் கருங்க ணடவர்
உருகெழு வெகுளியர் செறுத்தன ரார்ப்ப
மிளைபோ யின்று நாளை நாமே
உருமிசை கொண்ட மயிர்க்கட்
டிருமுர சிரங்க வூர்கொள் குவமே.''

இச்செய்யுளைப்பற்றி நச்சினார்க்கினியர் குறிப்பு வருமாறு: "இது சேரமான், பொன் முடியாரையும் அரிசில் கிழாரையும் நோக்கித் தன் படைபட்ட தன்மை கூறக் கேட்டோர்க்கு அவர் கூறியது."

இஃது அரிசில் கிழார் பாடியதாகவே யிருக்க வேண்டும். இவ்வரலாற்றை நோக்குகையில், இதுவும் தகடூர் யாத்திரைச் செய்யுளா யிருக்கலாம் என்று ஊகிக்கலாம். இச்செய்யுட்பொருள் வருமாறு:

"மான்போலப் பாய்ந்த குதிரைகளும், மலைபோல மதங் கொண்டு போர்புரிந்த யானைகளும், போர்க்குரிய வாத்தியங் கள் முழங்க வில்வளைத்துப் போர் செய்து எஞ்சி நின்ற வீரர் களும் என்று சொல்லத் தக்க இப்படை முற்காலத்துப் பல போர்களிலே பகைவரைப் புறங் கண்டதாம். இனிப் போர் புரிந்து வென்றதால் உடம்பெல்லாம் பசும்புண் கொண்டு அம ராபரணனாய் விளங்கும் அரசே, அம்பு பட்டுக் கீழே உருண்ட தலைகள் யானைகளால் மிதிப்புண்டு மூக்கறுத்த பனை நுங்கு போலக் களமெல்லாம் சிதறிக் கிடக்க, வீரக் கழல் களையாத கால்களையுடைய போர் வீரர்கள் கோப மிக்கவராய்ப் போர் புரிந்து முழங்கலால் இன்று காவற் காட்டை யழித்து நாளை நாமே இடி முழக்கமுடைய முரசினை முழக்கி ஊர் கொள் வோம்."

இச்செய்தியும் தகடூர்ப் போரில் நிகழ்ந்ததாகிய சேரமான் வெற்றியைக் குறிப்பதாகவே இருக்க வேண் டும். பொன் முடியார் என்ற மற்றொரு புலவர் இப் பொருள்பற்றிப் பாடியிருக்கும் செய்யுட்களால் இவ் வரலாறு விளக்கமா யறியப்படும்.

இவ்வாறு எடுத்துக் காட்டிய இரண்டு செய்யுட் களும் அரிசில் கிழார் பெருஞ்சேர லிரும்பொறையின்

அரசாட்சியைப் பெற்று மறுத்து அமைச்சுத் தொழில் பூண உதவிய பதிற்றுப்பத்துச் செய்யுட்களோடு ஒத்த காலத்தே பாடப் பெற்றிருக்கவேண்டும். ஆயின், ஔவையார் என்ற புலவர் கலவியரால் மிகவும் புகழ்ந்து பாராட்டப்பெற்ற அதிகமான் நெடுமான் அஞ்சி என்ற தகடூர் இறைவன் இவ்வரலாற்றிலே கலந்திருப்பது அவனது பெருமைக்கு ஒரு குறைவையே தருகின்றது. எங்கும் வெற்றியே பெற்ற அப்பெரும்போர் வீரன் இங்குத் தோல்வியுற்றான் என்றிருப்பதைக் காட்டிலும் இப்போரிலே தகடூரையிழந்து உயிர்துறந்து வீரசொர்க்கம் அடைந்திருப்பான் என்றமைதலே சிறப்புடைத்தாம். இதனால் கபிலர், பரணர், ஔவையார், பொன்முடியார் முதலிய புலவர்கள் அரிசில் கிழார் எனும் புலவர் காலத்தவர்களாவார்கள் என்பதும் புலனாகின்றது. குறுந்தொகையில் இவர் பாடிய செய்யுள் ஒன்று உளது என்பது முன்னரே காட்டப்பட்டது. தகடூர் யாத்திரை முழுவதும் கிடைக்குமாயின், இப்புலவர் வரலாறு இன்னும் எவ்வளவு அறியப்படுமோ!

8. ஆவூர் மூலங்கிழார்

உண்மையை யுணர்த்தி யுலகையுய் விக்கும்
பண்பினிற் சிறந்த பழம்பெரும் புலவர்
ஆவூர் மூலங் கிழாரெனும்
பெரியார் புகழினைப் பேசுவம் சிறிதே.

ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் வேளாளர் என்பது அவர் பெயர்க்குப்பின் உள்ள கிழார் என்னும் பட்டத்தால் விளங்குகிறது. ஆவூர் என்பது எந்நாட்டின்கண் உள்ளது என்பது விளங்கவில்லை யாயினும், சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பானைத் தம் நாட்டவன் எனக் கருதித் கூறுவார் போலப் புகழ்ந்து வாழ்த்துவதால், இப்புலவர் சோணாட்டவராய் இருக்கக் கூடும் என்று ஒருவாறு ஊகிக்கக் கூடும். ஆகையால், இவர் பிறந்த ஆவூர் சோணாட்டின்கண்ணதாயிருக்கவேண்டும் என்று கூறலாம். இவர் இயற் பெயர் மூலன் என்பதாம். மூலன் கிழார் என்பது மூலங்கிழார் என வழக்கில் வந்தது. இவரது பிறந்த நாள் மூலமா யிருந்தது கொண்டு, இவர்க்கு இப்பெயர் வந்திருக்கவும் கூடும்.

அக்காலத்துக்கு முன் இருந்த பல புலவர் இயற்றி யிருந்த இயற்றமிழ் நூல்களையும் அரசியல் நூல்களையும் இவர் நன்கு கற்றுத் தேறி யிருந்தார். வடமொழி

வல்லார் பலரொடு பயின்று, வடநூல்களின் கருத்துக் களை இவர் நன்கு உணர்ந்திருந்தார்; சோணாட்டின் கண் இருந்த அக்காலத்துப் புலவர் பலரொடும்பயின்று பழகி, நற்குணங்கட்கெல்லாம் நிலைக் களமாக விளங் கினர். அரசரைப் பாடிப் புகழ்ந்து காலங் கழித்தற் குரிய பருவ மணுகும்வரை புலவர் பலரொடு பயின்றா ராதலால், அக்காலத்துப் புரவலருட் சிறந்தார் சில ரை இவர் பாட நேர்ந்துளது. இவர் பாடிய பாடல் கள் இந்நாள்வரை நமக்குக் கிடைப்பன புறநானூற்றில் எட்டும், அகநானூற்றில் இரண்டுமாகப் பத்துச் செய் யுட்களே. இவற்றைக் கொண்டு இவர் வரலாறு இங்கு ஒருவாறு ஆராய்ந்து எழுதப்படும்:

முதன் முதலில் இப்புலவர் குளமுற்றத்துத் துஞ் சிய கிள்ளி வளவன் என்னும் சோழவரசனைப் புகழ்ந்து பாடினர். அவனை இவர் புகழ்ந்து பாடக் காரணமாய் இருந்த, 'எம்முள்ளீர் எந்நாட்டீர்,' என்றுஅவனுரைத்த சொற்கள் இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளதும் இவ் விருவர்க்கும் நேர்ந்த பழக்கமும் இக்காலம்வரை நாம் அறியத்தக்கனவாய் உள்ளன. அச்செய்யுள் வருமாறு:

"வரைபுரையும் மழகளிற்றின்மிசை
வான் றுடைக்கும் வகையபோல
விரவுருவின கொடிநுடங்கும்
வியன்றானை விறல்வேந்தே,
நீ,உடன்றுநோக்கும்வாய் எரிதவழ
நீ,நயந்துநோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்

வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை யாகலின்
நின்னிழற் பிறந்து நின்னிழல் வளர்ந்த
எம்மள வெவனோ மற்றே யின்னிலைப்
பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
உடையோ ரீதலும் இல்லோ ரிரத்தலும்
கடவ தன்மையிற் கையற வுடைத்தென
வாண்டுச்செய் நுகர்ச்சி யீண்டுங் கூடலின்
நின்னா டுள்ளுவர் பரிசிலர்
ஒன்னார் தேஎத்தும் நின்னுடைத் தெனவே.''*

(இ-ள்) " மலை போலும் இளங்களிறுகள்மேல் ஆகாயம் அளாவும் வகையாய் அமைந்த பல நிறமுடைய கொடிகள் அசையும் பெரிய படைப்பெருக்கம் உடைய விறல்மிக்க வேந்தே, நீ சினந்து பார்க்கும்இடம் தீப்பரக்க, விரும்பி நோக்கும் இடம் பொன் பொலிய, செஞ்ஞாயிற்றின்கண்ணே நிலவு வர வேண்டினும், வெண்டிங்களில் வெயில் உண்டாக வேண்டினும், நீ வேண்டிய பொருளை உண்டாக்கும் ஆற்றல் உடையாய். ஆகையால், நினது நிழலிலே பிறந்து, நினது நிழலிலே வளர்ந்த எமது மன நினைவை அளந்துரைக்க வேண்டுமோ? வேண்டாவன்றே? இனிய நிலைமையை யுடையதாகிய பொற்பூப் பொருந்திய கற்பகச் சோலையையுடைய நல்லுலகாகிய விண்ணகம் வாழ்பவரும், தாம் முன்னே செய்த நல்வினைப் பயனை நுகர்வதல்லது, செல்வமுடையோர் வறியோர்க்கு ஈதலும், வறியோர் செல்வர்பாற் சென்று இரத்தலும் அங்கு இயலாமையால், அந்நாட்டு வாழ்க்கை வருந்தக் தக்கதே எனக் கருதி, அவ்விடத்து அநுபவிக்கும் போக போக்கியங்கள் நின்

* புறநானூறு-செய்யுள், 38.

நாடாகிய இவ்விடத்தும் சாத்தியம் ஆவதால், புலவரும் பிறருமாகிய பரிசிலர் நின்னாட்டையே நினைப்பர். அவர் உன் பகைவர் தேயத்து வாழ்வா ராயினும், அந்நாடும் உன்னுடையதேயாம் எனக் கருதி, உன் நாட்டையும் உன்னையும் நினைத்திருப்பர்."

இச்செயயுள் மூலம் நம்புலவர் வரலாற்றுக்கு ஒரு முக்கிய அமிசம் விளங்குகிறது. இவர் சோணாட்டவராய் இருக்கலாம் என்று நாம் ஊகிப்பதற்கு இங்கும் சில குறிப்புக்கள் உள்ளன.

"நின்னிழற் பிறந்து நின்னிழல் வளர்ந்த
எம்மள வெவனோ ?"

என்று இவர் கேட்டிருக்கும் கேள்வியை உற்று நோக்கின், இவர் சோழ நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர் என்பது விளங்கும். ஆகையால், ஆவூர், சோணாட்டின்கண் உள்ள ஒரு சிற்றூராகலாம் என்பதற்கு இதுவும் ஓர் ஆதாரமாம். ஆனல், அரசன் கூறிய, 'எம்முள்ளீர் எந்நாட்டீர்,' என்ற சொற்கள் ஒரு சந்தேகத்தை எழுப்ப இடந்தரும். எவ்வண்ணமெனில், அரசன், இப்புலவர் உண்மையிற்சோணாட்டகத்துப்பிறந்தவராகவே யிருப்பின், 'நீர் எமக்குரியவர்; எம் நாட்டவர்,' என அந்நியராவார் ஒருவரை அவர் பெருமை கருதித் தன்னோடு சேர்ப்பான் போலக் கூறியிருக்கவேண்டாஎன்று சிலர் நினைக்க இடமுண்டாம். இதற்குச் சமாதானமாகத் தம் நாட்டுப் பிறந்தவரையே அந்நியர் மதித்த பிறகே தாமும் மதிக்கும் நாகரிகம் உள்ள இந்நாளைய நிலையில் நாம் வரலாறுகளைக் கண்டும் கேட்டும் அறியும் நிலையில் நாம்

இருக்கின்றோ மாகையால், இப்புலவர் சோணாட்டிற் பிறந்தாரேயாயினும், பிற நாட்டுப் புலவர் பலரொடும் பழகிச் சிறந்த கீர்த்தியோடு வரவே, 'நீர் நம்மவ ரல்லரோ?' என்று அரசன் கேட்க இடம் உண்டாயிற்று என்று கூறலாம். இல்லையெனில், இப்புலவர் வாக்கில் உள்ள சில கருத்துக்கள் பொருளற்றுப்போம். இது நிற்க. இனி, இச்செய்யுளிலுள்ள சில முக்கிய விஷயங்களை ஆராய்வோம்:

அந்நாளில் அரசர்கள் தங்கள் படைகளில் யானைப் படையைப் பெரிதும் மதித்திருந்ததும், யானைகளின் மேற் கொடிகள் தூக்கிச் சென்று போர்க்களம் புகுதலும் இச்செய்யுளின் முற்பகுதியால் விளங்கும். சிறந்த வீரராகிய அரசர்கள் பிற நாட்டவரை வென்று வசப் படுத்தக் கருதுதல் இயற்கையே யென்பதும், அவ்வாறு போராடப் புகும்போது பகைவர் நாடுகளில் தீயிடுதல் முதலிய வழக்கங்கள் உடையவர்களாய் இருந்தனர் என்பதும், பணிந்து வந்து திறை யளந்த அரசர்களை ஆதரித்து அன்பு பூணும் பெருங்குணம் படைத்திருந்தனர் என்பதும் அடுத்து விளக்கப்பட்டுள்ளன.

"செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை."

என்று கூறியதால் விளங்கும் கருத்துக்கள்பல. 'பிரத்தியக்ஷத்தில் தீமை தருவனவாய்த் தோன்றுவன உன்னை யடைந்தார்க்கு நன்மையாய் முடிதலும், நன்மை தருவனவாய் இருப்பன உன்னை எதிர்த்தார்க்குத் தீமையாய்

முடிதலும் காண்போ மாகையாலும்; சூரிய வமிசத்தார் ஆளும் நாட்டில் நன்மை பரவவும், சந்திர வமிசத்தார் ஆளும் நாட்டில் தீமை வளரவும் நீ நினைத்த வண்ணம் நிறைவேற்றக்கூடியவன்என்றுகாண்போமாகையாலும் இராஜஸ தாமஸ குணங்களே மிகுந்தவர்களைச் சாத்துவிக ராக்கியும், சாத்துவிகரா யிருந்தவர்களை இராஜஸ தாமஸங்களாற் கலங்கச் செய்தும், நாடுகளின் இன்ப துன்ப நிலை மாறுபாடாகச் செய்யும் ஆற்றலுடையனுயிருத்தலைக் காண்கின்றோமாகையாலும்; நீ ஞாயிற்றில் நிலவும் திங்களில் வெயிலும் வேண்டின், விளைக்கும் ஆற்றலுடையாய்,' எனப் புகழ்ந்து, தம்மை யேற்று ஆதரித்த அரசனைச் சிறப்பித்தனர். பின்னரும், 'தேவருலக வாழ்வைக்காட்டிலும் என்னைப்போன்ற பரிசிலர்க்கு நினது நாட்டின்கண் வாழ்தலே மிக்க மகிழ்ச்சி தருவதாம்,' என்பர். அதற்குக் கூறும் காரணம் மிகவும் பாராட்டற்பாலதாம். 'தேவர், தாம் மனிதப் பிறப்பிலே செய்த புண்ணியப் பயனைத் தேவருலகில் உள்ள போகபோக்கியங்களால் அனுபவித்தல் உண்டேயன்றி, நிலவுலகத்திற்போல அங்கு இரவலரும் புரவலரும் இலராகையால், ஈந்துவக்கும் இன்பமும்பெற்றுவக்கும்இன்பமும் எத்தகையவென அவர் அறியார். எனவே, தேவருலகில் உள்ளசகல போகபோக்கியங்களும்அவற்றுக்குமேல் இவ்விரண்டு இன்பமும் உடைய சோணாடே சிறப்புடையதாம் என்று கருதிப் பரிசிலர் வாழ்வர்,' என்பர். இக்கருத்து மணிமேகலையிற் கூலவாணிகன் சாத்தனாரால் ஆபுத்திரன் வாக்கில் அமைத்துக் கூறப்பட்டிருத்தல் இங்கு நினைத்து இன்புறற்குரியதாம்.

பின்னர் அவ்வரசனால் நன்கு சம்மானிக்கப் பெற்று அவனைப் பாடிப் பரிசில் பெற்ற மாறேக்கத்து நப்பசலை யார், கோவூர் கிழார் முதலிய பல நல்லிசைப் புலவரோடு உம்பருறைபதியினும் பேரின்பம் பெறுவாராய் வாழ்ந் திருந்தனர்.

அவ்வாறு வாழ்ந்திருக்கும் காலத்தில் மற்றொரு முறை அவ்வரசனைப் புகழ்ந்து வேறோர் இனிய கவி இயற்றுவாராயினர். அச்செய்யுட் பொருள் வருமாறு:

"ஒரு பெண் யானை படியப் போதுமான சிறிய இடம் எழு ஆண்யானைகளைக் காப்பாற்றும் வளமிக்க நாடுடையாய், பெருங்குணத் தோன்றால், நீயே பிறர் காக்கும் பாவம் நிலைத்த பெரிய அரண்களைக் காவாது அழிந்து, அவ்வரசர் முடியிற் புனைந்த பசும்பொன்னால் நின் கழலுக்கழகாக வீரக்கழல் பூண்ட வல்லாளனுவாய். வெற்றியுடையாய், யாங்களே நின்னை இகழ்ந்து கூறத் துணிவோர் தலைவணங்க, நின்னைப் புகழ்ந்து பாடுவோர் மகிழ்ந்து வாழ என்றும் இன்று கண்டதுபோற் காண்போம். நீயும் எப்பொழுதும் இனிய சொல்லும் எளிய மொழியும் உடையனுருக. இதுவே நாங்கள் வேண்டுவது."

இதனால் இப்புலவர் காலத்துச் சோணாட்டில் நிலவளம் நீர்வளம் மிக்கிருந்தனவென்பதும்; பிறநாட்டு மக்களும் அறிவின் மிக்க புலவரும் வீரரும் பிறரும் குடியேறி நாட்டுள் வாழ்வார் இயல்பாய் இருத்தற் குரிய தொகையினும் மிக்கிருந்தார் என்பதும்; குடிகள், செல்வம், டடைஞர், அமைச்சர் என்னும் பல் வகை அங்கங்களும் நன்கமைய அரசன் நன்கு அரசாண்டு வந்தனன் என்பதும் விளங்கும்.எப்பொழு

தும் அரசன் பிற அரசரோடு போராடி அவர் பொருளைக் கவர்ந்து வரும் இயல்புடையனாய் இருத்தலால், அவன் படைஞரும் குடிகளும் ஒருபிடி படியும் இடம் போன்ற சிறு குடும்பத்தினராய் இருப்பினும், எழு களிறுகள் புரப்பது போலப் பெருத்த அறச் செயல் செய்ய வல்லவராய் இருந்தனர் என்பதும் அறிவித்தது கவனிக்கப்படும். புலவர்க்கு அவ்வரசன் இன்சொல் லும் நன்முகமும் உடையனாய் என்றும் ஒரே தன்மை யனாய் இருந்தான் என்பதும் இப்புலவர் அறிய வைத் தார். அரசனொருவன் நல்லவனாதலும் அல்லவனாதலும் அவனைச் சூழ்ந்திருப்போர் செயலாலே யாதலால், பல நல்லிசைப் புலவரை ஆதரித்த அவன் இத்தகைய குண மாண்புடையவனாய் இருந்தது வியப்பன்றே? அதனாலன்றோ, உண்மை யன்றிப் பிறிதொன்றும் உரைத்தறியா நாவினராகிய ஆவூர் மூலங்கிழார் போன்ற புலவர்கள் அவனைப் புகழ்ந்த வரலாறு நாம் அறியும் நிலைக்கு வந்துளது!

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடிய செய்யுள் அக்காலத்துத் தமிழ் நாட்டவர் வாழ்ந்த வாழ்வின் பெருமையை நன்கு விரித்துணர்த்தும். அது வருமாறு:

“நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநூல்
இகல்கண்டோர் மிகல்சாய்மார்

மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக,
வினைக்குவேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப்பச்சை
சுவற்பூண்ஞாண் மிசைப்பொலிய
மறங்கடிந்த வருங்கற்பின்
அறம்புகழ்ந்த வலைசூடிச்

* * *

சிலசொல்லிற் பலகூந்தனின்
நிலைக்கொத்தநின் துணைத்துணைவியர்
தமக்கமைந்த தொழில்கேட்பக்
காடென்ற நாடென்றாங்
கீரேழி னிடமுட்டாது
நீர்நாண நெய்வழங்கியும்
எண்ணாணப் பலவேட்டும்
மண்ணாணப் புகழ்பரப்பியும்
அருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் திருந்தேந்துநிலை
என்றும், காண்கதில் லம்ம யாமே குடாஅது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை யெம்மூர் ஆங்கண்
உண்டுந் தின்றும் ஊர்ந்தும் ஆடுகம்
செல்வல் அத்தை யானே செல்லாது
மழையண் ணாப்ப நீடிய நெடுவரைக்

கழைவள ரிமயம் போல
நிலீஇய ரத்தைநீ நிலமிசை யானே."*

இவ்வஞ்சிப்பா, மிகவும் இனிய நடையில் இயன்றுள தாதலால், அளவிற் சிறிது நீண்டிருப்பினும் எடுத்துக் காட்டப்பட்டது. இதன் பொருள் வருமாறு:

"உலகத்தாரால் நன்கு ஆராயப்பட்ட மிக்க நீண்ட சடையினையுடைய முதுபொருளாகிய சிவபெருமானது வாக்கை விட்டு நீங்காது, அறம் ஒன்றையே விரும்பி விவரித்த நான்கு வகைப்பட்டதும் ஆறங்கங்களால் உணரப்பட்டதும் ஆகிய பழைய நூலாகிய வேதத்திற்கு விரோத மார்க்கத்தில் உள்ள மதநூல்களைச் செய்தோர் ஆகிய புத்தர் சமணர் முதலிய புறச்சமயத்தாரது மேற்போக்கை மடக்கக் கருதி, அவர் மெய்போல் வாதிக்கும் பொய்யை ஆராய்ந்தறிந்து, அப்பொய்ப் பொருளை மெய் என்று எண்ணிவிடாமல், உண்மைப்பொருளாகிய வைதிக சாத்திரக் கருத்துக்களை அவர்களுக்கு ஏற்குமாறு விவரித்துரைத்து, இருபத்தொரு வகையாகிய யாகங்களையும் குறைவின்றிச் செய்து முடித்த புகழ் மிக்க தலைமை வாய்ந்த பெரியோர் மரபில் உள்ளவனே, நீ வேள்வித் தொழிலின் பொருட்டுப் போர்த்துக்கொள்ளும் காட்டில் வாழும் கலைமானது தோல் நினது தோளின்கண் உரிய முறையில் இடப்பட்ட பூணூலின்மீது சிறந்து தோன்றக் கொடுமை நீங்கிய பெருங்கற்பினையும் தர்மசாஸ்திரங்களாற் புகழ்ந்தோதப் பட்ட சாலகம் என்ற ஆபரணம் அணிந்து மென்மையான சொற்களையும் பல கூந்தலையும் உடைய நின்னுடைய ஆசார அனுஷ்டானங்களுக்கு ஒத்த மனமும் குணமுமுடைய நின் துணைவியாராகிய மனைவிமார் தத்தமக்கு அமைந்த ஏவல்கேட்டு வேண்டுவன செய்து நிற்க, காடென்றும் நாடென்றும் சொல்

* புறநானூறு-செய்யுள், 166.

லப்படும் அவ்விடங்களுள், காட்டுள் எழுவகைப் பசுக்களா லும், நாட்டுள் எழுவகைப் பசுக்களாலும் முட்டுப்பாடின்றி நீர் தாண செய் வழங்கியும், எண்ணிறந்த பல வேள்விகள் புரிந் தும், நிலம் இடங்கொள்ளாது பலவாகிய புகழ்பரப்பியும், அவ் வாறு பெறுதற்கரிய விளக்கமுற்ற வேள்வி முடிவாகிய பெரிய காலத்தில் விருந்தினரை அவரவர் நிலைக்கேற்றவாறு உபசரிக்கும் நினது திருந்திய மேம்பட்ட நிலையை யாங்கள் இன்று காண்பதுபோல எந்நாளும் காண்போமாக. மேற் றிசையில் பொன் வளரும் நெடிய குடக மலையில் மேகங்கள் இடிமுழங்கில் பூக்கள் பரந்து வரும் புது நீரையுடைய காவிரி யாறு உலகத்தைப் பாதுகாக்கும் குளிர்ந்த நீர்வளமுள்ள எம் ஊரில் உண்ணத்தக்கவற்றை உண்டும், தின் பண்டங்களைத் தின்றும், உயர்ந்த வாகனங்களில் ஏறியும் இன்புற வாழ்ந்து கொண்டாடுவேம். நீ மழை தலையெடுக்க உயர்ந்த நீண்ட பக்க மலைகளையுடையதாய் மூங்கில் வளரும் இமயமலைபோல நிலத் தின்மேல் அழியாது நிலை பெறுக. நான் விடை பெற்றுக் கொண்டு போய் வருகிறேன்."

இங்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களால் இப் புலவர் பெருமை விளங்குமாறு இனி விவரிப்போம்: இச்செய்யுள், ஆசார சம்பன்னனாகிய ஒரு வேதியனைப் புகழ்ந்து பாடியதாம். இப்புலவர் உண்மையே கூறுவர் என்பதற்கு ஆசார வீனனாகிய ஒரு வேதியனைப்பற்றி இவர் அகநானூற்றிலே அமைத்திருக்கும் பின் வரும் செய்யுளடிகள் தக்க சான்று பகரும்:

"வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந் தொழிந்த கொழுந்து."

(இ-ள்.) "யாகம் பண்ணாத சாமானியனாகிய ஊர்ப்பார்ப் பான் வாளாலும் அரத்தாலும் அறுத்த சங்குகளில் வளையல்

களாய் அமைந்தன போக மிஞ்சிக் கீழே சிதறிக் கிடக்கும் சங்கின் தலை."

இதனால், அக்காலத்தில், இக்காலத்திலிருப்பது போலவே சாமானியராகிய பார்ப்பார் சிலர்இருந்தனர் என்பதும், அவர்கள் சங்கு அறுத்து வளையல் செய்யும் தொழிலை உடையராயிருந்தனர் என்பதும் விளங்கும். அத்தகையவரைக் கண்டு பயின்று அவர் இயல்பை உள்ளவாறு கூறும் நம் புலவர் பெருமான், சதாசார சம்பன்னனாகிய ஒரு வேதியனைக் காணின், அவன் இயல்பையும் உயர்வு நவிற்சியின்றித் தன்மை நவிற்சியில் வைத்தே கூறுவார் என்று கருதுதற்குயாது தடை உளது? இவ்வாறு சங்கறுக்கும் பார்ப்பார் கூட்டத்துள் நக்கீரர் ஒருவராய் இருந்திருக்கலாமோ என்பது அவரைப்பற்றி வழங்கும் வரலாறுகளால் ஆராய்ந்தறிய வேண்டுவதாம். இனி இவர் சோழ நாட்டிலே பிறந்து வளர்ந்து யாகாதிகளை முறையே நிறைவேற்றிய கௌணியன் விண்ணந்தாயனைப்பற்றி என்ன கூறுகின்றார் எனக் கவனிப்போம்: அவன் கௌணியன் என்று விசேடிக்கப்படுவதால்,கௌண்டின்னியகோத்திரத்திற் பிறந்தவனாய் அறியப்படுகிறான். இதுவே, திருஞான சம்பந்தர் பிறந்த வமிசத்தின் கோத்திரம் என்பது பலரும் அறிந்ததே. விண்ணந்தாயன் என்னும் பெயர் என்ன பொருள் பற்றியதோ என்பது நன்கு விளங்கவில்லை. பதச்சேதம் செய்வதால், 'தேவ லோகத்தின் வாழ்வைத் தனக்குரிய தாய பாகமாக யாகாதி கிருதுக்கள் செய்வதால் அடைந்தவன்,' என்ற பொருள் கூறக்கூடும். விண்ணுலகத்தைத் தாவியவன் ஆகிய திரிவிக்கிரமன் என்ற திருமால் பெயருள் ஒன்றாகவும் கொள்ளலாம். ஆயினும், அஃது அறிவுடைப் புலவர்க்கு உவப்

பாயிருக்குமோ, வெறுப்பை விளைக்குமோவென ஐயுறற் குரியதாம். இது நிற்க.

அவ்விண்ணந்தாயன், சோழ நாட்டில் உள்ள பூஞ்சாற்றூரிற் பிறந்தவன் என்பதும், அவன்முன்னோர் பரம்பரைக் கிரமமாகக் குலதர்மம் பிழையாப் பெருமை படைத்திருந்தனர் என்பதும் இங்கு மேற்கொண்ட செய்யுளில் முற்பகுதியில் அழகுற விளக்கப்பட்டுள் ளன. அவர்கள் நான்கு வேதங்களும் அவற்றின் அங் கங்களும் ஓதியுணர்ந்தும் பிறர்க்குப் பயிற்றியும்பரபக்ஷ நிரசனம்செய்து ஸ்வபக்ஷ ஸ்தாபனம் செய்யத் தக்க வாறுவேதாந்த சாஸ்திரங்கள் பயின்றும், அடக்கம் பொறை முதலிய பெருங்குணங்கள் வாய்ந்தவரா யிருந்தனர்; அக்காலத்து வைதிகமதத்தை ஒடுக்குமாறு பரவிய சமண புத்த மதக் கொள்கைகளையும் பூர்வபக்ஷ மாக்குதற்கு வேண்டுமளவு நுணுகியாராய்ந்திருந்தனர். ஆனால், அக்காலத்துப் பல அறிவுடையாரும் மயங்கி அப்புறமதங்களுள் விழுந்ததுபோலத் தாமும்விழுந்து விடாமல், தம் வைதிக மதவுண்மைகளை உலகறியப் பரப்பும் திருப்பணிபூண்டிருந்தனர். கர்மகாண்டத்திலே பற்றை ஒழிப்பதே பிறமதத்தார் கொள்கையாய்இருந்த தால், தம்மைப் பார்த்துப் பிறர் பின்பற்றுமாறு வைதிக நெறிகளை ஒரு சிறிதும் வழுவாது நிஷ்டாபரர்களாய் வேதியர்க்கு விதித்த பல வகை யாகங்களும் அவர்கள் செய்தார்கள். அவற்றின் தொகை மூவேழு ஆகும். யஞ்ஞங்களின் வகை மூன்றும். அவை ஒவ்வொன்றும் எவ்வேழ் திறப்படும். ஸோம யஞ்ஞம், ஓரேழுவகை: அவை, அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்

தியம், ஷோடசி, வாஜபேயம்,அதிராத்திரம், அப்தோர்யா மம் என்பன. ஹவிர் யஞ்ஞம் ஓரேழு வகை: அவை, அக்னியாதேயம், அக்னிஹோத்திரம், தர்சபூர்ணமாஸம், நிரூடபசுபந்தம், ஆக்கிரயணம், ஸௌத்திராமணி என் பன. பாக யஞ்ஞம் ஓரேழு வகை: அவை, அஷ்டகை, ஆபார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆச்வயுஜி எனபன. இவ்வாறு மூவேழ் திறப் பட்ட யாகங்களும்அக்குடும்பத்தார் முட்டின்றி முடித் தனர். அந்த வமிசத்திலே பிறந்த விண்ணந்தாயனும், விரை யொன்று நடச் சுரை யொன்று மூளையாதவாறு போல, அதே ஆசார சீலம் உடையனாய் விளங்கினன். அதனால், அவன் இயல்பை உலகிற் குணர்த்த விரும்பிய ஆவூர் மூலங்கிழார் அவனைப்பற்றிக் கூறுகையில், உடல் கலை யுறுப்புத் தோலின் ஒளித்திடப் போர்த்து வேள் விக்கடன் இயற்றிய செய்தியும், அவன் மனைவியர் யாக பத்தினியராய் இருந்து தொழில் செய்ததும் கூறினர். சில அபூர்வ யாகங்களிலே பணிவிடை செய்தற்கு மூவர்க்குக் குறையாத பத்தினியர்வேண்டுமென்றஉண் மையை யுணர்ந்த நம்புலவர் விண்ணந்தாயன் பத்தினி மார் இயல்பை விளக்கினர்; ஆரணியப் பசுக்கள் ஏழு, கிராமப்பசுக்கள் ஏழு கொண்டு அவன் யாகம் இயற்றி யது கூறினர்; யாகத்தில் ஹோமாக்கினியில் நீரை எவ்வ ளவு அலக்ஷ்யமாய்க் கொட்டுவமோ,அதைக்காட்டிலும் அளவு கணக்கின்றி நெய்யை விட்டு ஹோமம் செய்த னன் என்று கூறுகின்றார்; அவபிருதஸ்நாந சமயத்தில் தகுதியுடையார்க்கெல்லாம் வரையாது வழங்கும் பெரு மையும் பேசினர். இவ்வாறு வாழும் வாழ்வு என்றும்

இவ்வண்ணமே யிருக்க யாம் காண்போமாக என்று கூறும் புலவர்க்கு உள்ளக் கருத்து உலகின் நலத்துக்காக நல்வினை புரியும் நாட்டமுடைய அந்தணர் வாழ்வை வாழ்த்தியவாருய் அமைந்தது. குடக மலையில் இடித்தால் காவிரியில் நீர் வரும் என்று தம் நாட்டையும் பிற நாடுகளையும் சுற்றியறிந்தவராய்ப் பேசுகின்றார். ‘காவிரி புரக்கும் நாட்டுள் எம்மூரில் நாம் என்றும்போல வாழ்ந்திருப்போம். நீயும் அழியா வாழ்வு பெறுதி.’ என்று இறுதியில் இப்புலவர் கூறிய கருத்துக்களே, இப்புலவர் சோணாட்டிற் காவிரி வளம்பெறும் கிராமங்களுள் ஒன்ருய் இருந்த ஆலூர் என்றவூரிற்பிறந்து வளர்ந்தவர் என்று அறிய வைத்தன. இச்செய்தி முன்னரே கூறப் பட்டுளது.

இத்துணை உயர்ந்த கருத்துக்களை யடக்கிச் செய்யுள் செய்த புலவர் கௌணியன் விண்ணந்தாயன்பெருமையையே கூறப் புகுந்தா ராயினும், தம் இயல்பின் பெருமையையும் பிறர் அறிய வைத்துளார் என்பது நுட்பமாய் ஆராய்வார் அறிய லாவதே.

இப்புலவர் வாழ்ந்த காலத்தில் அரசனாய் இருந்த கிள்ளி வளவன் தலைமையின்கீழ்ச்சோணாட்டில்வாழ்ந்த குடிகள் தத்தமக்குரிய இம்மை மறுமைக் கடன்களை நன்கு கழித்து, அமைதியுற வாழ்ந்தனர். கல்வியும் கேள்வியும் நன்கு பரவி யிருந்தன. சிறு கிராமத்திலே வாழ்ந்திருந்த வேளாளப் புலவராகிய மூலங்கிழார், வேதங்கள், வேதாங்கங்கள், கர்ம காண்டம், ஞான காண்டம், பிற மதக் கொள்கைகள், யாகாதி கர்மாக்கள் இயற்றும் முறை, இயற்றி நலம்புரிய வுரியார்

இயல்பு முதலிய பல அருங்கருத்துக்களையும் தம் நுண்ணறிவாலும், கல்விப் பயிற்சியாலும், கேள்வியாலும் அறிந்திருந்தார்; அவரவர்க்குரிய வர்ணாச்சிரமத் தருமங்களை அனுசரித்து வாழ்பவர் சிறப்பினையும், அவ்வாறு வாழாதவர் இழிவையும் அறிந்திருந்தார்; தமது தமிழ்க் கல்விப்பெருமையால் உலகம் புகழ வாழ்க்கையோடு உயர்ந்தோர் உயர்வையும் தாழ்ந்தோர்தாழ்வையும் எவர்க்கும் எதற்கும் அஞ்சாது எடுத்துரைக்கும் வாக்கு வளமும் மனவுரனும் பெற்றிருந்தார். இவர் பாடியருளிய இச்செய்யுள் கிடையாதிருக்குமேல், நம் தமிழ் நாட்டில் ஆயிரத்தெண்ணூறு வருடங்களின் முன்பு, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகை வருணத்தவரும் ஒருவர்க்கொருவர் உதவியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்த நம் சரித்திரவுண்மைப் பெருமையை நாம் அறியக் கூடுமோ? எக்குடிப்பிறப்பினும், யாவரேயாயினும், அக்குடியிற் கற்றோரையே பாராட்டும் உண்மைப் பெருமை நம் நாட்டில் எக்காலத்திலும் உள்ள உண்மைப் பெருமையன்றோ? உயர்வும் இழிவும் பதவியாலும் பிறப்பாலும் அன்றி, அறிவாலும் உண்மைப் பெருமையாலுமே வருகின்றன என்பதே இக்காலத்தார் பலரும் விளம்பரம் செய்யும் கொள்கைகளாமாகையால், அக்காலத்திலும் இவ்வுண்மை கருதப்பட்டது என்பதை ஒரு குலத்திற் பிறந்த இருவரை இருவேறு விதமாகப் பாடி உண்மை விளக்கிய நம் புலவர் வரலாற்றால் அன்றி வேறு எதனால் அறியக்கூடும்? கபிலர் பாரியின்பொருட்டு உயிரைக் கொடுத்ததும், இங்கே காட்டிய வரலாறும் இவ்வுண்மையை விளக்கப் போதிய ஆதாரங்களாம்.

மல்லி கிழான் காரியாதி என்ற வேளாளனை இப்புலவர்பாடிய ஒரு பாடலும், பாண்டியன் கீரஞ்சாத்தன் என்பானைப்பாடிய ஒருபாடலும் இனி இங்குச் சிறிது ஆராயப்படும்: மல்லி கிழான் காரியாதி என்ற பெயர் மல்லி என்ற ஊர்க்குரியவனாகிய காரி ஆதி என்பான் என்று பொருள் தரலாம். அந்த ஆதி யென்பவன் குட நாட்டினன்; புலவர்க்கும் பாணர்க்கும் அவர் வேண்டுவன கொடுக்கும் தன்மையுடையான்; ஆனால், சிறந்த செல்வமும் பரந்த நாடும் உடையனல்லன்; அக்காரணத்தால், அவரவர் வருங்காலத்தில் தன்னிடம் இருப்பதை மனமுவந்து கொடுத்து மகிழ்வித்து அனுப்பும் இயல்புடையனாயிருந்தான். பொய்யறியா நாவினராகிய ஆவூர் மூலங்கிழார் ஒரு நாள் அவன் பெருமையைப் பிறரால் அறிந்து, தாம் அதனை நேரிற் கண்டு இன்புறக் கருதி, அவனிடம் சென்றார். சென்ற காலையில் அவ்வேளாளச் செல்வன், வேடர்கொணர்ந்து கொடுத்த பன்றி இறைச்சியைக் கலந்து சமைத்த வெண்சோற்றுக் கட்டியைப் பெரிய பனையோலைக் குடையிலே அங்கு வந்த எல்லார்க்கும் ஒப்பப் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் அவ்வாறே உண்டிருந்தான். அதுவும் காலைவேளையில் நடந்த விருந்தாயிருந்தது. அக்காட்சியைக் கண்டதும், அவன் இயற்கைச் சிறப்பைப் புகழ்ந்துபாட இவர்க்கு எண்ணமுண்டாயது. ஆதலின், இவர் பின்வரும் கருத்தமைந்த செய்யுளால் அவனை அங்குப் புகழ்ந்து பாடினர்:

"ஒளி விளங்கும் வாளைச் சுமந்த அரசர்களது பெரிய நகரங்களிலே உள்ள அவர்கள் அரமனைகளில் கண் ஒளி கெடப் பலகாட்காத்திருந்து, வாடிச் சமயம்பார்த்து அவர்களைப்பாடிப்

பெற்ற பரிசிலாகிய பொன்னணிந்த யானை, உரியவராயின் எவரும் உள்ளேபுக வழியுடைத்தாய், போர் என்றால் சந்திரனும் உள்ளே நுழைய இயலாத யந்திரச் சிறுவழிகளையுடைய தாய், ஒருவர்க்கொருவர் கள்ளைக் கொடுத்துக்கொண்டு, ஒன்றற்கொன்று அருகில் உள்ள சிறிய பல அரண்களில் இருந்து கள்ளை நிரம்பக்குடித்துக் காலங்கழித்துப் பிறகு செருக்கினால் விடாய் மிகுந்து புளிச்சுவையை விரும்பிய ஆண்மக்கள் மதத்தால் சிவந்த கண்களோடு களாப்பழம் துடரிப்பழம் முதலியவற்றைத் தின்று அமையாது சிறுமணற் குன்றுகளில் ஏறிக் கருநாவற் பழத்தைப் பறித்துண்ணும் வாழ்வுடையதாய், காடுகள் அடர்ந்ததாய் உள்ள ஆதி என்ற பெயரினன் ஊரிலே மறவர் கொணர்ந்த பன்றித்தசையின் நிணமிக்க புதிய வெண் சோற்றுக் கட்டியை எல்லோர்க்கும் ஒப்பக்கொடுத்துப் பெரும் பனைக் குடையில் இருந்துண்ணும் விடியற்காலச் சிறுக்கு நிகராகாது."

அரசரால் கொடுக்கப்பட்ட யானைப் பரிசில் ஆதியினுடன் இருந்துண்ணும் காலைச் சிற்றுண்டிக்கு நிகராகாது என்ற கருத்தின் நயம் பாராட்டுதற் குரியது. அக்காலத்துச் சிறு தலைவர்களும் தம் நாடுகளைக் காவல் செய்தற்குப் பொறிகளை அமைத்த சிறிய வாயில்கள் தத்தம் அரண்களில் அமைக்க வேண்டியிருந்த தென்பதும், கள்ளைக் குடித்து மயங்கினோர் புளித்த பொருளில் விருப்பம் கொள்வர் என்பதும், களாப்பழம் துடரிப்பழம் நாவற்பழம் என்ற சிறிது துவர்ப்பும் புளிப்பும் கலந்த பழங்களே கள்ளின் மதத்தை அடக்கக் கட்குடியரால் உபயோகிக்கப்படும் என்பதும், பனையோலையால் சிறிய உண் கலங்கள் செய்து உபயோகிக்கும் வழக்கம் அன்று தொட்டே இந்நாட்டில் உண்டு

என்பதும் இச்செய்யுளால் நாம் அறியும் அருங் கருத்துக்களாம்.

பாண்டியன் கீரன் சாத்தன் என்பவன், பாண்டிய மன்னன் ஆதரவு பெற்று, அவனிடம் படைத் தொழிலிற் சிறந்திருந்த கீரன் என்ற ஒரு வீரன் மகனாகிய சாத்தன் என்ற பெயருடையனாவன். அவன் ஒரு சிறந்த போர் வீரன் என்பதை நம் புலவர் பாடிய செய்யுள் நன்கு விளக்கும். அச்செய்யுளில் அவன் இயல்பினை விளக்கும் அடிகள் பின் வருவனவாம்:

"மணல்மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணா ராயினும் தன்னொடு சூளுற்
றுண்மெனு விரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்."

என்று, 'புது மணல் பரப்பிய முற்றத்தில் அவன் இருக்கும்போது வந்த பெரியோர், பசி யின்மையால் அங்கு ஒன்றும் உண்ண விரும்பா ராயினும், தான் உண்ணும் அளவு விரைவு முதலியன பற்றிச் சூளுரைத்து, அவர்களையும் உண்ணுமாறு பிரார்த்திக்கும் இயல்புடைய பெரும்புகழுள்ள சாத்தன்,' எனப் பொருள் தருமாறு அமைத்ததும்; 'ஈண்டோ வின்சாயலனே,' என, 'இங்கு எம்போல்வாரை ஆதரிக்கும் அவசரத்தில் இன்முகமும் நன் சொல்லும் உபகார குணமும் உடையவனே,' என்று புகழ்ந்ததும்; 'ஆயினும், அவன் போரகத்தில் இருக்கும் நிலையைக் கூறுவேன்,' என்று தொடங்கிப் பின்வருமாறு புகழ்ந்ததும் ஆராய்ந் தின்புறத் தக்கன.

"வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பிற்

கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர்
அஞ்சி நீக்குங் காலை
ஏம மாகத் தான்முந் துறுமே."*

(இ - ள்) "பகைவர் படைக்கலங்கள் மயங்கும் அச்சந் தரும் போரில், முன்னே தாம் உள்ளூரிலே கள்ளின்கலம் கையுடையராய்க் கூறிய சபதங்களை மறந்து புறங் கொடுக்கும் சிறுமையுடையாரை, அவர் அஞ்சி நீங்கும் சமயத்தில் அவர்க்குக் காவலாகத் தான் முன் நின்று தூண்டுவன்."

இதனால், சாத்தன் என்பானிடம் இருந்த ஓர் உயர்ந்த குணம் உலகறிய விளக்கப்பட்டது. அக்காலத்துப் போர் வீரர்கள், "யாம் இன்ன போரில் இன்னது செய்வோம்; தவறுவோமாயின், இன்னர் ஆவோம்," என்று சபதம் கூறுகையில் வீர பானமாகக் கையில் கட்கலம் வைத்து நின்று வீர மொழி கூறிப் பிறகு அதைக் குடிக்கும் வழக்கம் உடையராய் இருந்தனரென்பது இச்செய்யுளால் அறியப்படுவது. இவ்வாறு சபதங் கூறியதை மறந்தும் எதிரிகளின் எறி படைகளுக்கு அஞ்சிப் புறங்கொடுப்பார் உளராயின், அவர்களைப் பின்னிருந்து ஊக்காமல், தாமே முன் சென்று உற்சாகப்படுத்தும் இயல்பு பெரிய வீரரிடமிருந்தது என்பதும் இதனால் விளங்கும்.

புலவர் வரலாற்றிற்கு இச்செய்யுளில் நாம் அறியும் குறிப்பு, அவ்வருங்குணத்துப் பெருந்தோன்றல் பாண்டியன் கீரஞ்சாத்தன் என்பான் வலிந்து சூள்

* புறநானூறு—செய்யுள், 178.

உரைத்து விருந்திட உண்டு மகிழ்ந்த சான்றோர்களில் இவரும் ஒருவராய் இருந்து, அவன் செய்த போர்களில் இரண்டொன்றைக் கண்ணாற் கண்டு, உண்மை உலகு அறிய வைத்தனர் என்பதே.

மேலே காட்டிய பல செய்யுட்களால் நம் புலவரது உண்மைப் பெருமை உலகறிய விளங்கிய அக்காலத்திலே, இவர் ஒரு நாள் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்பானைப் புகழ்ந்து பரிசில் பெற வந்தார். இவரது பெருமையைப் பலரால் அறிந்திருந்தும், அவன் எக்காரணத்தாலோ உடனே பரிசில் தந்து அனுப்பாது, சிறிது காலம் நீட்டித்தான். அது கண்ட புலவர் மனம் சிறிது வருந்தினர்; அதனால், பின் வருமாறு பாடி, அவனுக்கு அறிவு புகட்டினர்:

" ஒல்லுவ தோல்லு மென்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே;
ஒல்லா தோல்லு மென்றலும் ஒல்லுவ
தில்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் அத்தை;
அனைத்தா கியரினி யிதுவே; எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம் அதனால்
நோயில ராகநின் புதல்வர்; யானும்
வெயிலென முனியேன்; பனியென மடியேன்;
கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதல்

மேல்லியற் குறுமகள் உள்ளிச்
செல்வ லத்தை ; சிறக்கநின் னுளே."*

(இ-ள்.) "தம்மாற் கொடுக்க வியலும் பொருளை இய லும் என்று சொல்லிக் கொடுத்தலும், யாவர்க்கும் தம்மாற் கொடுக்கவியலாத பொருளை இல்லையென்று சொல்லி மறுத் தலுமாகிய இரண்டும் தத்தம் செயலுக்கும் இயல்புக்கும் பொருந்திய நட்பின்பாற் பட்டனவாம்; ஆனால், தம்மால் பிறர்க்குக் கொடுக்க வியலாத பொருளை இயலும் என்று கூறி ஏமாற்றலும், தம்மாற் கொடுக்க வியல்வதையும் கொடுக்க மறுத்தலும் என்ற இவ்விரண்டும் விரைவிலே இரவலரை வருத்துவதோடன்றிக் கொடுக்கத் தக்க நிலையில் உள்ளாரது புகழ் அழிதற்கு வாயில்களுமாம்; அவ்வாறு இருப்பதால், நீ எம்பொருட்டு இதுவரை செய்த செயலும் இப்படியாம். எங் குடியில் பிறந்தார் எவரும் இதுவரை காணாத இச்சிறுமையை இன்று இங்குக் கண்டோம்; எமக்கு நீ செய்திட்ட இத்தீங்கி னால், உன் பிள்ளைகள் நோயின்றி வாழ்வாராக. யானும், வெயி லென்று வெறுக்காமலும், பனியென்று மன மடியாமலும், இதுகான்வரை போகாதிருந்ததால், கல்லால் செய்தமைத்த பொருள் போன்ற என்வறுமையின் மிகுதியால்காற்றைமறைக் கக் கட்டப்பட்ட என் மனைக்கண் கர்ணல்லது வேறு பொரு ளற்ற கற்பினையும் ஒளி பொருந்திய நுதலினையும் மெல்லிய சாயலையும் உடைய என் மனைவியை நினைந்தபோவேன். நின் ஆயுள் மிகுவதாக."

இச்செய்யுள் இப்புலவர் வரலாற்றோடு இவர்பெரு மையையும் நன்கு விளக்குவதாம், எவ்வாறெனில், இச் செய்யுளின் பிற்பகுதி இவரது வாழ்வின் தன்மையை உள்ளபடி விளக்குவதாம். இப்புலவர் பெருமான் இக்

---

* புறநானூறு—செய்யுள், 196.

னன்மாறனைப் பாடும் முன்பு பலரைப் பாடிப் பரிசில் பெற்றிருப்பினும், அவ்வக் காலங்களிற் பெற்ற செல்வத்தை உரியவர்க்கும் பிறர்க்கும் உதவி, அந்நெறியில் இல்லறம் நடாத்தி, இன்புற்றுவாழும் இயல்புடையராத லால்,வறுமைக்கே கொள்கலனுயிருந்தார். இயற்றமிழ்க் கல்வியும் அறநூலுணர்ச்சியும் உலகு மதிக்கும் புகழும் படைத்த புலவருட் சிறந்தவர்களையே வறுமைப் பிணி பற்றும் இயல்புடைத்து என்பது பண்டை வரலாறுகள் பலவற்றாலும் அறிந்ததே. வறுமை பிறரை யடைந்தால் அவர் தாங்கலாகாது அழிந்துபடுவர் என்பது திருவுள்ளத்துக்கொண்டே இறைவர் அதனை எந்நாட்டகத்தும் சான்ற புலவரையே பற்றி வாழவைத்துளார். அவ்வாறு வந்த வறுமையில் இவரைப்பற்றியது கல்லாற் சமைத்ததுபோல உறுதியாய் எளிதில் நீங்கிவிடாததாய் இருந்தது. இவர் வாழும் மனை, மனையென்ற பெயர்க்கே தகுதியற்றதாய் இருந்தது. அதனால், அதனைத் தம் அருமைத் திருவாக்கால்' வளிமறை' என்று கூறினர்.வாடையும் சூறுவளியும் வீசும் காலத்தில் அவை உடம்பிலே மோதாவண்ணம் சிறிது மறைந்திருக்க நாற்புறங்களிலும் சிறு சுவர்கள் உள்ள சிறுகுடிசையாயிருந்து சூரிய சந்திரரும் மழையும் தாராளமாய்ச் சஞ்சரித்து வர இடம் பெற்றிருந்தாலன்றி, அம்மனை வளிமறையென்ற பெயர்க்கு உரியதாகாது. அத்தகைய மனைக்கு விளக்கமாய் வாழ்ந்த இவர் மனைவியாரோ, புலவர் உள்ளக் கருத்துக்கிசைய ஒழுகும் ஒழுக்கம் உடைய கற்பரசியார். குடும்பத்தார் காப்பின் பொருட்டுத் தம் தலைவர் படும்பாடு அறிந்த அவ்வம்மையார், தம் உடம்பில் அணி

தற்குரிய பல வகை ஆபரணங்களையும் கணவனிடம் தந்து, அவற்றை விற்றும் அழித்தும் இல்லறம் நடத்த இயைந்திருந்தார். அதனால், தம்தலைவராலேயே 'நாணல தில்லாக்கற்பின் வாணுதல் மெல்லியற்குறுமகள்' என்று புகழப்பட்டார். 'நாண்' என்ற பூணும், 'கற்பு' என்ற உடையுமேயுடையராய் அவர்வாழ்ந்து, பிற எத்தகைய வேடங்களும் இன்றியே மனவமைதியோடு இருந்தது இதனால் விளங்கும். கந்தையுடையும் கஞ்சியூணும் எஞ்சியிருந்தன கொண்டே வாழ்ந்துவந்த இத்தகையபெண்ணரசியார் வாழ்ந்த பெருமையாலன்றோ இன்றளவும் நம் நாடு தன் பண்டை நாகரிகம் இழவாது வாழ்ந்து வருகின்றது! ஆவூர் மூலங்கிழார் மனைக்கு விளக்கமாயிருந்த அப்பெண்மணிக்கு விளக்கமாகத்தோன்றிய தகை சால்புதல்வரைப்பற்றிப் பிறகு கூறுவோம். இப்புலவர் பெருமான் நன்மாறனுக்கு அறிவுறுத்திய நீதிகள் உலக முள்ளளவும் தமிழர்க்கு அழியாப் புகழ் பயப்பன.

"இசைவ கொடுப்பதூஉம் இல்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கை; அஃ தன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணு னாயின்,
நசைகொன்றான் செல்லுலக மில்."*

என்ற செய்யுளில் வந்துள்ள நீதியே இங்கு விளக்கமாக இப்புலவரால் கூறப்பட்டது. அதற்குமேல் தம் குலத்திலே பிறந்தார் எவரும் இவ்வாறு அவமதிக்கப் பட்டதில்லை; காணாத ஒரு செய்தியைத் தாம் காண நேரிட்டது என்று கூறினர். "யான் வெயிலும் பனியும் பாராது வந்து இரப்பவும் நீ இரங்கா யாகையால்,

* பழமொழி நானூறு—செய்யுள், 225.

7743

நினக்கும் நின் புதல்வர்க்கும் என்ன தீங்கு நேருமோ! அறிகிலேன். ஆயினும், என் மனமார நின் புதல்வர்க்கு ஒரு கேடு வருக எனவும் நினக்கு வாழ்வு குறைக வெனவும் நான் கருதிலேன். நீ செய்த இத்தீவினைப் பயன். உன்னையும் உன் மக்களையும் சுட்டு உடுப்பதும் உண்பதும் இன்றி ஆக்கி விடுமே என்று கவல்கின்றேன்,'' என்ற கருத்துக்களை அடங்கிக் கூறியிருப்பது பாராட்டற்குரியது.

"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தான்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
டரிவதூஉஞ் சான்றோர் கடன்.''*

என்பராகையால், இப்புலவர் உண்மைச் சிறப்பு இவற்றால் நன்கு விளங்கும். இதற்கு வேறு வகையாகக் குறிப்புப் பொருள் கொள்ளலாம் என இளம்பூரணர் என்னும் உரையாசிரியர் கருதுவாராயினும், அவ்வாறு கருதுவது மூலங்கிழார் உள்ளத்தில் அழுக்கு இருந்தது என்று கருத இடங் கொடுப்பதாதலால், இத்தகைய அருங்குணத்துப் பெரும்புலவர் அவர் கருதுமாறு, நின் நாள் கழிக என்று உள்ளத்தடைத்தும், நின் புதல்வர் நோயுளராக என்று உள்ளத்தடைத்தும் அக்குறிப்புத் தோன்ற வெளிப்படையில் அதற்கு மாறாகிய ஒன்றைக் கூறினர் என்று கொள்ளுதல் பொருந்தாது என்றே கருதவேண்டும். அரச நீதியும், வள்ளன்மை முறையும், புலமைப் பெருமையும், மனை நலமும், வறுமையால் வாடா வாழ்வும், பிறவும்

* நாலடியார்—செய்யுள், 58.

விளங்க அமைந்த இச்செய்யுள் நம் பண்டையோர் வாழ்க்கைப் பெருமையைப் பலவாறாக விளக்கும்.

மேலே காட்டிய பல செய்யுட்களிலும் இருந்து ஆவூர் மூலங்கிழார் பெருமையெல்லாம் அறிந்தோமாயினும், புரவலர் இன்னார் என அறியவியலாது புறநானூற்றில் அமைந்துள்ள வேறிரண்டு செய்யுட்களிலும் இவர் இயல் சிறிது விளங்கும். ஆகையால், அவை இங்கு வேண்டுமளவு சுருக்கமாய் ஆராயப்படும். ஒரு செய்யுளில், தம்மை முன்பு ஆதரித்திருந்த ஒரு வள்ளல் இறந்ததால், அவன் மனை பாழ்பட்டுக் கிடப்பது கண்டு மனமுருகிய செய்தி வருகிறது. அச்செய்யுளின் இறுதியில் அமைந்த கருத்தே இங்கு எடுத்துக்கொள்ளப் படும்:

"நடுகல் ஆகிய
வென்வேல் விடலை யின்மையிற் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉப் போலப்
புல்லென் றனையாற் பல்லணி யிழந்தே."*

இதனால் அறிய வைத்த பொருள் விளக்கம் வருமாறு:

"என் அன்புக்குரியனாய், வந்தாரை யெல்லாம் ஆதரிக்கும் வள்ளலாய் வாழ்ந்திருந்த உனது தலைவன், வெற்றி வேல் தாங்கிய காளை, பகைஞரோடு போர் புரிந்து புறங் கொடாது நின்று விழுப்புண் பட்டும் போர்க்களத்தில் உயிர் கொடுத்து, வீரசொர்க்கம் புகுந்து, நிலத்தகத்துத் தன்னை முன்னறிந்தார் மலர்கள் தூவி வணங்குமாறு நடுகல் ஆகி நின்றானாகலின்,

* புறநானூறு—செய்யுள், 261.

அவனை யிழந்த மனையே, நீ மிகவும் வருந்தி, மயிர் கொய்து மழித்த நிலையோடு கைம்மை நிலையடைந்து கலங்கிய மங்கல மிழந்த அவன் மனைவிபோல, உனக்குரிய பல வகை அணி களையு மிழந்து பொலிவழிந்திருக்கின்றாய்."

இவ்வாறு ஆகிய மனை முன்னிருந்த நிலையை இச் செய்யுளில் இவர் கூறுவது மிகவும் நயமுடைத்து: "அந்தோ! எந்தை அடையாப் பேரில், வரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம் முன்பு கண்டனன். அக்கண் சோர்க. இப்பொழுது காணும் காட்சி முன்னே தன் தலைவனோடு இருந்து எல்லா வாழ்வும் பெற்று வருவாரை ஆதரித்திருந்த மங்கல மனைத்தலைவி யொருத்தி தன் தலைவனையும் வாழ்வையும் இழந்து, வைதவ்யக் கோலத்தோடு இருப்பதைக்காண்பதுபோல இருக்கின்றது."

இவ்வாறு இப்புலவர் கூறுவதால் இன்பக் காட்சி யையும் துன்பக் காட்சியையும் கண்ணிற் காண்பது போலப் பிறர் உணருமாறு வருணிக்கத் தக்க ஆற்றல் படைத்த இவர் பெருமை விளக்கமுறும். உலக வாழ் வும் தாழ்வும் கண்ணுற் கண்டு, அவற்றின் நிலையா மையை எவரும் அறிய அறிவிப்பதற்கு இவ்வாறு பாட வல்ல பாவலரன்றிப் பிறர் எவரே உரியராவர்? இவரது வரலாற்றில் இச்செய்யுள் இவர் பிறர் இன்பங் கண்டு மகிழ்ந்து துன்பம் கண்டு இரங்கும் இயல்புடையரா யிருந்ததை விளக்கும்.

'பல்சான்றீரே,'* என்று தொடங்கும் ஒரு செய்யு ளில் பண்டைக் காலத்துத் தமிழ் நாட்டுப் போர் வீரர்,

* புறநானூறு—செய்யுள், 301.

பெருமை விளங்கச் சில கருத்துக்கள் அமைத்திருக்கின்றார். அவற்றுள் இரண்டொன்று எடுத்துக் காட்டப்படும் :

போர்க்களத்திலே பாசறைக்கருகில் இடப்பட்டிருக்கும் முள் வேலியைப் பிறர் எவரும் அணுகித் தொடங்கூடாமையால், குமரிமகளிர் கூந்தல் நிகர்க்கும் என்பர்; தம்மாற் புகழப்படும் வீரன் ஒருவனாய் நின்று பலரை வெல்லும் ஆற்றல் உடையனும் எனவும், தன் கை வேலை யானைமேல் எறிவனேயன்றித் தன்னை யெதிர்த்து வந்து படைக்கலங்களைத் தொட்டவராயினும் தொடாதவராயினும் பிறர் எவர்மேலும் எறியானென்றும் கூறுவர்; அரசன் ஊரும் யானையே அவன் கை வேலுக்கு இலக்காம். இவ்வாறெல்லாம் நல்லிசைப் புலவராகிய ஆவூர் மூலங்கிழாரால் புகழப்பட்டவன் இன்னவனென்பது விளங்கவில்லை.

இத்துணைப் புகழ்க்குரியராயிருந்த பெரும்புலவர் குமாரர், பெருந்தலைச் சாத்தனார் என்பவர் ஆவர். இளங்குமணனால் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போய் வாழுமாறு செய்யப்பெற்ற குமணன் என்ற வள்ளல் வரலாறு உலகறியச் செய்த பெரியோர்களில் இவர் ஒருவர். இவரே தம்பியிடம் பொய்த் தலை செய்வித்துக் காட்டி, அக்கொடியவன் மனம் இரங்கச்செய்து, பெருவள்ளலாகிய தமையன் குமணனை வாழ வைத்தவர். இவர் வரலாற்றில் இன்னும் அநேக அருஞ்செய்திகள் உளவாமாகையால், அவை பிறிதோரிடத்தில் தனியே விளக்கி யெழுதப்படும்.

மூலங்கிழார், இறைவ ரருட்செயலால் வறுமை வாழ்வே வாழ்ந்தன ராயினும், நிறை மனத்தினராய், அறிவு நிரம்பிய மைந்தரைப் பெற்ற மகிழ்ச்சியிலே பின்னும் சிலகாலம் உலகில் வாழ்ந்திருந்து, அழியா வாழ்வாகிய பேரின்ப நிலை அடைந்தார்.

"மகன்றந்தைக் காற்றும் உதவி இவன்றந்தை
யென்னோற்றான் கொல்எனும் சொல்."

என்ற தமிழ் மறையைக் கடைப்பிடித்த பெருந்தலைச் சாத்தனர், தம் தந்தையார் சென்ற நெறியைப் பின்பற்றி, இளம்பருவத்திலேயே இல்லறப் பொறை தாங்கி வாழ்ந்து, தந்தையார் தந்த வறுமை வாழ்வை மகிழ்வோடு நடத்தினர்.

'அமிர்த குண போதினி' பிரஸ், சென்னை.